விலை ரூபா 20 பக்கங்கள் 32

உதயன்

சுடர் 31 கதிர் 065 வள்ளுவர் ஆண்டு 2047 தை 16, சனிக்கிழமை 30.01.2016

## சங்குப்பிட்டி பாலத்தில் நேற்றிரவு விபத்து ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், ஜன.30
பூநகரி, சங்குப்பிட்டி பாலத்தில் நேற்றிரவு 10.00 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சாவ பக். 29

முச்சந்தி முரளி



இந்த வருஷமாவது உருப்படியா செய்யப் பாருங்கோ

# வடக்கில் 51 வீதமானோர் சமுர்த்தி கோருகின்றனர்

## யாழ். மாவட்டத்தில் மட்டும் 89,126 குடும்பங்கள் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜனவரி 30
வடக்கு மாகாணத்தின் ஒட்டுமொத்த சனத்தொகையின் அரைவாசி சதவீதத்திற்கும் மேற்பட்டோர் தமக்கு சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும் என்று விண்ணப்பித்துள்ளனர்.
சமுர்த்தி மீளாய்வு தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் வடக்கு மாகாணத்தின் மொத்த சனத்தொகையின் 51.8 சதவீதமான மக்கள் தமக்கு சமுர்த்தி நிவாரணம் வேண்டும் என்று கோரியுள்ளனர்.
வறுமைக்கு உட்பட்டோரின் வாழ்வாதார மேம்பாட்டுக்காகச் சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்படும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 3 ஆயிரத்து 500 ரூபாவுக்குக் குறைவான மாதாந்த வருமானம் உடைய குடும்பங்களே சமுர்த்தி நிவாரணம் பெற்றுக்கொள்வதற்கு தகுதியானவர்கள் என்று, சமுர்த்தி நிவாரணம் வழங்கல் தொடர்பான சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
சமுர்த்தி நிவாரணம் பக். 28

## மோதிவிட்டு தப்பிய வாகனம்; மூதாட்டி சாவு

யாழ்ப்பாணம், ஜன. 30
மீசாலையில் வீதியைக் கடக்கமுற்பட்ட வயோதிபப் பெண் வாகனத்தால் மோதுண்டு கை, கால் முறிந்த நிலையில் சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார்.
அவரை மோதிய வாகனம் தப்பிச் சென்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவத்தில் மீசாலை மேற்கைச் சேர்ந்த சர்வானந்தம் வள்ளிப்பிள்ளை பக். 27

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை இடையில் நிறுத்திய முதலமைச்சர்

### முக்கிய விடயங்கள் பல ஆராயப்படவில்லை

கிளிநொச்சி, ஜன. 30
வடக்கு முதலமைச்சர் வேறு ஒரு கூட்டத்துக்குச் செல்லவேண்டும் என்று கூறியதால் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று முழுமையாக ஆராயப்படாமல் இடை நடுவில் நிறுத்தப்பட்டது.
நேற்றுமுற்பகல் 10மணியளவில் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத்தலைவர்களான வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் மற்றும் இ.அங்கஜன் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.
குறித்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் ஆரம்பத்தில் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாக 25 விடயங்கள் ஆராயப்பட வேண்டியுள்ளதாக வடக்கு முதல்வரினால் சுட்டிக்காட்டப்பட்டு, முழுமையாக நிறைவு பெற வேண்டுமானால் திணைக்களத் தலைவர்கள் குறுகிய நேரத்தில் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது.
இதன்போது விவசாயம். நீர்ப்பாசனம். கால்நடை அபிவிருத்தி. சுகாதாரம், கல்வி, உள்ளூராட்சி, பக். 28

## எரிபொருள் விலை குறைப்பு முடிவை கைவிட்டது அரசு

கொழும்பு, ஜன. 30
சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை மாற்றத்துக்கு ஏற்ப எரிபொருளின் விலையை நிர்ணயிக்கும் விலைச் சூத்திரம் உருவாக்கும் திட்டத்தை அரசு கைவிட்டுள்ளதாகக் கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
இதனால் சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்துள்ள போதும் அதன் பலனை மக்கள் அனுபவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.
சர்வதேச சந்தையில் ஏற்படும் எரிபொருள் பக். 28

## சுதந்திர தின நிகழ்வில் தேசிய கீதம் தமிழிலும்

### அமைச்சரவைத் துணைக்குழு தீர்மானம்

கொழும்பு, ஜன. 30
எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள 68 ஆவது சுதந்திர தின நிகழ்வுகளின்போது, தேசிய கீதத்தை தமிழ் – சிங்கள மொழிகளில் பாட வேண்டும் என்று, அமைச்சரவை துணைக்குழு தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
'சுதந்திர தின வைபவத்தின்போது தேசிய கீதத்தைச் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பாடவேண்டும் என்று அமைச்சரவை துணைக் குழு தீர்மானித்துள்ளது. நாடாளுமன்றத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைச்சரவைத் துணைக் குழுவினால் எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானம் தொடர்பில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது' என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார். பக். 28

## பிரிட்டனின் போர்க்கப்பலும் இலங்கைக்கு



கொழும்பு, ஜன. 30
பிரிட்டனின் எச்.எம்.எஸ். டிபென்டர் என்ற அதிநவீன போர்க்கப்பல் இன்று சனிக்கிழமை இலங்கைக்கு வருகின்றது.
இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.
பிரிட்டனின் எச்.எம்.எஸ். டிபென்டர் என்ற போர்க் கப்பல் எரிபொருள் நிரப்புவது உட்பட ஏனைய நடவடிக்கைகளுக்காகக் கொழும்புத் துறைமுகத்துக்குப் பயணம் மேற்கொண்ட பின்னர், மீண்டும் இந்து சமுத்திரத்தில் தனது கடமைகளை நிறைவேற்றப் புறப்படும்.
கடந்த நான்கு வருட காலப்பகுதியில் பிரிட்டனின் கடற்படையின் கப்பலொன்று இலங்கைக்கு பயணம் பக். 28

## குருநாகலில் தமிழ்ச் சிறுமி கொலை

கொழும்பு, ஜன. 30
குருநாகல் மாவட்டம், மாவத்தகம, தல்கஸ்பிட்டிய பிரதேசத்தில் வீடொன்றிலிருந்து 13 வயது தமிழ்ச் சிறுமி கொலைசெய்யப்பட்டுள்ள நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
குறித்த வீட்டிலுள்ள சமையலறையிலிருந்து நேற்று முன்தினம் இரவு சிறுமியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.
சடலமாக மீட்கப்பட்டவர் காளிமுத்து விஜயகுமாரி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.
கொலைசெய்யப்பட்ட சிறுமியின் வீட்டிலிருந்து சுமார் பக். 28

## திருமலை இரகசிய முகாம்கள்; விசாரணைக்கு நீதிபதி பணிப்பு

கொழும்பு, ஜன.30
திருகோணமலைக் கடற்படைத் தளத்திலுள்ள நிலத்தின்கீழான இரகசியத் தடுப்பு முகாம்களில் மனித எலும்புக்கூடுகள் காணப்பட்டமை குறித்து விசாரணைகளை முன்னெடுக்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கொழும்பு பிரதான நீதிவான் ஜிகான் பிலப்பிட்டிய உத்தரவிட்டுள்ளார்.
காணாமற்போனோர் குறித்து விசாரணை செய்யும் சர்வதேச குழுவொன்று கிழக்கு மாகாணத்துக்குச் சென்றவேளையே இந்த எலும்புக்கூடுகளைப் பார்த்துள்ளனர்.
இதேவேளை, குறிப்பிட்ட நிலத்தின்கீழான சிறைச்சாலையில் 6021 என்ற இலக்கத்தைக் கொண்ட டொல்பின் மிட்சுபிசி ரக வாகனத்தை தாங்கள் கண்டுபிடித்துள்ளதாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.
குறிப்பிட்ட வாகனம் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட வேளை பக். 28

## நடப்பு நிதியாண்டுத் திட்டங்கள் அடையாளமிட்டது வடக்கு அரசு

யாழ்ப்பாணம், ஜன. 30
வடக்கு அரசினால் நடப்பு நிதியாண்டில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் அடையாளப்படுத்தப்பட்டு, நிதி ஆணைக்குழுவின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, பிரதம செயலாளர் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
கொழும்பு அரசினால் நடப்பு நிதியாண்டுக்கு வடக்கு அரசுக்கு 3 ஆயிரத்து 199 மில் பக். 27

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
இன்று இரண்டாம் நாள்
JITF 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வடக்கின் நுழைவு வாயில் நேற்று கோலாகல ஆரம்பம்




யாழ்ப்பாணம், ஜன. 30
வடக்கின் நூழைவுவாயில் என்று வர்ணிக்கப்படும், யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நேற்று வடக்கு மாகாண ஆளுநர் பளிக்காரவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து மூன்று நாள்களுக்கு நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் மு.ப 10 மணிக்குத் தலைவர் கே.விக்னேஸ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது முதன்மை விருந்தினர்களை வரவேற்கும் வகையில் யாழ் சுண்டுக்குளி மாணவியரின் வரவேற்பு நடனம் நடைபெற்றது.

ஆரம்பநிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட வடமாகாண ஆளுநர்,

7ஆவது முறையாக நடைபெறும் இந்தக் கண்காட்சியால் வடக்கில் பல்வேறு தொழில் முயற்சிகள் உருவாகியுள்ளன. வெளிநாட்டு தொழில் நிறுவனங்களும், வெளி மாவட்ட தொழில் நிறுவனங்களும் இந்த வர்த்தகக் கண்காட்சியில் பங்குபற்றித் தமது செயற்பாடுகளையும், முதலீட்டு முயற்சிகளையும் மேற்கொள்வதால் வடக்கின் அபிவிருத்தி முன்னேற்றமும், நாட்டின் பொருளாதாரத் திட்டமும் வளர்ச்சி அடைகின்றது. வடக்கின் வேலைவாய்புக்கள் இல்லாது இருக்கும் பல இளைஞர்களுக்கு வேலைவாய்புக்களை அதிகளவில் வழங்கக் கூடியதும், சமூக பொருளாதாரத்தில் பல மாறுதல்களை ஏற்படுத்தும் முக்கிய சக்தியாகவும் யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி மிளிர்கிறது. எனவே எதிர்வரும் காலங்களில் இவைமேலும் வலுவுள்ளதாக அமைக்கப்பட வேண்டும் – என்றார்.

முன்னதாகக் கருத்து வெளியிட்ட இந்தியத் துணைத் தூதுவர் ஆ. நட ராஜன்,

நீண்டகாலம் போரால் பாதிக்கப்பட்ட வடக்கில் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவது என்பது மிகவும் முக்கியமான ஒன்றாக அமைந்துள்ளது. இவற்றுக்குப் பெரும் உதவியாகவும், மக்களுக்கு தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான உந்துதலை வழங்கும் செயற்பாடாகவும், யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி அமைந்துள்ளது. இந்திய அரசு வடக்கில் இதுவரை காலமும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. எதிர்வரும் காலங்களில் இந்தச் செயற்பாடுகள் மேலும் விரிவடையும். காங்கேசன்துறைத் துறைமுகம், பலாலி விமானநிலையம், மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளில் பெண் தெழில் முயற்சியாளருக்கான தொழிற் பயிற்சிக்கூடம் என்பவற்றை அமைப்பது தொடர்பான திட்டங்கள் எம்மிடம் உள்ளன. அத்துடன் யாழ் போதனா வைத்தியசாலையின் அபிவிருத்தி, யாழ்.மாவட்டத்துக்கான கலாசார மையத்தை அமைப்பது தொடர்பான திட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும் வடக்கின் ஆக்கபூர்வமான வளர்ச்சிப் பணிக்கு உதவு வதில் இந்தியா முக்கிய கவனம் செலுத்தும். அத்துடன் வடக்கில் தொழில் முனைபவர்கள், முதலீட்டாளர்கள் என்போர் தமிழ் நாட்டுடன் தொடர்பைப் பெற்று தொழில்சார் செயற்பாடுகளை மேற்கொள்ளும் பட்சத்தில் வடக்கு வாழ் தமிழ் உறவுகளுக்கும், தமிழ்நாட்டு உறவுகளுக்கும் இடையிலான இணைப்புக்கள் மேலும் வலுவுடையதாக அமையும். இந்த செயல் முறைக்கான அடித்தளத்தை அமைக்கும் வகையில் யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி அமைந்துள்ளது – என்றார்.

இந்தக் கண்காட்சியில் தொழில் முயற்சிகள் தொடர்பாக ஆராய்வதற்கு 56 பேர் கொண்ட தூதுக்குழு இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளதுடன் வடக்கு மற்றும் இலங்கையின் பகுதிகளைச் சேர்ந்த வர்த்தகர்களின் கண்காட்சிக் கூடங்கள், அமைச்சுக்களின் கண்காட்சிக் கூடங்கள், கல்வி தொடர்பான கண்காட்சிக்கூடங்கள் உள்ளிட்ட 300இற்கு மேற்பட்ட தொழில் சார் கண்காட்சிக்கூடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இன்றும் நாளையும் இரவுநேர இசை நிகழ்வுகளும், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளதுடன் சுற்றுலா தொடர்பான செயற்பாடுகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஆரம்ப நிகழ்வில் வட மாகாண ஆளுநர் பளிகக்கார, மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன், பாகிஸ்தான் துணைத் தூதுவர் கைபிரேல் உசையின், மற்றும் யாழ் வர்த்தகக் கண்காட்சியின் வர்த்தகம் கைத்தொழில் அபிவிருத்தி சார் செயற்பாட்டாளர்களான சாரதா எம்.டி.சில்வா, கௌசல் விக்கிரமசிங்க, அர்ஜுன் தர்மதாச, கே.பூரணச்சந்திரன், என். ஜெகதீசன், சாரு சேனாரத்தின ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(த-ரி5-20)

## 14 பவுண் நகை , பணம் அதிகாலையில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன. 30
யன்னல் பிரித்து வீடு புகுந்த திருடர்கள் 14 பவுண் நகைகள், 40 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். இராமநாதன் வீதி கலட்டியில் நேற்று அதிகாலை 2 மணிக்கும் 4 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளது.

இதன்போது வீட்டு அலுமாரியில் இருந்த நகைகள் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வழக்குப் பதிவு செய்து விசாரணைகளை மேற்கொண்ட குற்றத்தடுப்புப் பொலிஸார், திருடர்கள் விட்டுச் சென்ற தடயப் பொருள்களை மீட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

அவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் எனவும் பொலிஸார் மேலும் கூறினர்.

(த-107)

## நீரிறைக்கும் இயந்திரம் திருடியதாக ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 30
தோட்டக் காணியில் பூட்டியிருந்த நீர் இறைக்கும் 21 ஆயிரம் ரூபா பெறுமதியான இயந்திரத்தைத் திருடிய சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அச்செழு அம்மன் கோயில் பகுதியில் உள்ள தோட்டக் கிணறு ஒன்றில் கடந்த புதன்கிழமை இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததால் அது பற்றிய விசாரணையில் குறித்த நபர் கைது செய்யப் பட்டுள்ளார்.

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த 56 வயதுடைய சந்தேக நபர் ஒருவரே நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டதாக அச்சுவேலி பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஜெயசிங்க தெரிவித்தார்.

(த-4-107)

# சகல தரப்பினரின் ஆலோசனையின் பின்னரே சட்டமா அதிபர் நியமனம்

## பிரதமர் ரணில் நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.30
அனைத்து கட்சிகள் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஆலோசனைகளைப் பெற்ற பின்னரே புதிய சட்டமா அதிபர் நியமிக்கப்படுவார் என அரசு தெரிவித்துள்ளது.

நேற்று நாடாளுமன்றில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தத் தகவலை வெளியிட்டார்.

19ஆவது திருத்தத்துக்கு முரணாக புதிய சட்டமா அதிபர் நியமனம் செயன்முறை இடம்பெறுவதாக எதிர்க்கட்சி உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் பிரதமர் மேலும் கூறுகையில்,

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்மற்றும் பதவிக்குப் பரிந்துரைக்கப்படுபவர்களுடன் கலந்துரையாடிய பின்னரே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதிய சட்டாமா அதிபருக்கான நியமனத்தை வழங்குவார்.

இதன்போது, சட்டமா அதிபர் நியமனம் தொடர்பில் சபாநாயகர் உறுதியளிக்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன வலியுறுத்தினார்.

(த-வ)

## செய்மதி அலைபேசியுடன் ஒருவர் கைதாகி விசாரணை

யாழ்ப்பாணம், ஜன. 30
செய்மதித் தொழில் நுட்பத்தில் இயங்கும் அலைபேசி மற்றும் முகத்தை மூடி மறைக்கும் தலைக் கவசம் என்பனவற்றுடன் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வழிப்பறி, கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

யாழ். பல்கலைகழக வீதியில் வைத்துக் குறித்த நபர் கைது செய்யப் பட்டுள்ளார். ஓட்டுமடம் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

அவர் பயன்படுத்தும் அலைபேசி தமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும், அவர் முகத்தை மறைக்கும் தலைக்கவசம் அணிந்து சென்றமையும் தமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியதாகவும், அதனால் குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டுள்ளாரா என்று விசாரிக்க அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணை மேற்கொண்டுவருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(த-4-107)

# கிராம அலுவலர் கடத்தல்; ஐவருக்கும் மறியல் நீடிப்பு

சாவகச்சேரி ஜன.30
கடமைக்குச் சென்ற இளம் பெண் கிராம அலுவலரைத் தாக்கிவிட்டு அவரை வாகனத்தில் கடத்திச் சென்ற ஐந்து பேரையும் எதிர்வரும் பத்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 27 ஆம் திகதி உத்தரவிடப்பட்டது.

கடந்த வாரம் தனது சகோதரனுடன் கடமைக்குச் சென்ற பெண் கிராம அலுவலரை வழிமறித்த மோட்டார் சைக்கிளில் வந்தோர் கிராம அலுவலரையும் அவரது சகோதரனையும் தாக்கிவிட்டு வாகனத்தில் கிராம அலுவலரைக் கடத்திச் சென்றனர்.

கடத்திச் சென்றவேளையில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூவரும் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். மறுநாள் பொலிஸாரால் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது இந்த மூவரையும் கடந்த 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான் அன்றைய தினம் அடையாள அணிவகுப்பு நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இருதினங்களின் பின்னர் சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்பட்ட மேலும் இருவரைக் கொடிகாமம் பொலிஸார் கைதுசெய்து கடந்த ஞாயிற்றுக்கிழமை நீதிவானிடம் முற்படுத்தினர். அவர்களையும் 27 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு முன்னைய மூவருடன் இவர்களையும் அடையாள அணிவகுப்பில் இணைத்துக்கொள்ளுமாறும் உத்தரவிட்டார்.

இந்த ஐவரும் கடந்த 27 ஆம் திகதி பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றுக்கு கொண்டு வரப்பட்டனர். அடையாள அணிவகுப்புக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் சாட்சியொருவர் நீதிமன்றுக்கு வருகை தராததால் வழக்கை விசாரித்த நீதிவான் ஐவரையும் பெப்ரவரி பத்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருமிநாசினியை அருந்திய இரண்டு வயதுக் குழந்தை

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, ஜன.30
இரண்டு வயது குழந்தை நஞ்சருந்திய நிலையில், நேற்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் கிளிநொச்சி மாவட்டம் ஜெயபுரத்தைச் சேர்ந்த கௌசிகா என்ற இரண்டு வயதுக் குழந்தையே நஞ்சருந்திய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது , ஜெயபுரத்தில் பேத்தியாரின் பராமரிப்பில் வாழும் குறித்த குழந்தை, அயல் வீட்டுக்குச் சென்ற சமயம் தோட்டத்துக்கு விசுறும் கிருமிநாசினியை அருந்தியுள்ளது எனத் தெரிவித்தே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட குழந்தை அருந்தியதாகக் கூறப்படும் கிருமிநாசினியின் போத்தலும் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட போதிலும் குழந்தையுடன் பேத்தியார் மட்டுமே வைத்தியசாலைக்கு சமுகமளித்திருந்தார். குழந்தையின் தாயார் தொடர்பில் மாறுபட்ட தகவல்களையும் வழங்கியுள்ளார்.

இதேவேளை குழந்தையின் உடல்நிலை தொடர்ந்தும் மோசமான நிலையில் காணப்பட்டதனால் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

(வ-101,21)

# ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சை விண்ணப்பங்கள் கோரல்

கொழும்பு, ஜன.30
எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் நாளை மறுதினம்திங்கட்கிழமை முதல்ஏற்றுக்கொள்ளப்படும் எனப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை குறித்த விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள் ளப்படும் எனவும் பரீட்சை கள் திணைக்களம்குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி ஆரம் பமாகி ஓகஸ்ட் 27 ஆம் திகதி வரை நடைபெறுமென பரீட்சைகள் திணைக்களம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-வ)

## ஒருங்கிணைப்பு கூட்டம் நாளை

வலி. தென்மேற்குச் சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டம் இணைத் தலைவர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என சண்டி லிப்பாய் வலி.தென் மேற்குப் பிரதேச செயலர் யு. யசோதா தெரிவித்துள்ளார்.

(த)

உடனடி வேலை
ஸ்ரான்லி கல்லூரிக்கு அருகில் இயங்கும் வைத்திய நிலையத்துக்கு தாதி உத்தியோகத்தர் / தாதி பயிலுனர் மருத்துவர் உதவியாளராகத் தேவை. ஆங்கில அறிவு முக்கியமானது. சுயவிவரக் கோவை அனுப்பவேண்டிய முகவரி.
விள.இல.5087, c/o உதயன்
இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கார் விற்பனைக்கு
தொடர்புகளுக்கு: 0777 130 839
64-XXXX டீசல் கார்
(மிக்சுயி லான்சர்)
A/C விற்பனைக்கு உண்டு.

ALL OUT
Pest control service
கறையான் தொல்லையா?



உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்து கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்
தொடர்புகளுக்கு:
ந. ரூபகாந்த்
077 151 5897, 021 499 3200

NPK கணினித் திருத்தம்
எந்த இடமாக இருந்தாலும் வீடுகளுக்கு வந்து உடனடியாக திருத்தித்தரப்படும்.
எந்த ஒரு உபகரணங்களுக்கும் 2 வருட உத்தரவாதம் தரப்படும்.
தொடர்பு: 0777 064 151

LAPTOP மலிவு விற்பனை



DELL LAPTOP
CORE 2 Duo
(2GB, 80GB, WIFI, SKYPE)
19,750/= மட்டுமே
(ONE YEAR WARRANTY)
ST.ANTONY'S
187, KKS ROAD,
JAFFNA TOWN.
021 222 4865
075 069 8608

"சானியா கேபல் கெயர்"
262 - செம்மணி வீதி, நாயன்மார்கட்டு
ஆயுள்வேத வைத்தியசாலை
கோடைகால ஸ்பெசல்
* கருமை நிறநீக்கம் உட்பட வெயிலினால் ஏற்படும் கரும்படிவு, கருந்திட்டுக்கள், கருவளையம், முகப்பருக்கள் மற்றும் உதட்டுக்கருமை போன்றவற்றிற்கான சிகிச்சைகள்.
* தலைமுடி சார்ந்த சிகிச்சைகள்
* உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல்
(முற்பதிவு அவசியம்)
தொடர்புக்கு: 0777 351954

லக்கின
இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 29.01.2016
வெற்றி எண் 1935
சிவப்பு
வெற்றி இலக்கங்கள்
23 31 52 54
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 5,001,760/-
Web: www.dlb.lk
1919

நியத்த ஜய
432
29-01-2016
நீலம்
10 19 24 54 L
எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ. 10,256,640/-
Web: www.dlb.lk
1919

பதவி வெற்றிடம்
✔ ரொட்டி தயாரிப்பாளர் (கொத்து, கிழங்கு ரொட்டி, மற்றும் ரொட்டி சம்பந்தமான ஏனையவை)
✔ மதிய உணவு தயாரிப்பாளர் (யாழ்ப்பாண உணவு வகை)
✔ இந்திய உணவு வகைகள் தயாரிப்பாளர் (தோசை, இட்லி,வடை)
✔ உணவு பரிமாறுபவர்கள்
✔ பாத்திரம் கழுவுபவர்கள்
✔ சமையல் உதவியாளர்
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
தர்மினி ஹொட்டல்
1037 K.K.S. வீதி, யாழ்ப்பாணம். T.P: 0779812808, 0770782375

Study Medicine
MBBS
Approved by Sri Lankan Medical Council
UK, ECFMG-USA , IMED, WHO & UNESCO
* Riga Strands University - Latvia
* International Medical University - Malaysia
* Manipal University - India / Malaysia
* Segi University - Malaysia
* Sichuan University - China
* China Medical University - China
* Tongji University - China
* Guangxi University - China
* Zhengzhou University - China
* Ningbo University - China
* Gomel State Medical University - Belarus
* Vitebsk State Medical University - Belarus



Admission Open for the Year 2016
Limited Seats are Available
iCS Study Overseas
107, B-1/1 Galle Road, Colombo 06
Appointments
077 3013060

பாராட்டி வாழ்த்துகின்றோம்



தேசிய சேமிப்பு வங்கியில்
35 வருடங்கள் சேவையாற்றி
இன்று தனது 60 ஆவது வயதில்
ஓய்வுபெறும் எமது கிளை முகாமையாளர்
திரு. எஸ்.எவ். செசாரியஸ்
அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில்
சீரும் சிறப்புமாக குடும்பத்துடன் நீடூழி வாழ
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஊழியர் நலன்புரி சங்கம்
தேசிய சேமிப்பு வங்கி
யாழ். மேற்தரக் கிளை.
Best Wishes NSB

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்
Spoken English with Grammar - Quick Learning Course 1½ Months
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன் கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.
இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
Diploma In English 2 Months
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.
★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
★ எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
★ Excellent Teacher's Panel & Individual Attention
★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புகள்
06.02.2016 காலை 10.00, மாலை 2.30 ஆரம்பமாகின்றது
Batches Start On
01.02.2016 @10.00am
03.02.2016 @ 9.00am
08.02.2016 @10.00am
10.02.2016 @ 9.00am
12.02.2016 @ 9.00am
British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), 077 0365728
Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550
HotLine(S)
0777585913,
0777222422

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா தமிழ்ச் சங்கத்தின் கவிதை நூல் வெளியீடு நாளை

யாழ்ப்பாணம், ஜன. 30

வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்தும் சேமமடுவூர் சிவகேசவனின் "ஈழக் கவிஞனின் சங்கற்பம்" என்னும் கவிதை நூல் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா தமிழ்ச் சங்கத்தின் ஸ்தாபகர் தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் இடம் பெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா, வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் ஆகியோரும் கலந்துகொள்ள வுள்ளனர்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தாய் வாழ்த்தை திருமதி. தாட்சாயினி கணேசநாதனும், வரவேற்புரையை நூலாசிரியரும் தொடர்ந்து ஆசியுரையை வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய அதிபர் சு.அமிர்தலிங்கமும் வாழ்த்துரை களை வவுனியா தமிழ்ச் சங்கத்தின் தலைவர் எஸ்.என்.ஜி. நாதன், படைப்பாளிகள் உலகம் அமைப்பின் ஸ்தாபகர் ஐங்கரன் கதிர்காமநாதன் ஆகியோர் நிகழ்த்துவர். தொடக்கவுரையை வவுனியா ஆதிவிநாயகராலய பரிபாலன சபையின் செயலர் சிவகஜேந்திரகுமார் வழங்குவார். தலைமையுரையைத் தொடர்ந்துநூல்வெளியீடு இடம்பெறும். வெளியீட்டுரையை தமிழ்ச்சுடர்வன்னியூர் செந்தூரன் நிகழ்த்துவார். முதல் மற்றும் சிறப்புப் பிரதிகள் வழங்க லையடுத்து நூல் நயவுரையை தமிழ் மணி கே.கே. அருந்தவராஜா (மேழிக்குமரன்) நிகழ்த்துவார்.

(கு)





Ministry of Skills Development and Vocational Training

german cooperation
DEUTSCHE ZUSAMMENARBEIT

In cooperation with

**உங்கள் எதிர்காலத்தை தொழிற்கல்வியினூடாக வளப்படுத்திக் கொள்ளுங்கள்.**

கிளிநொச்சியிலுள்ள தேசிய பயிலுனர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் பயிற்சி நிலையத்தில் இணைந்து தொழிற்பயிற்சி ஒன்றினைப் பெற்றுக்கொள்வதனூடாக சிறந்தொரு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**தொழில்துறை மின்னியலாளர் (Industrial electrician)-NVQ level- 4**

மேற்குறிப்பிட்ட தொழிற்பயிற்சியானது ஆரம்பமாகவுள்ளதால் ஆர்வமுள்ள இருபாலாரும் நேர்முகத்தேர்வொன்றிற்காக சமுகளிக்கும்படி கேட்டுகொள்ளபடுகின்றார்கள்.

**நேர்முகத் தேர்வு: 01.02.2016 மற்றும் 02.02.2016**
(எதிர்வரும் திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமை)

**இடம்: NAITA பயிற்சி நிலையம், A9 வீதி, ஆனந்தபுரம் கிளிநொச்சி.**

**ஆவணங்கள்:**
1. அடையாள அட்டை
2. பாடசாலை சான்றிதழ்கள்

**கிடைக்கக்கூடிய நன்மைகள்**

1. கற்கும்போது போக்குவரத்துக்கான பருவகால சீட்டுக்கள்.
2. இலங்கையின் முன்னணி நிறுவனங்களில் உள்ளகபயிற்சிகள்.
3. சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்பயிற்சி சான்றிதழ்.

**மேலதிக விவரங்களுக்கு: தொ.பே-0212285615**

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

**செய்து கொடுக்கப்படும்**
சிறந்த வேலையாள்களால் மாபிள் வேலை செய்து தரப்படும்.
1சதுர அடி 45/=
(68438) (14,15)
தொடர்பு: நிமல் நெல்லியடி
076 902 1524

Special Introductory offers




carlton DUNLOP SPORT SG RS molten For the real game
From Distributor for Jaffna District
**யாழகம்**
No. 568,
Hospital Road,
Jaffna

**வீடு வாடகைக்கு** 077 082 2846, 077 272 0561
உரும்பிராய், கோப்பாய் வீதியில் மூன்று அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.
(68400)(14,15)

**மணமக்கள் தேவை**

* 1987 இல் பிறந்த 8இல் செவ்வாய் 27 ½ பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற எக்கவுண்டனாக பணிபுரியும் மணமகளுக்கு Bsc எக்கவுண்டன் மணமகன் தேவை.
* 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 23 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற MBBS டாக்டர் மணமகளுக்கு எக்கவுண்டன் இஞ்சினியர் மணமகன் தேவை.
* 74 இல் பிறந்த 1இல் செவ்வாய் 80பாவமுடைய அரசநிறுவனத்தில் பணிபுரியும் பட்டதாரி மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 83 இல் பிறந்த 4இல் சூரியனும் செவ்வாயும் 30பாவமுடைய Msc இஞ்சினியருக்கு ஆசிரியை மணமகள் தேவை.
* 84 இல் பிறந்த 1 இல் செவ்வாய் 73 பாவமுடைய சிவில் இஞ்சினியர் மணமகனுக்கு BSc இற்கு மேல் படித்த மணமகள் தேவை.

077 607 0862

**விற்பனைக்கு** தொடர்பு: 077 837 6620
ஒருநாள் நல்லின ஊர்க்கோழிக்குஞ்சுகள் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டவை. முற்பதிவுகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.
விலை ரூ 90/=

**காணி விற்பனைக்கு** 077 775 5175
யாழ்ப்பாணம், ஈச்சமோட்டை துரையப்பா என்னும் முகவரியில் மூன்று பரப்புள்ள இரண்டு காணிகள் (6பரப்பு) விற்பனைக்கு உள்ளன.
**தரகர்கள் தேவையில்லை.**
(68382)(14,15)

**தேவை**
* சிட்டை எழுதுநர் (கொம்பியூட்டரில்)
* உணவு பரிமாறுவோர்

31.01.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கும் 11 மணிக்குமிடையில் இருபாலாரும் நேரில் தொடர்பு கொள்ளவும்.
(68416) (14,15)
நித்தியபவன்
330 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**மணமகள் தேவை** 077 807 0567
1985 உத்தராடம் 3ஆம் கால், இந்து கௌரவ, அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு அரச உத்தியோகம் புரியும் மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
**(ஆசிரியர் தொழிலை மேற்கொள்ளும் பெண் விரும்பத்தக்கது)**
(68382)(14,15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளைக் காணவில்லை என 26 வருடங்களின் பின் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 30
1990 ஆம் ஆண்டு தனது இரண்டு பிள்ளைகள் காணாமற் போனமை தொடர்பில் தாய் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் 26 வருடங்களின் பின்னர் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்துள்ளார்.
மானிப்பாய், சாவல்கட்டுப் பகுதியைச் சேர்ந்த தாய் ஒருவரே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார்.
1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெயர்ந்து கொட்டடி பகுதியில் வசித்து வந்தபோது ஒரு பிள்ளை அதே வருடம் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதியும், மற்றையவர் டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதியை அண்மித்த காலப் பகுதியிலும் காணாமற்போயுள்ளதாக அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.
அது குறித்து விசாரணை செய்து தனது பிள்ளைகளைப் பெற்றுத் தருமாறு அவர் கோரியுள்ளார்.
காணாமற்போனோர் விவகாரம் சூடு பிடித்துள்ள நிலையில், காணாமற்போனவர்களை மீட்டுத்தருமாறும், காணாமற்போனவர்களைக் கண்டறியுமாறும் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இவ்வாறு புதியதொரு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (த-107)

# முதியோர் மாதாந்த ஒன்றுகூடல் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 30
இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழக வடமாகாண அமையம் நடத்தும் முதியோர் மாதாந்த ஒன்றுகூடல் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்த ஒன்றுகூடலில் அரச திணைக்களங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள், கூட்டுறவுச்சங்கங்களின் ஓய்வூதியர்களும் அவர்களின் குடும்பங்கள் சார்ந்த முதியோர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.
வரவேற்புரையை இணைச் செயலாளர் வீ.ஸ்ரீசக்திவேலும் தலைமையுரையை தலைவர் க. கணேசமூர்த்தியும் நிகழ்த்தவுள்ளனர்.
இந்த நிகழ்வில் கழகத்தின் முதியோர் பத்திரிகையின் 3ஆவது வெளியீடும் இடம்பெறவுள்ளது. ஆய்வுரையை சுகவாழ்க்கை பத்திரிகை ஆசிரியர் உடல், உள, சமூக மேம்பாடு வழிகாட்டுநர் கா. வைத்தீஸ்வரனும், சிறப்புரையை மூத்த பிரஜைகளின் உளநல ஆலோசகர் கோகிலா மகேந்திரனும், நன்றியுரையை பொருளாளர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கமும் இணைச் செயலாளர் க. கமலசேகரமும் நிகழ்த்தவுள்ளனர். (த)

# மகாத்மா காந்தியின் சிரார்த்ததினம் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 30
அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினால் மகாத்மா காந்தியின் 68 ஆவது சிரார்த்ததினம் இன்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது என காந்தி சேவா சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி தெரிவித்துள்ளார்.
மாலை 4 மணிக்கு யாழ். வைத்தியசாலை வீதியிலுள்ள காந்தியின் திருவுருவச் சிலையடியில் பிரார்த்தனை, மலர்மாலை அணிவித்தல், மலரஞ்சலி என்பன நடைபெற்று சங்கப் பணிமனையில் அஞ்சலிக்கூட்டமும் இடம்பெறும்.
இந்த நிகழ்வுக்கு தமிழ்நாடு இயற்கை மருத்து சங்கத்தின் இணைச்செயலாளர் எம்.எஸ். தேவதாஸ்காந்தி கலந்து சிறப்பிக்கவுள்ளார். (த)

# அதிகாலை ஓடு பிரித்து தொலைக்காட்சி திருட்டு

அதிகாலை வீடு புகுந்த திருடர்கள் அங்கிருந்த 35ஆயிரம் ரூபா பெறுமதியான எல்.சீ.டி தொலைக்காட்சியைத் திருடிச் சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம், சப்பல் வீதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்றுமுன்தினம் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.
வீட்டில் உள்ள அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த நேரம் கூரை பிரித்து இறங்கிய திருடர்கள் இதனைத் திருடியுள்ளனர்.திருட்டு தொடர்பில் வீட்டு உரிமையாளர் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.
இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-107)

# துண்டி இந்து மயானத்துக்கு செல்லும் வீதி திருத்தப்படும்

யாழ்ப்பாணம்,ஜன.29
கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு செல்லும் வீதி விரைவில் புனரமைக்கப்படும் என்று யாழ்.மாநகரசபை மன்றத்தின் ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்தார்.
மயானத்துக்குச் செல்லும் வீதி பலத்த சேதமுற்றுக் காணப்படுகின்றது. இதனால் சடலங்களை இந்த வீதியால் கொண்டு செல்வதில் மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர். அத்துடன் மாரி காலத்தில் வீதியில் வெள்ளம் அதிகளவில் தேங்கிக் காணப்படுகின்றது.
இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு மயானப் பரிபாலன சபை பலதடவைகள் மாநகராட்சி மன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது.
இது தொடர்பாக மாநகர ஆணையாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, வீதி புனரமைப்புத் தொடர்பான எந்தவித கோரிக்கையும் விடப்படவில்லை. ஆயினும் மயான வீதி ஆகையால் மக்களின் வசதி கருதி அது விரைவில் புனரமைக்கப்படும் என்றும் தெரிவித்தார். (த-17)

# போக்குவரத்து விதிமுறைகளை மீறிய நால்வருக்கு 17,000 அபராதம்

யாழ்ப்பாணம், ஜன. 30
போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 4 பேருக்கு 17ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது மல்லாகம் நீதிமன்று.
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இடங்களில் வைத்து குறித்த 4 பேரும் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் மல்லாகம் நீதிமன்ற மேலதிக நீதிவான் ரீ.கருணாகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.
சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை மற்றும்மதுபோதையில் இருந்தமை, பொலிஸ் சமிக்ஞையை மீறியமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் அச்சுவேலி மேற்கு கைத்தொழில் பேட்டை பகுதியைச் சேர்ந்த சாரதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதன்போது அவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய இருவருக்கு 5 ஆயிரம் ரூபாவும், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி ஆபத்தான முறையில், பொலிஸ் சமிக்ஞையை மீறிச் சென்றவருக்கு 2 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது. (த-107)

# வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக கல்லூரியில் புதியமாணவர்களைஇணைப்பது தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்று இல. 29 பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள கல்லூரியில் எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது என அதன் பணிப்பாளர் யூட் வோல்ரன் தெரிவித்துள்ளார்.
இந்தக் கருத்தரங்கில் ஜீ.சி.ஈ. உயர்தரத்தில் 3 பாடங்களிலும் சித்தியடைந்த அல்லது தேசிய தொழில் தகைமை மட்டம் - 4 இனைப் பூர்த்தி செய்த ஆர்வமுள்ளவ மாணவர்களும் பெற்றோர்களும் ஏனைய நலன் விரும்பிகளும் கலந்து கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (த)


## தமிழ் மக்கள் பேரவை
## Tamil People's Council

தமிழ் மக்கள் பேரவையின் நிபுணர்குழுவால் தயாரிக்கப்பட்ட
**அரசியல் தீர்வுத்திட்ட முன்வரைவு**
*(Report of the Sub-Committee on Finding a Political Solution to the National Question)*

பொதுமக்கள் முன்னிலையில் வெளியிடப்படும் ஆரம்ப நிகழ்வு

**தலைமை**
மாண்புமிகு நீதியரசர்
**சி.வி. விக்னேஸ்வரன்**
(வடக்கு மாகாண முதலமைச்சர், இணைத்தலைவர் - தமிழ் மக்கள் பேரவை)

இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்
காலம் : 31.01.2016 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : பிற்பகல் 3.00 மணி

தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஏற்பாட்டுக்குழு
தமிழ் மக்கள் பேரவை



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




நீர்வேலி வடக்கு, நீர்வேலியில் வசிக்கும் திரு.திருமதி இரத்தினராஜ் ஜெயரூபா தம்பதிகளின் பிள்ளைச் செல்வங்களான
**ஆராதன், ஆருதீ** Happy Birthday
ஆகியோர் இன்று (30.01.2016) சனிக்கிழமை தங்களது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றனர். அவர்கள் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துவோர்.

நீர்வேலி சந்தி, நீர்வேலி.
தாத்தா தர்மலிங்கம்
பாட்டி கௌரிதேவி
(68419) (13.18)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்





Best Wishes

செல்வி துஷியங்கா சிவகுமார் BA (Hons)
செல்வி அனுலா சிவகுமார் (BA)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 20.01.2016 நடைபெற்ற பொதுப்பட்டமளிப்பு விழாவில் BA (Hons) சிறப்புக் கலைமாணிப் பட்டத்தைப் பெற்ற செல்வி துஷியங்கா சிவகுமார் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 20.12.2015 நடைபெற்ற பொதுப்பட்டமளிப்பு விழாவில் BA கலைமாணிப் பட்டத்தைப் பெற்ற செல்வி அனுலா சிவகுமார் ஆகியோரை மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் உயர மனமார வாழ்த்துகின்றோம்.

"சிவஸ்தி பவனம்"
வல்லியசிங்கம் வீதி,
கோப்பாயில் கிழக்கு.
கோண்டாவில். (67824) (13.15)

வாழ்த்துவோர்
அப்பா, அம்மா, சகோதரன்,
சகோதரிகள், அப்பம்மா, சேகர் சித்தா
குடும்பத்தினர், ஈசன் மாமா குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT


## கண்ணீர் அஞ்சலி

யாழ்போதனாவைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமைபுரியும் திருமதி ஜெயமோகனா திருக்குமரன் அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி தங்கரத்தினம் சச்சிதானந்தம்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்,
யாழ்ப்பாணம்.



## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் சுப்பையா நாகலிங்கம்**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலன சபையினரும் ஊர் மக்களும்.



## 15ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 15 . 08 . 1932



மலர்வு 14 . 01 . 2001

**ஆறுமுகம் முத்தையா ஐயாத்துரை**
(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்)
திதி: அபரபக்க ஷஷ்டி

ஆண்டுகள் பதினைந்து ஓடிப்போனது
ஆறாத துயர்மட்டும் இன்னும் ஓய்ந்ததில்லை
மாறாத பந்தமும் நீங்காத நினைவுகளும் அலை கொண்டு போனாலும்
வருடங்கள் பலவானாலும் அப்பா! எங்களோடுதான் வாழ்ந்திடுவீர்

9/1, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

(68411)(13,15)



## துயர் பகிர்கின்றோம்



**அமரர் சுப்பையா நாகலிங்கம் (கனடா)**

கொக்குவில் இந்துக்கல்லூரியின் அதி மூத்த பழைய மாணவர்களில் ஒருவரும் கனவிலும் நனவிலும் கல்லூரி நலனில் பங்கு கொண்டவரும் எமது முன்னாள் மாணவி சிவபாக்கியம் நாகலிங்கம் அவர்களின் அன்புக் கணவரும், எங்கு வாழ்ந்தாலும் கல்லூரி வளர்ச்சிக்காக கரம் கொடுத்துவருபவர்களான கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் திருமதி சத்தியபாமா தளையசிங்கம் (கனடா), இரஞ்சிற்குமார் (UK), பாலகுமார் (கனடா), விஜயகுமார்(UK), திருமதி சுதாமதி சுப்பிரமணியம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் எமது நிதியத்தினால் கல்லூரி மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்களுக்கு நிதி வழங்கியவருமான

அமரர் சுப்பையா நாகலிங்கம்

அவர்கள் காலமான செய்தி எம்மையெல்லாம் கவலைக்குள்ளாக்கியதுடன் கல்லூரிக்கும் எமது கல்லூரி சமூகத்துக்கும் பேரிழப்பாக அமைந்தது.

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் கல்லூரியுடன் பிணைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இத்துயரத்தில் நாமும் துயர்பகிர்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எமது கல்லூரி குல தெய்வமாகிய கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளை வேண்டி நிற்கின்றோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்க
நம்பிக்கை நிதியம் (யாழ்ப்பாணம்)

(கி/28959)(ம.15)


# கட்சிகளை ஒன்றிணைக்கக் கூட்டமைப்பு தவறினால் கூட்டணி அதனைச் செய்யும்

## சொல்கிறார் அதன் தலைவர் ஆனந்தசங்கரி



யாழ்ப்பாணம், ஜன. 30

தமிழ் பேசும் மக்களுக்காகச் செயற்படுகின்ற தமிழ்க் கட்சிகள் – குழுக்களைஓரணிக்குள்கொண்டு வருவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டுத் தலைமை தவறுமாயின், அவற்றை இணைத்து செயற்படுவதற்குரிய நடவடிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி மேற் கொள்ளும். இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள நீண்ட ஊடக அறிக்கையில் பல விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், பொதுவாக தமிழ் குழுக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள ஒற்றுமையின்மையே தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாது இருப்பதற்கு காரணமென ஒரு பொது அபிப்பிராயம் நிலவுகின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி இனப் பிரச்சினை சம்பந்தமற்ற விடயங்களில் நேரத்தைச் செலவிடுவதை தவிர்க்க வேண்டுமென உணர்கின்றது.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீண்ட காலமாக முறைப்படி இயங்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரைத் தமிழரசுக் கட்சி தனது தேவைக்காகவும் – வளர்ச்சிக்காகவும் பயன்படுத்துகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏனைய கூட்டுக் கட்சிகளுடன் பாகுபாடு காட்டி நடப்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஊடாகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்ற நிலைப்பாட்டை இழந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டுத் தலைமை தமக்குள் உள்ள ஒற்றுமையை நிலை நாட்டுவதோடு தமிழ் பேசும் மக்களுக்காக உழைக்கின்ற ஏனைய தமிழ்க் கட்சிகள், குழுக்களை ஓரணியின் கீழ் கொண்டுவரத் தவறின் தந்தை செல்வா, ஜீ.ஜீ. பொன்னம்பலம், எஸ்.தொண்டமான், அ.அமிர்தலிங்கம், மு.சிவசிதம்பரம் ஆகியோருக்கு செய்ய வேண்டிய கடமையாக உணர்ந்து, தமிழ் மக்களின் உரிமைகளுக்காக போராடுகின்ற சகல தமிழ் அரசியல் கட்சிகளையும், குழுக்களையும் ஓரணியின் கீழ் இணைத்துச் செயற் பட வேண்டிய நடவடிக் கைகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணி மேற்கொள்ளும் – என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (கு–5)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி துரையப்பா (தர்மலிங்கம்)

பிறப்பு 18 . 10 . 1930



இறப்பு 28 . 01 . 2016

அனலைதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாக வும் கொண்ட சின்னத்தம்பி துரையப்பா (தர்மலிங்கம்) 28.01.2016 வியாழக்கிழமை சிவபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- சின்னத்தங்கம் தம்பதிகளின் பாச மிகு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும், நவநீதத்தின்(கிளி) பாசமிகு கணவரும், ருக்மணன் (காந்தி - இலங்கை), உருத்திரபாலன் (பாலன் - ஜேர்மனி), உமாசங்கர் (சங்கர் - லண்டன்), பிறேமலதா (இலங்கை), பகீரதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் பூமணி, காலஞ்சென்ற பேரம்பலம் மற்றும் பார்வதி காலஞ் சென்றவர்களான பரமலிங்கம், இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்றவர்களான சிவப்பெருமாதேவி, தயாபரராசா மற்றும் சத்தியரூபவதி,சிவமணி, காலஞ்சென்ற தபோதனராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், கண்ணம்மா, சண்முகசுந்தரம், சரசா, காலஞ்சென்ற கதிர்வேலு மற்றும் தேவி, சண்முகலிங்கம், காலஞ்சென்ற சீனிவாசகம் மற்றும் சமுத்திரரெத்தினம், செல்வராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், கலைச்செல்வி (செல்வி - ஜேர்மனி), ரதிகலா (லண்டன்), தருமராசா (இலங்கை), யசோதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சயந்தா, சிந்துஜா, சுகனியா, பிரியா, நிரூசன், நிவாசன், சகானா, கரிஸ், துஷாணி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.02.2016 திங்கட்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு (மானிப்பாய்) எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மெமோறியல் லேன்,
சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

(68436)(11,15)

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு:- மனைவி - 021 225 6431



## விண்ணக வாழ்வின் முதலாம் வருட நினைவஞ்சலி



மலர்வு 18.08.1947
உதிர்வு 30.01.2015

அமரர்
**பொன்னம்பலம் நடராசா**
(நடா)

பாசத்தின் சிகரமாய் வம்சத்தின் குலவிளக்காய்
நேசமுடன் வழிகாட்டும் விண்மீனாய்
வாழ்வுக்கு வழிவகுத்த அன்பு அப்பாவே!
நாளும் பொழுதும் நினைத்து மனமுருகி
அனலிடை மெழுகாய் கரைகின்றோம்.
ஓராண்டென்ன நூறாண்டு சென்றாலும்
நீங்காது உம் நினைவு எம் உள்ளத்தில்
இறைவனில் அமைதிபெற வேண்டுகின்றோம்

79/3, ரக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

நினைவேந்தி நிற்கும்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையற்ற பட்டதாரிகள் முதலாம் திகதி போராட்டம்

## நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் கவனவீர்ப்புக்கு ஆதரவு தெரிவித்து

யாழ்ப்பாணம், ஜன. 30

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தினரால் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி காலை 9 மணிக்கு யாழ். செயலக முன்றலில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட வுள்ளது.

பட்டதாரிகளின் வேலைவாய்ப்பை அரசிடம் கோரி நாடளாவிய ரீதியில் ஒன்றிணைந்த தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகள் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அடையாள கவனவீர்ப்பின் ஓர் அங்கமாக வடக்கு மாகாணத்தில் இது நடைபெறவுள்ளது என வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகம் தெரிவித்துள்ளது.

> பிரதமருடனான சந்திப் பின்போது கேட்டுக் கொள்ளப்பட்ட தற்கிணாங்க வேலையற்ற பட்டதாரிகளின் சரியான தரவுகள் திரட்டும் நடவடிக்கையும் இடம் பெறும்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஒன்றிணைந்த தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் தம்மிக்க முனசிங்க உட்பட பிரதிநிதிகள் கலந்து கொள்வதோடு, பட்டதாரிகளின் வேலை வாய்ப்புப் பற்றிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட வுள்ளது.

மேலும் பிரதமருடனான சந்திப் பின்போது கேட்டுக் கொள்ளப்பட்ட தற்கிணாங்க வேலையற்ற பட்டதாரிகளின் சரியான தரவுகள் திரட்டும் நடவடிக்கையும் இடம் பெறும்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக (உள்வாரி, வெளிவாரி) பட்டதாரிகள், தேசிய உயர் தொழில்நுட்பக் கல்லூரிப் பட்டதாரிகள் அனைவரையும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த்)

# பிள்ளைகள் கைவிட்டதால் பெற்றோர்கள் கைதடியில்

யாழ்ப்பாணம்,ஜன. 30

பிள்ளைகள் தம்மைக் கைவிட்டதை அடுத்து வாழ வழியின்றி கணவனும் மனைவியும் கைதடி அரச முதியோர் இல்லத்தில் இணைந்து கொண்டனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இளையவி அருள் (வயது-79) என்ற முதியவர் பார்க்க எவருமின்றி நோய் வாய்ப்பட்ட நிலையில் வீதியோரம் அலைந்து திரிந்தார்.

பின்னர் இவர் சமூகசேவை உத்தியோகத்தரால் பொறுப்பேற்கப்பட்டு கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இணைக்கப்பட்டார்.

அத்துடன் இவரது மனைவியான இலட்சுமி (வயது-65) மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த சமயம் அங்கிருந்து கைதடி முதியோர் இல்லத்தில் இணைக்கப்பட்டார்.

தமக்குப் பிள்ளைகள் இருப்பதாகவும் தாங்கள் உரும்பிராய் பூதராயர் கோயிலடியைச் சேர்ந்தவர்கள் என்றும் அந்த முதியோர்கள் தெரிவித்தனர்.

இந்த முதியோர்கள் தொடர்பாக உறவினர்கள் எவரும் இருந்தால் முதியோர் இல்லத்துடன் தொடர்பு கொள்ளுமாறு இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் கேட்டுள்ளார்.

அத்துடன் இந்த வயது முதிர்ந்த கணவனும் மனைவியும் தமது உறவுகளைப் பார்ப்பதற்கு விருப்பம் கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-17)

# தென்மராட்சிப் பகுதியில் நெல் அறுவடை ஆரம்பம்

சாவகச்சேரி ஜன. 30

தென்மராட்சிப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை அறுவடை ஆரம்பமாகி மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

கடந்த தைப்பூச தினத்தன்று புதிரெடுத்தலுடன் அறுவடை ஆரம்பமாகியுள்ளதென நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

பெரும்பாலான வயல்களில் இயந்திரம் மூலம் அறுவடை இடம்பெற்று வருகின்றது.

ஆள்கள் மூலம் நெல் அறுவடை செய்து சூடு வைக்க பரப்புக்கு 500 ரூபாவும், இயந்திரம் மூலம் அறுவடை செய்து நெல் மூடைகளாக வழங்கவதற்கு பரப்புக்கு 400 ரூபாவும் கட்டணமாக அறவிடப்படுவதால் பெரும்பாலான நெற்செய்கையாளர்கள் இயந்திரம் மூலம் அறுவடை செய்து வருகின்றனர்.

இயந்திரத்தின் மூலம் அறுவடை செய்யப்படும் நெல் மூன்று தினங்கள் காயவிட வேண்டுமென்பதால் அறுவடை செய்யப் படும் நெல்லினை தமது வளவுகளிலும் தரவைப் பகுதிகளிலும் காய வைக்கிறார்கள் எனவும்.

நெல் காய வைக்கும் தரவைப் பகுதிகளில் நெல் காயவைக்கக் கடும் போட்டி நெற்செய்கையாளர் களிடையே இடம்பெற்று வருகிறது எனவும் தெரிவித்தனர்.

வைக்கோல் தேவையானோர் மட்டும் ஆள்கள் மூலம் நெல் அறுவடை செய்து வருகின்றனர்.

இதேவேளை, நெல்லின் விலையும் திடீரென வீழ்ச்சியடைந்துள்ளதென நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

70 கிலோ கொண்ட நெல் மூடை ஆயிரத்து 800 ரூபாவாக வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்படுகிறது. (த-9)



நல்லூர் ஆனந்தா வித்தியாலயத்தை வேறு பாடசாலையுடன் இணைக்காது அதே இடத்தில் தொடர்ந்து இயக்குமாறு கோரியும், அங்குள்ள கல்வித் திணைக்கள அலுவலகங்களை அகற்றிப் புதியதொரு அதிபரையும் நியமிக்குமாறு கோரியும் நேற்றுக் காலை 2 மணிநேரம் கவனவீர்ப்பு ஒன்று இடம்பெற்றது. (த-4-10)

## கோம்பையன் இந்து மயானத்துக்கு புதிய நிர்வாகம்

யாழ்ப்பாணம், ஜன. 30

வண்ணை கோம்பையன் மணல் இந்து மயானத்துக்குப் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது என்று நிர்வாக சபை தெரிவித்துள்ளது.

பரிபாலனசபையின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் சபைத் தெரிவும் கடந்த டிசெம்பர் 20 ஆம் திகதி நடைபெற்றது.

அதில் தலைவராக பி.ஆர். இரஞ்சனும், உப தலைவர்களாக ரி.சுதந்திரபாலனும், ஆர். இராசலிங்கமும், செயலாளராக எஸ்.கே. கணேசவேலும், உப செயலாளராக என்.ரி.எஸ்.சுபநாதனும், பொருளாளராக க.தம்பிராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக எஸ். சிவகுமார், கே.ரவிச்சந்திரன், கே.ஜெயச்சந்திரன், எஸ். தேவராசா, வி.தயாபரன், பி.கே.பி. பாலசங்கர், என். பாஸ்கரன், ஆர். முத்துலிங்கம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (த)

# சகல மதுபானசாலைகளுக்கும் கலால் திணைக்களம் அனுமதி

## இந்தத் தீர்மானம் எதிர்கால இளைஞர் சமூகத்தின் அழிவுக்கு வழிகோலும் என்கிறார் வணபிதா டேவிட்

யாழ்ப்பாணம், ஜன .30

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் இயங்கு நிலையில் உள்ள அனைத்து மதுபான சாலைகளுக்கும் கலால் திணைக்களம் 2016 ஆம் ஆண்டுக்கான அனுமதியை வழங்கியுள்ளது.

இந்தத் தீர்மானம் என்பது எதிர்கால சமூகத்தின் அழிவுக்கு வழிகோலும் விதமாக அமைந்துள்ளது. அத்துடன் கலால் திணைக்களம் தனது வரி வருமானத்தையும் மதுபானசாலை உரிமையாளர்களின் மீதான விசுவாசத் தன்மையையும் பிரதானப்படுத்தி மட்டும் செயற்படுகின்றது. மக்கள்நலன்சார்ந்து செயற்படவில்லை என வணபிதா டேவிட் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் உள்ள மதுபானசாலைகள், உணவகங்கள் மற்றும் மது அருந்தும் இடங்களை அகற்றுவது தொடர்பில் ஜனாதிபதி, வடமாகாண ஆளுநர், வடக்கு மாகாண முதலமைச்சர், யாழ் மாவட்ட அரச அதிபர், அனைத்துப் பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கோரிக்கைக் கடிதத்திலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொது மக்களும் ஏனையோரும் மேற்கொண்ட கோரிக்கைகளை ஏற்று யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசாரணைகளின் பிரகாரம் ஒரு பிரதிநிதியாகக் மிகுந்த பிரயத்தனங்களை மேற்கொண்டு மதுபானசாலைகள், உணவகங்கள் மற்றும் மது அருந்தும் இடங்களை அகற்றுவது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொண்டவள் நான்.

அதிகமான பொது மக்கள் இவற்றை அகற்றுவது அல்லது வேறு பகுதிகளுக்கு மாற்றுவது தொடர்பில் கலால் திணைக்கள அதிகாரிகளை வலியுறுத்தித் தங்களது சாட்சியங்களை பதிவு செய்திருந்தனர். ஆனால் கலால் திணைக்கள அதிகாரிகள் மது பானசாலைகளின் உரிமையாளர்களுக்கு ஆதரவை வழங்கி வருகின்றனர். மக்களுடைய சாட்சியங்கள் அனைத்தையும் அவர்களுக்குச் சார்பாக பதிவு செய்துள்ளனர். பிரதேச செயலாளர் களையும் இதற்குச் சாதகமான கருத்தைப் பதிவு செய்ய தூண்டியுள்ளனர். என்னைக்கூட அதற்கு உடன்படுமாறு கேட்டனர். ஆனால் நான் மறுத்துவிட்டேன்.

உண்மையில் இந்தச் சாட்சியப் பதிவுகளும் விசாரணைகளும் சரியானமுறையில் மேற்கொள்ளப் படவில்லை. இது ஒரு கண் துடைப்பு நாடகம்.

இந்த நிலையிலே ஜனாதிபதி இலங்கையிலே இருந்துவருகின்ற அனைத்துவிதமான போதைப் பொருள் பாவனைகளையும் கட்டுப் படுத்து வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு அனைத்து அரச அதிகாரிகளையும் பணித்துள்ளார்.

அந்தவகையிலே தற்போது எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தவும் தேவையற்ற சட்ட விரோதமான மதுபானசாலைகள், உணவகங்கள் மற்றும் மது அருந்தும் இடங்களை அகற்றுவது தொடர்பிலும் கலால் திணைக்கள அதிகாரிகளை அரச பிரதிநிதியாக தாங்கள் அறிவுறுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார். (த-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவகாலச் சீட்டு வைத்துள்ள மாணவரை ஏற்றாத நடத்துநர்

## நீண்டகாலம் தொடரும் இப்பிரச்சினைக்கு இன்னும் தீர்வில்லை என பலரும் விசனம்

வவுனியா, ஜன. 30

பருவகால சீட்டுடன் வரும் பாடசாலை மாணவர்களை வவுனியா பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் பஸ்களில் ஏற்றிச் செல்ல முடியாது என தெரிவித்த அரச பஸ் ஒன்றின் நடத்துநர், இடையில் பஸ்ஸை மறிக்கும் மாணவர்களையும் ஏற்றாது சென்றுள்ளதாக மாணவர்கள், ஆசிரியர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நீண்டகாலமாக நடைபெறும் குறித்த பிரச்சினை தொடர்பாக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் மாணவர்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நேற்றுக் காலை வவுனியா பஸ் நிலையத்தில் தரித்து நின்ற அரச பஸ்ஸில் வவுனியாவிலிருந்து கனகராயன்குளம், மாங்குளத்தில் உள்ள பாடசாலைகளுக்குச் செல்வதற்காக மாணவர்கள் ஏறியுள்ளார்கள். இதன்போது நடத்துநர் மாணவர்களை ஏறவேண்டாம் எனவும் இறங்கும்படியும் கூறி அனைவரையும் பஸ்ஸில் இருந்து இறக்கிவிட்டுள்ளார்.

ஓமந்தையிலிருக்கும் தரிப்பிடத்தில் மாணவர்கள் காத்திருந்தபோதும் அவர்களையும் ஏற்றாமல் சென்றதால் குறித்த பஸ்ஸில் பயணம் செய்த ஆசிரியர் ஒருவர் நடத்துநரிடம் மாணவர்களை ஏற்றாததன் காரணத்தை வினவியுள்ளார்.

> "பருவகாலச் சீட்டுள்ள மாணவர்களை ஏற்ற முடியாது என்று பொறுப்பற்ற விதத்தில் பதிலளித்துள்ளார் நடத்துநர்."

இதற்கு பருவகாலச் சீட்டுள்ள மாணவர்களை ஏற்ற முடியாது என்று பொறுப்பற்ற விதத்தில் பதிலளித்துள்ளார் நடத்துநர். அரச பஸ்ஸில் குறித்த சில நடத்துநர்களின் நடவடிக்கையால் மாணவர்கள் பாடசாலைக்குச் சரியான நேரத்திற்குச் செல்ல முடிவதில்லை என்றும், இது தொடர்பாக பல முறை அறிவித்தபோதும் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரச பஸ்ஸின் நடத்துநர்களே இவ்வாறு நடந்து கொள்வதாகவும், பருவகாலச் சீட்டில் பாடசாலை மாணவர்களை ஏற்றுவதற்குத் தயக்கம் காட்டுவதாகவும், பாடசாலை மாண வர்கள் அரச பஸ்ஸை நம்பியே பருவகாலச் சீட்டுக்களை வாங்கி வருகின்றனர் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சில நடத்துநர்கள் இப்படியான பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்வதால் சில நல்ல உள்ளங் கொண்ட நடத்துநர்களும் பாதிக்கப்படுவதாக ஆசிரியர்களால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வவுனியா அரச பஸ் சாலைக்கு பொறுப்பானவர்களை கேட்டபோது ஒரு சில நடத்துநர்கள் இவ்வாறான விதமாகத்தான் செயற்படுவதாகவும், எத்தனை தடவை சொன்னாலும் கேட்பதில்லை எனவும் பதிலளித்தனர். (து-21-402)

# முல்லைத்தீவு வீதிகளை நானே புனரமைத்தேன்

## அமைச்சர் ரிசாத் பெருமிதம்



முல்லைத்தீவு, ஜன. 30

முல்லைத்தீவு மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள 3 கிலோமீற்றர் வீதியைத் தவிர ஏனைய அனைத்து வீதிகளையும் தானே புனரமைத்ததாக தன்னைத் தானே புகழ்ந்து கூறினார் அமைச்சர் ரிசாத் பதியுதீன்.

மன்னார் மாவட்டத்திலும் 50 கிலோமீற்றர் வீதியைத் தவிர ஏனைய அனைத்தையும் தானே புனரமைத்ததாகவும் அவர் கூறினார்.

கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தின்போது முல்லைத்தீவைச் சொந்த இடமாகக் கொள்ளாத முஸ்லிம்கள் சிலர் முறிப்புப் பகுதியில் உள்ள காணிகளை அடாத்தாக வெட்டுவதாகவும், இதுவரை குறித்த நபர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை எனவும், இதற்குப் பின்னால் பல அரசியல் செல்வாக்கு உள்ளது எனவும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

ரவிகரனின் குறித்த கூற்றால் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இதனையடுத்து கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் ரிசாத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நான் மன்னார் மாவட்டத்திலே பிறந்தவன். ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிருத்திக்காக நிறையப் பாடுபட்டுள்ளேன். என்னாலே தான் முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 கிலோ மீற்றர் வீதியை தவிர ஏனைய முழு வீதிகளும் புனரமைக்கப்பட்டன. ஆனால் நான் பிறந்த மாவட்டத்தில் இன்னும் 50 கிலோமீற்றர் வீதிகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளன. நான் வேறுபாடு பார்ப்பவன் அல்ல. எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று நினைப்பவன். அதனால் தான் முல்லைத்தீவில் இந்த மக்களுக்காக இவ்வளவும் செய்துள்ளேன். எனவே ஒரு சிலர் விடும் தவறுகளை வைத்துக்கொண்டு ஒட்டுமொத்த முஸ்லிம்கள் மீதும் பழி போடாதீர்கள்-என்றார். (து-21-ரி7)

# மன்னார் மறை மாவட்டம் நிறுவப்பட்டு 35 ஆண்டுகள்

## யாழ்.ஆயர் தலைமையில் திருப்பலி இன்று

மன்னார், ஜன. 30

மன்னார் மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டதை நினைவுகூரும் ஆண்டு விழாக்கள் வருடாந்தம் மன்னார் தோட்டவெளிவேதசாட்சிகள் அன்னை ஆலயத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதனடிப்படையில் மன்னார் மறை மாவட்டம் ஏற்படுத்தப்பட்ட 35 ஆண்டுகள் நிறைவு விழா இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு தோட்டவெளிவேதசாட்சிகள் அன்னை ஆலயத்தில் இடம்பெற வுள்ளது.

இவ்வர்ண்டு இவ்விழாவைச் சிறப்பிக்க யாழ். மறைமாவட்டத்தின் புதிய ஆயர் மேதகு ஜஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை மன்னாருக்கு வருகை தந்துள்ளார்.

அவரின் தலைமையில் இந்த விழாத் திருப்பலி இடம் பெறும். காலை 7.15 மணிக்கு யாழ்ப்பாணத்தின் புதிய ஆயரை வரவேற்கும் நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளில் இருந்தும் இறைமக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக மன்னார் மறைமாவட்டத்தின் ஊடக இணைப்பாளரும் கலையருவி அமைப்பின் இயக்குநருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தொரிவித்தார். (து-56)

# புளியம்பொக்கணையில் பொங்கல் அறுவடை விழா

கிளிநொச்சி, ஜன. 30

கிளிநொச்சியில் பொங்கல் அறுவடை விழா புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய முன்றிலில் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

கோமாதா பூசையைத் தொடர்ந்து பொங்கல் ஆரம்ப நிகழ்வு இடம்பெறும். இதனைத் தொடர்ந்து அறுவடை இடம்பெறும். அதில் உழவர் நடனம் உள்ளிட்ட கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

கேலீஸ், நெஸ்டல், யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களது முழுமையான பங்குபற்றலுடன் ஹற்றன் நசனல் வங்கியின் கிளிநொச்சி தெற்கு கிளை இந்த விழாவை ஏற்பாடு செய்துள்ளது.

வடக்கு மாகாண விவசாயத்துறை அமைச்சர் ஐங்கரநேசனால் ஆரம்பித்து வைக்கப்படும் இந்த நிகழ்வில் பொங்கல் விழா, பாரம்பரிய கலை நிகழ்வுகள், அதிதிகள் உரை மற்றும் கேலீஸ், நெஸ்டல் நிறுவனங்களது புதிய தொழில்நுட்பங்கள், ஏற்றுமதி விவசாயம் சார்ந்த காட்சிப்படுத்தல்கள், விவசாய இரசாயனம் சார்ந்த பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் செயற்பாட்டு விளக் கத்துடன் கூடிய ஆலோசனைகளும் நடைபெற வுள்ளன என்று வங்கியி னர் தெரிவித்துள்ளனர். (து)

# வைத்தியசாலைப் பிரச்சினைகளை வெளியிட்டு தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் உதயன்

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஜெயராசா தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன. 30

உதயன் பத்திரிகை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரச்சினைகளை வெளியில் கொண்டு வந்து மக்கள் மத்தியிலே வைத்தியசாலை தொடர்பான பிழையான அபிப் பிராயத்தை ஏற்படுத்துவதாகக் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஜெயராசா தெரிவித்தார்.

நேற்றுக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் 2010 ஆம் ஆண்டில் இருந்து பெரிய பிரச்சினைகள் இருந்தன. ஆனால் அவை அனைத்தும் மூடி மறைக்கப்பட்டன. தற்போது அவை படிப்படியாக குறைக்கப்பட்டுள்ளன. குறைகள் இருப்பது உண்மை. ஆனால் ஆரம்பத்தில் இருந்ததை விடத் தற்போது அவை குறைந்துள்ளன. அரசால் புதிதாக நியமிக்கப்பட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் குறித்த பிரச்சினைகளை இனம்கண்டு அவற்றைச் சரி செய்து வருகின்றார்.

அதன் ஒரு அம்சம் தான் கடந்த வாரம் கிளிநொச்சிக்கு வருகை தந்த எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஐயாவிடம் குறித்த பிரச்சினைகள் தொடர்பாகக் கூறியிருந்ததோடு அவற்றைக் காண்பித்தும் உள்ளார். உதயன் பத்திரிகையும் இங்கு உள்ள வேறு ஊடகங்களும் வைத்தியசாலையில் மாடுகள் நிற்கின்றன, கழிவுகள் கொட்டப்படுகின்றன. கழிவு நீர் நிற்கின்றது என்று வைத்தியசாலை தொடர்பாகப் பொது மக்கள் மத்தியிலே பிழையான அபிப்பிராயத்தைக் கொண்டு செல்கின்றன-என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், குறித்த தகவல்கள் நடைபெறுகின்றனதானே. நானே அவற்றை நேரில் கண்டேன். வைத்தியரே இதை நேரில் காட்டினார். வைத்தியசாலைக்கு வேலி இல்லை-என்றார்.

இதற்குப் பதிலளித்த சுகாதார சேவைப் பணிப்பாளர், என்னைப் பொறுத்த வரை கடந்த காலங்களை விடத் தற்போது வைத்தியசாலையின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. ஆனால் இங்கு ஒன்றும் நடைபெறாதது போல பல விடயங்கள் நடைபெறுகின்றன. இது ஆபத்தானது-என்றார். (து-21-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாதாரத் திட்டங்களுக்கு பதிவு மேற்கொள்ள சந்தர்ப்பம்

## அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 30

வாழ்வாதாரத் திட்டங்களுக்கான பதிவுகளை இதுவரை மேற்கொள்ளாத புனர்வாழ்வு பெற்ற போராளிகள், போரில் தமது பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர்கள், தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களைச் சேர்ந்தோர் பதிவுகளை மேற்கொள்வதற்கான விசேட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் தத்தமது பிரதேச செயலகங்களில் இணைப்புச் செய்யப்பட்டுள்ள கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்று சரியான முறையில் பூரணப்படுத்திக் கோரப்பட்டுள்ள தொடர்புடைய ஆவணங்களின் நிழல் பிரதிகளையும் இணைத்து, தமது பிரதேசத்தில் உள்ள கிராம அபிவிருத்தித் திணைக்களம் அல்லது பெண்கள் கிராம அபிவிருத்தித் திணைக்களம் மற் றும் கிராம சேவை யாளரின் உறுதிப்படுத்த லோடு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதிக்கு முன்பாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் ஒப்படைத்து அதற்கான பற்றுச் சீட்டையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

> எதிர்வரும் பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதிக்கு முன்பாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் ஒப்படைத்து அதற்கான பற்றுச் சீட்டையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதன்பிரகாரம் படிவம் ஒன்றைப் புனர்வாழ்வு பெற்ற போராளி களும், படிவம் இரண்டைப் பிள்ளைகளைப் பறிகொடுத்தவர்களும், படிவம் மூன்றைத் தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களும் ஏனைய போராட்டக் குழுக்களில் இருந்து உயிர்த் தியாகம் செய்த நபர்களின் குடும்பங்கள் படிவம் நான்கையும் பூரணப்படுத்துமாறும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (த-ரி2)

# போதையில் வாகனம் ஓட்டியதால் ஒரு வருடத்துக்கு சாரத்தியம் தடை

யாழ்ப்பாணம், ஜன. 30

மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தியவரின் சாரதி அனுமதிப் பத்திரத்தை ஒரு வருடத்துக்கு நிறுத்தி வைக்க பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதனால் அவர் ஒரு வருடத்துக்கு வாகனம் எதனையும் செலுத்த முடியாத நிலையை எதிர்கொண் டுள்ளார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள் ளார். இமையாணன் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திய நிலையில், வீதிக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வல்வெட்டித்துறைப் பொலிஸார் குறித்த சந்தேக நபரைக் கைது செய்திருந்தனர்.

இவர் கடந்த புதன்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் சந்தேக நபருக்கு 8 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்ததோடு, அவரது சாரதி அனுமதிப் பத்திரத்தையும் ஒரு வருட காலத்துக்கு இடை நிறுத்தி வைக்க உத்தவிட்டார். (த-4-10)

# பல்கலைக்கழகக் கல்லூரியில் பல்வேறு பயிற்சிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்.பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியில் பல்வேறு வகையான பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களில்உள்ளபிள்ளைகளுக்கு பயிற்சிக்கட்டணத்தில் விலக்களிக்கப்பட்டுள்ளது என்று அதன் மேலதிகப் பணிப்பாளர் க.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி நெறிக்கு பெப்ரவரி மாதம் 5ஆம் திகதிக்கு முதல் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார்.

சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தினால் புதிய வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிப்பதற் கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகள் இந்த விண்ணப்பங்களைப் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதிக்கு முதல் அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# முன்பள்ளிக்கு புதிய கட்டடம்

யாழ்ப்பாணம், ஜன. 30

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலையத்துக்கான புதிய நவீன வடிவிலான முன்பள்ளி கட்டடத்திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

14 லட்சம் ரூபா செலவில் புதிய முன்பள்ளி கட்டடம் புனரமைக்கப்பட்டது.

யுத் பிரண்ட்ஸ் பவுண்டேசன் வென்சஸ் லிமிட்டெட் நிறுவனத் தலைவர் க.செவ்வேள் பிரதம அதிதியாகவும், யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவைத் தலைவர், சிரேஷ்ட மத்தியஸ்தர் இ.மயில்வாகனம் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட சிரேஷ்ட மத்தியஸ்தர் இ.மயில்வாகனம் சிறப்புரையாற்றுகையில்,

முன்பள்ளிகள் புனரமைப்பு என்பதற்குக்கடந்தகாலங்களில் பன்முகப்படுத்தப்பட்ட நிதி உதவியுடனே இடம்பெற்றது என்றார். (த-50)

# உணவகங்களின் சுகாதாரம் இறுக்கமாகப் பேணப்படும்

யாழ்ப்பாணம்,ஜன. 30

யாழ்.நகரிலுள்ள உணவகங்கள் மற்றும் தேநீர்ச்சாலைகள் போன்றவற்றில் சுகாதார விதிமுறைகளை இறுக்கமாக நடைமுறைப் படுத்துவதற்கு சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கென உணவகங்கள், ஹோட்டல்கள், தேநீர்ச் சாலைகள் போன்றவற்றின் மீது திடீர்ப் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகச் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

உணவகங்களில் விற்கப்பட்டு மிஞ்சும் உணவுப்பொருள்களை குளிரூட்டி, மீண்டும் சூடாக்கி அடுத்த நாள் விற்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

சுகாதாரப் பகுதியினர் இந்த விடயத்தில் விழிப்பாகச் செயற்பட்டு வருகிறார்கள். இந்த வாரத்தில் சுகாதாரப் பகுதியினரின் திடீர்ச் சோதனை நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன.

சுகாதாரப் பகுதியினரின் நடைமுறைகளைப் பின்பற்றாத உணவகங்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (த-17)

# திருத்தப்பட்டது யாழ். மணிக்கூடு

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.நகரில் மணிக்கூட்டுக் கோபுரத்தில் உள்ள மணிக்கூடு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து மணிக்கோபுர மணிக்கூடு தற்போது சரியான நேரத்தைக் காட்டி வருகின் றது.

மணிக்கோபுரத்தின் மணிக்கூட்டின் மோட்டார் பழுதடைந்ததால் அது செயல் இழந்தது. கடந்த ஒரு மாத காலத்துக்கும் மேலாக இந்த மணிக்கூடு செயற்படாமல் காணப்பட்டது.

தற்போது மாநகராட்சி மன்றத்தினால் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. (த-17)

# நல்லூர் ஆனந்தா, ஞானோதயா ஆகியவை மூடப்படவேயில்லை

## அயலில் உள்ள பாடசாலைகளுடன் இணைப்பு என்கிறார் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ். வலயத்தில் உள்ள நல்லூர் ஆனந்தா வித்தியாலயமும், நல்லூர் ஞானோதயா வித்தியாலயமும் அயலில் உள்ள பாடசாலைகளுடன்தான் இணைப்புச் செய்யப்பட்டனவே தவிர அவை மூடப்படவில்லை என யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் என். தெய்வேந்திரராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர் ஆனந்தா வித்தியாலயம் நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயத்துடனும், நல்லூர் ஞானோதயா வித்தியாலயம் கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பர்டசாலையுடனும் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு பாடசாலைகளும் ஆரம்பப் பாடசால்லைகளாகும். இங்கு தரம் 1 – 5 வரையான வகுப்புக்களே உள்ளன.

நல்லூர் ஆனந்தா வித்தியாலயத்தில் மொத்தம் 9 மாணவர்களும் 4 ஆசிரியர்களும், நல்லூர் ஞானோதயா வித்தியாலயத்தில் மொத்தம் 23 மாணவர்களும் 6 ஆசிரியர்களுமே உள்ளனர்.

இந்தப் பாடசாலைகளில் வகுப்பறைக்கற்றல், கற்பித்தல், வினைத்திறன், விளைதிறன் மிக்கதாகக் காணப்படவில்லை. புதிய கலைத்திட்டம் ஒன்றைச் செய்யும்போது அவற்றில் பல தடைகளையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இந்தப் பாடசாலைகளில் மாணவர்களின் தொகை குறைவாக இருப்பதால், இணைப்பாடவிதான செயற்பாடுகளைத் திருப்தியாக மேற்கொள்ள முடிவதில்லை. இதனால் அங்கு கல்வி பயிலும் மாணவர்களின் ஆளுமைச் செயற்பாடுகள் குறைவடைவதுடன், அவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் சந்தர்ப்பங்களும் குறைவாகவே இருக்கும்.

இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு வலயக் கல்விப் பணிப்பாளர் குழு பாடசாலைக்குச் சென்று அதிபர், ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர்கள் அடங்கிய குழுவைச் சந்தித்துக் கலந்துரையாடி பெற்றோர் தமது பிள்ளைகளை இணைத்துக் கற்பதற்குச் சம்மதம் தெரிவித்து எழுத்துமூலமான கடிதங்கள் வழங்கிய பின்னரே இந்தப் பாடசாலைகள் இணைப்புச் செய்யப்பட்டதே தவிர மூடப்படவில்லை.

இந்தப் பாடசாலை இணைப்புச் செய்யப்பட்டதன் பின்பு, இணைக்கப்பட்ட பாடசாலைகள் தொடர்பாக சகல ஆவணங்களும் தொடர்ந்து பேணப்படும். அதிபர்கள் தொடர்ந்தும் தமது அதிபர் பொறுப்புக்களை ஆற்றுவார்கள். அயல்பாடசாலை மாணவர்களுடன் இணைந்து கல்வியைக் கற்பார்கள். பாடசாலை வளங்கள் அனைத்தும் பேணப்படும். பாடசாலைக் கட்டடங்கள் கல்வித்தேவைக்காகவே பயன்படுத்தப்படும். பாடசாலைகளின் தனித்துவங்கள் தொடர்ந்தும் பேணப்படும்.

நல்லூர் ஆனந்தா வித்தியாலயம் ஓர் இந்துப் பாரம்பரியத்தைக் கொண்டது. கத்தோலிக்க பாரம்பரியத்தைக் கொண்ட சென். பெனடிக்ற் வித்தியாலயத்துடன் இணைப்பது பொருத்தமானதல்ல என பெற்றோர் தமது கருத்தைக் கூறினார்கள். நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயம் இந்துப் பாரம்பரியத்தைக் கொண்டது. இதனால் பெற்றோர்களின் கோரிக்கைக்கு ஏற்ப ஆனந்தா வித்தியாலயம் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் ஞானோதயா வித்தியாலயம் கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இடைத்தூரம் 200 மீற்றராகும். இந்த வித்தியாலயத்தில் கற்கும் ஆனந்தபுர கிராம மாணவர்கள் பலர் கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையிலேயே கல்வி கற்கின்றார்கள். காசிப்பிள்ளை வித்தியாலயத்துக்கு 10 வயதுக்குட்பட்ட மாணவர்கள் சன நெருக்கடி மிகுந்த வீதிகளில் பயணிப்பது கடினமானது என பெற்றோர்களினால் கூறப்பட்டது. இதனாலேயே இந்த இரு பாடசாலைகளும் இணைப்பு செய்யப்பட்டன என்றார். (த)

# விபத்தில் இளைஞர் காயம்

சாவகச்சேரி ஜன. 30

மோட்டார் சைக்கிளின் சில்லு வீதியில் சறுக்கியதில் வீழ்ந்த இளைஞருக்கு முன் பற்கள் மூன்று காணாமற்போயுள்ளன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மீசாலையில் இடம்பெற்றது.

வீதியில் வந்த டிப்பர் வாகனத்துக்காக வீதியோரத்தில் மோட்டார் சைக்கிளை ஓரமாகச் செலுத்திய போது அங்கு காணப்பட்ட கிரவலில் மோட்டார் சைக்கிள் சில்லுச் சறுக்கி கீழே வீழ்ந்ததில் உடலில் உராய்வுக் காயங்கள் ஏற்பட்டதுடன், மூன்று பற்களும் உடைந்து காணாமற் போயுள்ளன.

காயங்களுக்கு இலக்கான மந்துவில் வடக்கைச் சேர்ந்த 29 வயது இளைஞர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசுக்குத் தேவையேற்படின் சர்வதேச நீதிபதிகளின் உதவி

## பெறப்படும் என்கிறார் ராஜித

கொழும்பு, ஜன. 30

போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பில் உள்ளகப் பொறிமுறைக்குள் விசாரணைகள் நடத்தப்படும் என அரசு தெரிவித்தாலும், தேவை ஏற்படின் சர்வதேச நீதிபதிகள், ஆலோசனைகள், நிதி உதவிகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் பெற்றுக்கொள்ளப்படும் என்று இலங்கை அரசு நேற்று அறிவித்தது.

மேலும், சர்வதேச நீதிபதிகளை ஈடுபடுத்துவதற்கு ஒருசில தரப்பு எதிர்ப்புத் தெரிவித்தபோதிலும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்திலும் சர்வதேச நீதிபதிகளின் உதவிகள் நாடப்பட்டுள்ளன என்றும் அரசு சுட்டிக்காட்டியது.

எனினும், நாம் உள்நாட்டு நீதிபதிகளையே ஈடுபடுத்துவோம். தேவை ஏற்படின் மாத்திரமே சர்வதேச நீதிபதிகளை உள்வாங்குவோம் என்றும் அது மேலும் தெரிவித்தது.

அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன் தினம் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரட்ன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவா பரிந்துரைகள் தொடர்பில் அரசு தெளிவானதொரு நிலைப்பாட்டில் இருக்கின்றது. அதாவது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உள்ளக விசாரணை என்னும் நிலைப்பாட்டில் தொடர்ந்தும் உறுதியாக இருக்கின்றார்கள். இதனை நாம் சர்வதேசத்திடமும் தெரிவித்துவிட்டோம்.



இந்த நிலையில், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள், இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என வலியுறுத்துவதானது அவர்களின் தனிப்பட்ட விருப்பமாகவே கருதப்படுகின்றது.

எனினும், நாம் உள்ளக விசாரணைக்கான சர்வதேசத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளத் தயாராகவே இருக்கின்றோம். அதாவது, தொழில்நுட்ப, நிதி, நிபுணர் உதவிகளை மற்றும் ஆலோசனைகளை நாம் சர்வதேசத்திடமிருந்து பெற்றுக் கொள்வோம்.

அத்தோடு, இந்த விவகாரம் தொடர்பில் சர்வதேசத்தின் உதவியை நாடுவது ஒன்றும் இது முதல் தடவையல்ல. மகிந்த ஆட்சிக் காலத்தின்போது கூட போர்க் குற்றச் சாட்டுகள் தொடர்பில் சர்வதேச நீதிபதி டெஸ்மட் சில்வாவின் உதவி கோரப்பட்டிருந்தது.

அந்தவகையில், நாமும் எமது விசாரணைக்கு தேவையேற்படின் சர்வதேச நீதிபதிகளின் உதவியைப் பெற்றுக்கொள்ளத் தயாராகவே இருக்கின்றோம். இதன் மூலம், நிச்சயமாக இந்தச் சவாலை வெற்றிகொள்ள முடியும் என்ற நம்பிக்கையும் உள்ளது. உதவி கோருவதால் இது சர்வதேச விசாரணை ஆக முடியாது-என்றார். (து-சி)

# ஜெனிவாத் தீர்மானம் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கமில்லை

## குற்றம் சாட்டுகின்றார் பீரிஸ்

கொழும்பு, ஜன. 30

போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடைய கருத்துகள் வேறுபட்டவையாகக் காணப்படுகின்றன என்று தெரிவித்த முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஜெனிவாவில் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எந்தவொரு தெளிவும் இல்லை என்றும் குற்றஞ் சாட்டினார்.

கொழும்பு, பொரளை என்.எம். பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (து-சி)

# சட்டம் சகலருக்கும் சமம் தேரரின் கைதால் நிரூபிப்பு

## ஆனால் ஹிருணிகாவின் விடயத்தில் சந்தேகம் என்கிறார் திஸ்ஸ விதாரண

கொழும்பு, ஜன. 30



பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நீதிமன்றத்தில் செயற்பட்ட விதத்துக்கு ஏற்ப கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை சட்டம் எல்லோருக்கும் சமமானது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. இருப்பினும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச் சந்திரவுக்கு எதிரான முறைப்பாட்டுக்கு உரிய சாட்சிகள் இருக்கும் நிலையில், அவர் தொடர்பில் சட்டம் செயற்படுத்தப்பட்ட விதம் மக்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு முன்னாள் அமைச்சரும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார். கொழும்பு என்.எம்.பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஞானசார தேரர் விடயத்தில் ஒரு சட்டமும் ஹிருணிகா விடயத்தில் இன்னுமொரு சட்டமும் செயற்படுத்தப்பட்டமையானது, இந்த நாட்டில் சட்டத்தின் செயற்பாடு குறித்து மக்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கலகொட அத்தே ஞானசார தேரர் நீதிமன்றத்தில் செயற்பட்ட விதத்துக்கு ஏற்ப தேரர் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை சட்டம் அனைவருக்கும் சமமானது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

இருப்பினும், ஹிருணிகா பிரேமச் சந்திரவுக்கு எதிரான முறைப்பாட்டுக்கு உரிய சாட்சிகள் இருக்கும் நிலையில், அவர் தொடர்பில் சட்டம் செயற்படுத்தப்பட்ட விதம் மக்களிடையே சந்தேகத்தையும் கேள்வியையும் ஏற்படுத்தியுள்ளது.

ஞானசார தேரர் நீதிமன்றத்தில் செயற்பட்ட விதம் குறித்து நாமும் கவலைப்படுகின்றோம். அந்தநேரத்தில் அவரைக் கைதுசெய்யுமாறு நீதிபதி விடுத்த உத்தரவால் சட்டம் நாட்டில் சகலருக்கும் சமமானது என்பது நிரூபணமாகின்றது.

அது அப்படியானாலும், அரசின் நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பில் சட்டம் உரிய முறையில் செயற்படவில்லை. அவர் கைதுசெய்யப்பட்டு இரண்டு மணி நேரத்துக்குள் பிணையில் விடுதலைசெய்யப்பட்டார்.

இந்த நிலைகளை அவதானிக்கும்போது மக்கள் மத்தியில் நல்லாட்சி அரசில் சட்டம் குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளது- என்றார். (து-சி)

# ஐ.நா. தீர்மானம் குறித்த கொள்கையை வெளியிடவேண்டும் இலங்கை அரசு

## 144 அரசசார்பற்ற நிறுவனங்கள் கூட்டாகக் கோரிக்கை

கொழும்பு, ஜன. 30

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட கருத் தொருமைப்பாட்டுத் தீர்மானம் தொடர்பிலும் குறிப்பாகக் கலப்புப் பொறிமுறை குறித்தும் நிலைப்பாட்டைத் தெளிவு படுத்தும் வகையில் இலங்கை அரசு அதன் கொள்கையை வெளிப்படுத்த வேண்டும் என 144 சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஒன்றுக்கொன்று முரணான வகையில் அறிக்கைகளை வெளியிடுவதை ஜனாதிபதியும் பிரதமரும் நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர்.

போரின் இறுதிக்கட்டங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இடம் பெறவுள்ள விசாரணைகளில் வெளிநாட்டுப் பங்களிப்பு தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் பி.பி.சி.க்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ள கருத்துக்களும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட்ட அரச தரப்பினர் தெரிவித்துவரும் கருத்துக்களும் பரஸ்பரம் முரண்பாடுகளைக் கொண்டுள்ள நிலையிலேயே சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்

இடைமாற்றுக்கால நீதிப் பொறிமுறைக்கான தயாரிப்புகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் பாதிக்கப்பட்டோருடனான கலந்துரையாடல்கள் என்பது அடையாளத்தின் நிமித்தமாக மேற்கொள்ளப்படும் விடயமாக தென்படுவதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முற்றுமுழுதான உள்ளகமயப்பட்ட பொறுப்புக்கூறல் செயன்முறையானது நம்பகத்தன்மையற்றதாக அமைந்திருக்கும் என பாதிக்கப்பட்ட சமூகத்தினர் கருதுவதாகவும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

போரில் காணமற்போனவர்கள் அனைவரும் இறந்துவிட்டதாக பொறுப்புணர் வற்ற வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்திற்கும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கண்டனம் வெளியிட்டுள்ளனர். (து-சி)

# புலம்பெயர்ந்த இலங்கையரும் கருத்துக்களை முன்வைக்கலாம்

## அரசமைப்புக்கான கருத்தறியும் குழு தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 30

புதிய அரசமைப்புக்கு இலங்கையிலுள்ள மக்கள் போன்று வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் தங்களது கருத்துகளையும், அபிலாஷைகளையும் முன்மொழிய முடியும். அதற்கான விசேட இணையத்தளம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று புதிய அரசமைப்புக்கான மக்கள் கருத்தறியும் குழு தெரிவித்துள்ளது.

கொழும்பு விசும்பாயவில் நேற்று முன் தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டது.

இக்குழுவின் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 18ஆம் திகதிமுதல் 22 ஆம் திகதிவரை கொழும்பில் நடைபெற்ற மக்கள் கருத்தறியும் வேலைத் திட்டம் மிகவும் சாதகமாக அமைந்தது. மக்களின் மனங்களில் உள்ள பல்வேறுபட்ட கருத்துகள் அச்சமின்றி முன்வைக்கப்பட்டன. 259 பேர் வாய்மூலம் தமது கருத்துகளைப் பதிவு செய்தனர். 340 பேர் மின்னஞ்சல் ஊடாகவும், 200 பேர் பிரேரணை மூலமும், 70 பேர் தொலைநகல் மூலமும் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதிமுதல் நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கு பல குழுக்களாகச் செல்லவுள்ளோம். கொழும்பு மாவட்டத்தில் மக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்க மேலும் கால அவகாசம் கோரியுள்ளதால் இறுதியாக மீண்டும் மார்ச் மாதம் இறுதிப் பகுதியில் கொழும்பில் கருத்துக்கள் கோரப்படும்.

ஒரு ஜனநாயக நாட்டில் தங்களின் ஆட்சியின் அரசமைப்பை உருவாக்கவும் அது தொடர்பில் தீர்மானிக்கவும் மக்களுக்கே பூரண அதிகாரம் உண்டு. மக்கள் தமது கருத்துகளை அச்சமின்றித் தெரிவிக்கவேண்டும். இது வரலாற்று ரீதியான சந்தர்ப்பம். இந்தச் சந்தர்ப்பத்தை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இலங்கை போன்று சர்வதேச ரீதியில் வாழும் இலங்கையர்களும் தமது கருத்துகளை முன்வைக்க பூரண உரித்துடையவர்களாவர். இவர்களுக்கு நேரடியாகத் தமது கருத்துகளைத் தெரிவிக்கும் வாய்ப்புக்குறைவாகக் காணப்படுவதால் இவர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள விசேட இணையத் தளமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ், சிங்கள, முஸ்லிம் என்று அனைத்து இன மக்களும் தமது ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் உறுதிப்படுத்த உரிமையுடையவர்கள். எனவே, சகல மக்களும் சமத்துவத்துடன் வாழும் அரசமைப்பு கட்டாயமாகத் தேவையாகவுள்ள நிலையில், அனைவரும் தமது கருத்துகளை முன்வைக்க முன்வர வேண்டும்-என்றனர். (து-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா.ரிஷாந்
ஊரிக்காடு.



# யாழ் மாவட்டத்தின் அபிவிருத்திக்கு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் உதவுமா?

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை இடம்பெற இறைவன் திருவருள் கூடியுள்ளான்.

இந்தக் கூட்டம் நீண்ட பல மாத இடைவெளியின் பின்னர் இடம்பெறவுள்ளது. யாழ்.மாவட்டத்தின் தலையாய முக்கியமான அபிவிருத்தித் திட்டங்களை ஆராய வேண்டியமுக்கிய கூட்டம் இதுவாகும். ஒரு கூட்டத்துக்குத் தலைவர் ஒருவரே இருத்தல் வேண்டும். ஆனால் இணைத்தலைவர்கள் மூன்று, நான்கு பேரை நல்லாட் சித் தலைவரான ஜனாதிபதி நியமித்து அவர்களுக்கான கடிதங் களை அனுப்பி வைத்துள்ளார். கடந்த காலங்களில் இணைத் தலைவர்களாக முதலமைச் சரும்மத்திய அமைச்சரும் இணைந்திருந்து நடத்திய கூட் டங்களில் மாவட்ட அபிவிருத்தி தொடர்பாகவோ அல்லது பிர தேச, கிராம அபிவிருத்திக்கான முடிவுகளோ எட்டப்படவில்லை. இதனை யாவரும் அறிவர்.

இந்தக் கூட்டத்துக்கு இணைத் தலைவர்களாக மூன்று, நான்கு பேர் நியமிக்கப்பட்டாலும் அதற்கு வடமாகாண முதலமைச்சர் அல்லது மத்திய அமைச்சர் தலைமை தாங்க வேண் டும்.

இதில் சிரேஷ்ட நிலை, தகுதி என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஒருவருக்குத் தலைமையைக் கொடுத்துக்கொண்டு ஏனையவர்கள் விலகி இருப்பது அபிவிருத்திக்கான முதற்படியாகும்.

மாவட்ட அபிவிருத்திக் கூட்டம் என்பது கடந்த 30 வருட போரில் இடம்பெற்ற அழிவுகளை மீள்கட்டமைப்பது, பொது உட்கட்டுமானங்களை முன்னெடுப்பதற்கானது, அதற்குரிய அரச நிதியைத் தேடுவதற்கான கருத்தொருமிப்பைப் பெற்று மத்தியின் கவனத்துக்குக் கொண்டு வருவது என்பது முதற் பணியாகும்.

வடமாகாணத்தில் அமைந்துள்ள 4 அமைச்சுக்களின் கீழ்வரும் திணைக் களங்கள், கூட்டுத்தாபனங் கள், சபைகள் மற்றும் நிறுவனங்களை எவ்வாறு அபிவிருத்திச் சூழலுக்குள் கொண்டு வந்து விடுவது என்பது தொடர்பில் ஆராய்வதுடன் ஒவ்வொரு துறையிலும் கடந்த காலத்தில் எய்தப்படாத, தேக்க நிலையில் உள்ள விடயங்களை ஆராய்ந்து, அதற்கான தீர்வை ஆராய வேண்டும் என்பது இரண்டாவது பணியாகும்.

இதனைவிட மீளக்குடியமர்ந்த மக் களின் வீட்டுத் தேவை, வீதி, சுகாதா ரம், நலநோம்பு, கல்வி என்பன தொடர்பில் ஆராய்ந்து இதுவரை முழுமை பெறாத விடயங்களுக்கு முன்னுரிமை அளித்து அதற்கான உடனடித் தீர்வுகளை மையப்படுத்த வேண்டும்.

மேலும் யாழ்ப்பாணத்துக்கு மட்டுமே இன்னும் 17,365 வீடுகள் தேவை என அரச அதிபர் வரையறுத்துள்ளார். இதனையும் ஆராய்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

இதனைவிட ஒவ்வொரு பிரதேச சபையின் கீழும் சுமார் 300 முதல் 325 சபை வீதிகள் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக மீள்புனரமைப்பு இன்றி உள்ளன. இதற்கு உடனடியாக ஒரு தீர்வு காணப் பட வேண்டும்.

இதனைவிட காணாமற் போனவர்கள் தொடர்பாக எதிர்காலத்தில் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் ஆராய வேண்டும்.

மேலும் அரச திணைக்களங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவது, புதிய ஆளணிகளை இனங்காணுவது, அடிமட்டத்தில் உள்ள பிரதேச சபைகளை நகர சபைகளாக மாற்றுவது எனப் பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

இதனைவிட மத்திய அரசினால் வழங்கப்பட்டுப் பயன்படுத்தாத நிதி, மேலதிகமாக எமக்குத் தருவிக்கப்பட வேண்டிய நிதி தொடர்பிலும் கரிசனை காட்ட வேண்டும்.

மேலும், வடக்கில் யாழ்.நகரம் அழகு மையமாக மாற்றப்படுகின்ற அதேவேளை, ஏனைய சிறு நகரங்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

எனவே, யாழ்.மாவட்டத்தில் யாழ்.மாநகரம் தவிர்ந்த ஏனைய நகரங்களை மையமாகக் கொண்டு அபிவிருத்திகள், உட்கட்டுமானங்களை ஏற்படுத்துவது தொடர்பாகவும் கூட்டத்தில் ஆராயப்பட வேண்டும்.

எனவே திணைக்களத் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள் கடந்த காலத்தில் தாம் செய்தவற்றை படம்போட்டுக் காட்டாமல் பிரச்சினைகளை மட்டும் வரையறுத்துக் காட்டி உதவ வேண்டும்.

கடந்த காலக் கூட்டங்களை நான் ஞாபகப் படுத்தவில்லை. கூட்டத்துக்குத் தலைமை தாங்குகின்றவர்களும் அதனைச் சிறப்புற ஒழுங்குபடுத்தும் அரச அதிபரும் குறித்த நேரத்துக்குள் மக்களுக்கு என்ன சேவையைச் செய்ய முனையப்போகின்றோம் என்பதில் குறியாக இருக்க வேண்டும்.

இனி அடுத்த கூட்டம் எப்போது என்பது தெரியாத சூழலில் இந்தக் கூட்டத்தை பயனுள்ளதாக ஆக்க வேண்டும்.



2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24★03★1960
உதிர்வு 22★01★2014



திருமதி சரஸ்வதி சிதம்பரநாதன்
(பேபி அன்ரி)
(முன்னாள் முகாமைத்துவ உதவியாளர்,
தேர்தல்கள் திணைக்களம் கச்சேரி, யாழ்ப்பாணம்.)
திதி: அபரபக்க ஷஷ்டி (30.01.2016)
ஈராண்டுகள் சென்றதுவாம் இவ்வுலகை நீத்து
ஈரவிழி காயவில்லை எங்களுக்கு இன்றும்
தூரவழி போனாலும் தீராது அன்பு
தூயவனை வேண்டுகிறோம் அமைதியுற என்றும்
அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் நுழைவுவாயில் கொண்டாட்டம்

## யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள கூடங்கள்


























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் நுழைவுவாயில் கொண்டாட்டம்

## யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள கூடங்கள்


















































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் நுழைவுவாயில் கொண்டாட்டம்

## யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள கூடங்கள்




































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் நுழைவுவாயில் கொண்டாட்டம்

## யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள கூடங்கள்


































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு கோரி வழக்கு

## கூட்டு எதிர்க்கட்சி தீர்மானம்

கொழும்பு. ஜன. 30

உள்ளூராட்சித் தேர்தலை உடனடியாகவே நடத்துமாறு கோரி அடுத்த வாரம் நீதிமன்றம் சென்று நீதிமன்றக் கட்டளை யொன்றைப் பெறுவதற்கு கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளதாக மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெரும தெரிவித்தார். யக்கல முல்லை சுதந்திரக்கட்சிச் செயற் பாட்டாளர்களால் கடந்த வாரம் யக்கல முல்லையில் நடத்தப்பட்ட சந்திப்பொன்றில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார். யக்கல முல்லை சுதந்திரக் கட்சிச் செயற்பாட்டாளர்களின் பங்களிப்புடன் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காகக் கூட்டு முன்னணிக்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பில் ஆராய இந்தச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட் டிருந்தது. (த-22)

# முகாமையாளர் சம்மேளனத்தின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ். முகாமையாளர் சம்மேளனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள புதிய யாப்புக்கான பிரேரணை என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது என யாழ். முகாமையாளர் சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் வளவாளராக வடக்கு, கிழக்கு மாகாணசபை முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் கலந்து கொள்வார். இந்த நிகழ்வுக்கு ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி மேலும் அவர் தெரிவித்துள்ளார். (து)

# நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஜன. 30

திருகோணமலையில் உள்ள நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் அனுசரணையில் நாளை ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாண நினைவுகள் பாகம் - 2 நூல் அறிமுக விழா நடைபெறவுள்ளது

நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஆசிரியர் எஸ்.ஆர். தனபாலசிங்கம் தலைமையில் திருகோணமலை உள்துறை முகவீதியில் உள்ள ஜெசுவிற் ஆங்கில கலாசாலையில் நாளை பிற்பகல் 3.07 மணிக்கு வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள் பாகம் - 2 வெளியிடப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டம் தெரிவித்துள்ளது. (து)

# லயன்ஸ் கழக கலந்துரையாடல்

வடமராட்சி, ஜன 30

வடமராட்சி லயன்ஸ்கழக உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 5மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி வீதியில் அமைந்துள்ள செவிப்புலன் அற்றோர் செயலகத்தில் தலைவர் சே.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது,

இந்தக் கழகத்தின் கடந்தகால செயற்பாடுகள், எதிர்கால கருத்திட்டங்கள், நிர்வாகச் செயற்பாடுகள், கணக் கறிக்கைகள் தொடர்பில் அங்கத்தவர்களுடன் கலந்துரையாடித் தீர்மானம் எடுக்க இருப்பதால் அனைத்து அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் சி.சிவரஞ்சன் கேட்டுக்கொள்கின்றார். (த-35)

# மீன்பிடித் தொழில்நுட்பக் கல்லூரி வடக்கிலும், தெற்கிலும் அமையும்

## கொரிய அரசின் உதவியுடன் நிறுவ இணக்கம்

கொரிய நாட்டு மீன்பிடித் தொழில்நுட்பங்களைக் கொண்டுள்ள இரு தொழில்நுட்பக் கல்லூரிகளை வடக்கிலும், தெற்கிலும் நிறுவுவதற்கு கொரிய அரசு இணக்கம் தெரிவித்துள் ளது.

கொரியாவின் தேசிய மீனவக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் அழைப்பின் பேரில் அந்த நாட் டுக்குப் பயணம் மேற்கொண்ட மீன்பிடி மற்றும் நீர் வளங்கள் அபிவிருத்தி ராஜாங்க அமைச் சர் திலீப்வெத ஆராச்சியினால் இந்த இணக்கம் காணப் பட்டுள்ளது. மீனவர்களுக்கான நவீன வீடு கள், மீன்பிடித் துறையுடன் சம்பந்தப்பட்ட பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் என்பனவற்றுக்கும் கொரியாவின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு மீன்பிடி மற்றும் நீர்வளங்கள் அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்தப் பயணத்தின்போது, இலங்கையின் மீன் பிடித்துறையில் மேற்கொள்ளக்கூடிய முதலீடுகள் குறித்தும் அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்தது. (த-22)

# அரசமைப்பு குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ். சர்வதேச மார்க்சிய குழுவினால் ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்கும் இடையேயான கடமைகள், உரிமைகள், பொறுப்புக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் சமூக ஒப்பந்தமாக அரசமைப்புத் திட்டம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடல் இல. 361, ஸ்ரான்லி வீதியில் உள்ள டி.எம்.ஐ கல்வி நிறுவனத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. (து)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழில் தேசிய கீதம் இசைப்பிக்க மனம் இல்லாமை நல்லிணக்கமா...?

இலங்கையின் 68 ஆவது சுதந்திர தினம், எதிர்வரும் நான்காம் திகதி வியாழக்கிழமை ஆகும். வழமையாக அரசு நடத்தும் சுதந்திரதின விழாக்களில், நாட்டின் தேசிய கீதம் சிங்களத்தில் மட்டுமே இசைக்கப்படுவது, சரித்திரம் என்றாகி விட்டது.

சுதந்திர தின பிரதான விழாவில், தேசிய கீதம் தமிழிலும் இந்தமுறை இசைக்கப்பட வேண்டும் என்ற நியாயமான கோரிக்கை உயர்ந்து மேலெழுந்து உள்ளது.

நாட்டில் நல்லிணக்கத்தைக் கொண்டுவரும் செயற்பாடுகளில் ஒன்றாக, அதன் முன்னோட்டமாக, பிரதான சுதந்திரதின வைபவத்தில், தலைநகர் கொழும்பில் நடைபெறும் விழாவில்,தமிழிலும் சுதந்திர தின கீதம் இசைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டதாகத் தகவல்கள் உள்ளாடும், கள்ளாடுமாக வெளிவந்திருந்தன.

ஆனால், அமைச்சர்களில் மிகப் பலரும் அதற்கு ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்கள் என்பது பிந்திய செய்தி, தகவல்.

இது விடயத்தில், விவகாரமாக மாற்றப்பட்டுள்ள தமிழில் தேசிய கீதத்தை இசைக்கும் முடிவு, தலைகீழாக்கப்பட்டு விடும் என்ற நிலையே உயர்ந்து நிற்கிறது; மங்கல் இன்றித் தெரிகிறது!

இந்த நிலை குறித்து பிரதம மந்திரியுடன் கலந்து பேசிய பின்னர் ஒரு தீர்மானத்துக்கு-முடிவுக்கு வரப்படும் என்று பட்டும் படாமலும் வாய் திறந்து இருக்கிறார் ஜனாதிபதி.

தேசிய கீதத்தை இரண்டு மொழிகளிலும், சுதந்திர தின விழாக்களில் இசைப்பது குறித்து கன்னை பிரிந்து இரண்டு தளங்களில் நிற்பதாகத் தகவல்கள் "பெருக்கெடுத்து" மேலெழுந்து வருகின்றன!

இந்த நாட்டுக்கு 1948 ஆம் ஆண்டில் சுதந்திரம் கிடைத்த போதிலும், மூன்று வருடங்களுக்குப் பின்னரே (1951 இல்) சிங்கள மொழியில் தேசியகீதம், அரசமைப்பின் ஊடாக இணைக்கப்பட்டது.

அந்தக் கீதத்தை அழகு தமிழில் மொழி பெயர்த்தவர் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த முதுதமிழ்ப்புலவர் முருகுப்பிள்ளை நல்லதம்பி என்ற பெரும் புலவனார்.

தேசிய கீதம், சிங்கள மொழியில் மட்டுமே இசைக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையும் அதனூடான அரசியல் வன்மமும், 2009 ஆம் ஆண்டின் பின்னர் மேலுயர்ந்தது.

இப்போது அதனை மாற்றி, தமிழிலும் இசைக்க வேண்டும் என்ற கருத்து, நல்லிணக்க அரசின் ஆட்சியில் முளைவிட்டிருக்கிறது.

இனவாதம் கரைபுரண்டு ஓடும் இந்த நாட்டில், எந்த விடயத்திலும் நல்லிணக்கமும், இன ஒற்றுமையும் துளிர்ப்பதற்கான தெளிந்த அரசியல் முளைப்பது என்பது நூறில் ஐந்து வீதமேனும் எதிர்பார்க்கக் கூடியதாக இல்லையே....!

இந்தப் போக்குத் தொடர்ந்தால், ஒரு காலப்போக்கில் ஏனும், நாட்டின் அனைத்துப் பிரசைகளும் அதன் சொந்தக்காரர்களே என்ற மக்கள் ஆட்சி கழுத்தை நீட்டிப் பார்ப்பதற்கு, எந்தப் புலமோ, வாய்ப்போ வாராது என்றாகிவிடும்!!

# இலங்கையின் புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்தமும் இனப்பிரச்சினைக்கான தீர்வும்

கந்தப்பு பரமேஸ்வரன்
ஆசிரியர்

15 ஆம் நூற்றாண்டின் பின்னர் அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர்களுக்குஅமெரிக்கா தாயகமாகியது. அவ்வாறே 16 ஆம்,17 ஆம்நூற்றாண்டுகளின் பின்னர் கனடா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் குடியேறிய ஐரோப்பியர்களுக்கு இந்த நாடுகள் தாயகமென்கிறார்கள். மத்திய காலத்தில் பாகிஸ்தானுக்குள் புகுந்த முஸ்லிம்களுக்கு பாகிஸ்தான் தாயகமென்றால் குறைந்த பட்சம் கி.பி.13 ஆம் நூற்றாண்டில்தமக்கெனத்தனியான அரசுடன் வாழ்ந்தவர்கள் என்ற தெளிவான ஆதாரத்தைக் கொண்ட தமிழர்கள் தமது பிரதேசத்தைத் தாயகம் என்று கூறுவதில் என்ன தவறு. இதனை இலங்கை அரசும், சர்வதேச நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையும் புரிந்து கொள்ள வேண்டும். போர்களும் கலகங்களும் ஒரு நாட்டின் அரசியல் சுதந்திரத்தையும் பொருளாதார சுதந்திரத்தையும் அழித்து விடலாம்.

> "கடந்த அரை நூற்றாண்டு காலமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட போர்ச்சூழல் இன்று நீங்கிய போதிலும் போரினால் ஏற்படுத்தப்பட்ட வடுக்கள், வலிகள், சுமைகள் இன்றும் மக்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. சிறைகளில் விசாரணைகளின்றி இளைஞர், யுவதிகள் வாடுகின்றனர்."

ஆனால், அந்த நாட்டு மக்களுக்கு கௌரவமாக வாழ வேண்டும் என்ற உள்ளார்ந்த உணர்வு இருக்கும் வரைக்கும் அவர்களின் அபிலாசைகளையும் உரிமைகளையும் சிதைத்து விடவோ அழித்து விடவோ முடியாது. இது கடந்த கால அனுபவங்களின் பகிர்வு.

### அழகிய இலங்கைத் தீவு

அழகிய இலங்கைத் தீவில் இறந்தகாலம் எமக்கு உரிமையாக்கிய பாரதூரமான துன்பங்களுடன் போராடி ஒவ்வொரு நாளையும் கழிப்பது இலங்கையர்களின் விதியாகி விட்டது. மேலெழுந்தவாரியாகக் கூறினால் அது போர் ரீதியான துயரம்போலத் தென்பட்டாலும் அதனடியில் மறைந்திருப்பது இந்தநாட்டில்உண்மைஉரிமையாளர்களை அவர்தம் உரிமைகளை அனுபவிப்பதிலிருந்து நீக்கி வைத்திருக்கும் துயரமே. இதனை ஒரு வார்த்தையில் சொன்னால் இந்த நாட்டில் அதிகாரப் பகிர்வு தொடர்பான பிரச்சினையே நாட்டின் தேசியப் பிரச்சினையாக இருக்கின்றது. இலங்கையின் அரசியல் பிரச்சினையின் யதார்த்தம் என்னவென்றால் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் உண்மையான நல்லிணக்கத்தை இந்த நாட்டில் ஏற்படுத்த முடியாது என்பதாகும். இந்தக் கருத்து வாதத்தை இன்று சர்வதேச நாடுகளும் உணரத் தொடங்கிவிட்டது. இந்த அரசியல் உரிமைகள், அபிலாசைகள் என்பன அபிவிருத்தி வாய்ப்புக்களுடன் இணைந்ததாகவே அமைய வேண்டும் என்பதே தமிழர் தரப்பு வாதமாகும்.

### ஒற்றையாட்சி முறையில் தமிழர்களுக்குப் பயனில்லை

ஒற்றையாட்சி முறைமையினுள் சிறுபான்மை இனங்களின் உரிமைகள் குறிப்பாக அரசியல் சுதந்திரம் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் மிக சொற்பமே என்ற கருத்தியல் தமிழ் மக்களின் மனங்களில் ஆழமாகப் பதிந்திருப்பதனாலேயே ஒற்றையாட்சி முறையைத் தமக்கு நட்பான முறையாக ஏற்றுக் கொள்ளவில்லை. வடக்கு, கிழக்கு இணைந்த தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடனும் சுயகௌரவத்துடனும் வாழ்வதையே தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள், கடந்த அரை நூற்றாண்டுகாலமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட போர்ச்சூழல் இன்று நீங்கிய போதிலும் போரினால் ஏற்படுத்தப்பட்ட வடுக்கள், வலிகள், சுமைகள் இன்றும் மக்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. சிறைகளில் விசாரணைகளின்றி இளைஞர், யுவதிகள் வாடுகின்றனர். போரின் போது காணாமற் போனவர்கள், சொந்த இடங்களில் மீள் குடியேற்றமின்றி இன்றும் நலன்புரி நிலைய வாழ்வை அனுபவிப்பவர்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவற்றைவிட நில ஆக்கிரமிப்புக்களும் அவற்றுக்கான முனைப்புக்களும் நாளுக்குநாள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய செயற்பாடுகள் இன நல்லிணக்கத்துக்கு முட்டுக்கட்டையாகவே அமைந்துவருகின்றது. இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக கடந்த கால அரசுகள் மாவட்ட சபை, மாகாண சபை, சுயாட்சி முறை, 13 ஆவது திருத்தம், சமஷ்டி முறை எனப் பல்வேறு வடிவங்களில் பிரச்சினைக்கான தீர்வை முன்வைத்த போதிலும் அதன் உள்ளடக்கம் மற்றும் அரசியல் உரிமைகள் என்பன சிறுபான்மை இனங்கள் கோரி நிற்கும் உரிமையுடனான அபிலாசைகளை ஈடுசெய்ய முடியாமல் போய்விட்டது. இதனாலேயே போர் நிறுத்தமும் போரும் மாறிமாறி நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டது. இதனைத் தற்போது ஆட்சிப்பீடமேறியிருக்கும் நல்லாட்சி அரசு புரிந்து கொள்வது அவசியமாகும்.

### ஐரோப்பியர்களின் ஆதிக்கம்

நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு ஐரோப்பியர்களின் ஆதிக்கக் கொடிகள் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பறக்கத் தொடங்கியது. ஆனால் இன்றும் அந்தக் கொடிகள் இறக்கப்படாமல் பறந்து கொண்டிருக்கின்றன. ஏகாதிபத்தியத்தின் ஒரு வடிவமாகிய காலனித்துவம் தொடர்ந்தும் உதயமாகிய வண்ணமாக இருக்கின்றது.

> **ஏகாதிபத்தியத்தின் ஒரு வடிவமாகிய காலனித்துவம் தொடர்ந்தும் உதயமாகிய வண்ணமாக இருக்கின்றது. ஒரு நாட்டுக்கெதிராக இன்னொரு நாட்டைத் தூண்டி விட்ட பிராந்திய அரசுகளில் ஓர் அரசுக்கெதிரான இன்னொரு அரசுக்கு ஆயுதங்கள் வழங்கிப் பகைமையை உரு வாக்கிப் பகைமைத் தீயில் மேலைத்தேசம் இன்றும் குளிர் காய்ந்து கொண்டிருக்கின்றது.**

ஒரு நாட்டுக்கெதிராக இன்னொரு நாட்டைத் தூண்டிவிட்ட பிராந்திய அரசுகளில் ஓர் அரசுக்கெதிரான இன்னொரு அரசுக்கு ஆயுதங்கள் வழங்கிப் பகைமையை உருவாக்கிப் பகைமைத் தீயில் மேலைத்தேசம் இன்றும் குளிர் காய்ந்து கொண்டிருக்கின்றது. இதுவே இலங்கையிலும் இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

அன்று பயங்கரவாதம் என்று முள்ளிவாய்க்காலின் இறுதிப் போரின்போது பல்லாயிரக்கணக்கான உயிர்கள் மடிந்தும் அங்கவீனப்பட்டு, காணாமற் போயிருந்தபோது கண்களை மூடிக் கொண்ட சர்வதேச நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையும் இன்று தீர்வுக்கான வழிவகைகளைத் தேடிக்கொண்டிருக்கின்றன. இதுவே யதார்த்த உண்மையாகும்.

எனவே அரசு இதனை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். கடந்த கால அரசுகள் விட்ட தவறை திருத்தியமைத்து நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் அரசியல் அபிலாசைகளையும் உரிமைகளையும் மதித்து சமஷ்டி முறையில் அமைந்த அரசியல் சீர்திருத்தம் முன்வைப்பது கட்டாய கடமையாகும்.

இலங்கையின் அரசியல் அதிகாரப் பிரயோகத்தில் மத்திய அரசு மட்டுமன்றி பிராந்திய அரசுகளும் பங்குபற்றும் விதத்தில் அதிகாரமானது புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். இதன் அடிப்படையில் பொருத்தமான சமஷ்டி முறை அமைதல் வேண்டும்.

### சமஷ்டிமுறையே சிறந்தது

குறிப்பாக அமெரிக்கா, கனடா, சுவிஸ், ஜேர்மனி, ஆபிரிக்கா போன்ற பல்லின சமூக இன மக்கள் வாழ்கின்ற நாடுகளில் இந்தச் சமஷ்டி முறை சிறப்பான நடைமுறையில் காணப்படுவதுடன், இந்தியாவில் 28 மாநிலங்களைக் கொண்டதான அரை சமஷ்டி முறையும் காணப்படுகிறது. மேற்குறிப்பிடப்பட்ட நாடுகளின் அரசியல் ரீதியான அதிகாரப் பகிர்வைப் போன்றதொரு சமஷ்டி முறையே இலங்கையிலும் மேற்கொள்வதன் மூலம் ஐக்கியப்பட்ட ஒரு நாட்டை நோக்கி இன்பமாக வாழும் ஒரு சமூகமாக மாறி எதிர்காலம் பற்றிய ஓர் எதிர்பார்ப்பை இலங்கைத் தீவில் துளிரவைக்க முடியும் என்பது திடமாகும்.

தற்போது காணப்படும் அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்வதற்கு தமிழ் அரசியல் கட்சிகள் முனைப்புடன் செயலாற்ற வேண்டும். தம்மிடையே உள்ள கருத்து முரண்பாடுகளைக் களைந்து அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு உள்நாட்டுக்குள்ளும் வெளிநாட்டுக் குள்ளும் தீர்வு தொடர்பான விடயங்களை ஆராய்ந்து சர்வதேசத்தின் அனுசரணையுடன் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு முன்வர வேண்டும். இதுவே காலத்தின் தேவையும் மக்களின் வேண்டுதலுமாகும்.

---

## மறைந்துபோன மஞ்சள் கோடுகள்

யாழ்.நகரில் உள்ள பிரதான வீதிகள் சிலவற்றில் போடப்பட்டுள்ள மஞ்சள்கடவைக் கோடுகள், காலங்கடந்த நிலையில் அழிந்து காணப்படுகின்றன. இதன் நிமித்தம் வீதிகளில் தூரத்தே வரும் வாகன சாரதிகளும் மஞ்சள் கோடுகள் தெரியாத நிலையில் அதிவேகமாகத் தங்கள் வாகனங்களைச் செலுத்துவதை அவதானித்துக்கொள்ள முடிகிறது. பாதசாரிகள் தங்கள் தேவைகளின் பொருட்டு குறித்த கடவைகளினூடாகக் கடக்க முற்படும்போது விபத்துக்களையும் உயிர்ச் சேதங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, வீதி அபிவிருத்தித் துறையோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வீதிகளில் தேய்ந்துபோய்க் கிடக்கும் மஞ்சள் கோடுகளைத் திரும்பவும் புதுப்பிப்பதன் மூலம் பாதசாரிகள் மற்றும் வாகன சாரதிகளுக்கு ஏற்படும் விபத்துக்களையும் உயிர்பொருள் சேதங்களையும் தடுக்க முடியும்; தவிர்க்கவும் முடியும்.

அலெக்ஸ் பரந்தாமன்
புதுக்குடியிருப்பு

## சட்டவிரோத மீன்பிடியால் சீரழியும் மன்னார் பேசாலை கடற்பரப்பு

கடந்த 12.01.2016 ஆம் திகதி மன்னார் வந்த கடற்தொழில் அமைச்சர் டைனமைற் பாவித்து மீன்பிடித்தால் எந்தத் தயவும் இன்றி உடன் கைது செய்யப்படுவார்கள். இத்தகைய மீன்களை விற்பனை செய்வது சட்டவிரோதம். அவர்களும் கைது செய்யப் படுவார்கள் என்று சொல்லி போய் அடுத்த நாளே மன்னார் கடலில் காட்டாஸ்பத்திரி, பேசாலை, பள்ளிமுனையில் சுருக்கு வலை சம்மாட்டிமார்கள் புதிய முறையில் சுருக்கியவுடன் டைனமைற் அடித்து மீன்களை (பேச்சாலை, சூடை, சாலை) போட் கணக்கில் அள்ளி கரைக்குக் கொண்டு வருகிறார்கள். மிகுதி மீன்கள் கடலிலே மிதந்து ஒரு வகை எண்ணெய் கடலிலே படிந்து காணப்படுகின்றது. கடற்பரப்பு சீரழிந்து ஏனைய சிறு மீன் பிடியாளர்கள் அனைவரும் சொல்ல முடியாத கஷ்டத்தை அனுபவித்தும் வருகிறார்கள்.

மன்னார் கடற்றொழில் திணைக்களம் தொடக்கம் அனைத்துத் தரப்புக்கும் அறிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சிறு மீன்பிடியாளர்கள் தொழிலைக் கைவிட்டு வேறு வழியின்றி பிள்ளைகளை படிக்க வைக்கவும் ஒரு வேளை உணவுக்கும் வழியின்றி இந்த ஆண்டு மீன் பிடிக்கும் காலம் தொடங்கி வருமானம் இல்லாமல் ஏமாற்றத்துடன் காத்துக் கிடக்கிறார்கள். இந்தநிலை தொடருமானால் இவர்களின் நிலை படுமோசமான கட்டத்தை எட்டி விடும்.

மாகாண மீன்பிடி அமைச்சர் உடனடியாக இதில் தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்வதுடன் இது தொடர்பாக மத்திய கடற்தொழில் அமைச்சருக்கும் தெரியப் படுத்தவேண்டும்.

காட்டாஸ்பத்திரி, பேசாலை, பள்ளிமுனை பகுதிகளுக்கு வந்து பார்த்தால் தெரியும். மதியம் ஒரு மணிக்குப் பிறகு டைனமைற் மீன்கள் போட் கணக்கில் இறக்கப்படுகிறது. இதனால் வியாபாரிகள் பெருமளவான பணம் சம்பாதிக்கிறார்கள். ஏழைகள் வயிறு காய்கிறது. தயவு செய்து சம்பந்தப் பட்டவர்கள் தடை செய்யப்பட்ட சுருக்கு வலை, டைனமற்றை உடன் நிறுத்தி இந்தக் கடற்பரப்பில் அனைவரும் வாழ வழி அமைத்துத் தரவேண்டும் எனக் கேட்டு நிற்கின்றோம்.

மன்னார் மாவட்ட
சிறுமீன் பிடியாளர்கள்
(கரைவலை, பாச்சுவலை,
வளைச்சல் வலை, கெப்பக்காரத்
தொழிலாளர்கள்)

## மோசமான நிலைக்கு மாறியுள்ள விளாவெளி இந்து மயானம்

விளாவெளி இந்து மயானமானது இன்று இறுதிச் சடங்குகளை மேற்கொள்ள முடியாத அளவுக்கு மோசமான நிலையில் காணப்படுகின்றது. மயானத்துக்குச் செல்லும் பாதையானது இருமருங்கிலும் முற்புதர்களும் பற்றைகளும் வளர்ந்து குறுகிய நிலையில் காணப்படுகின்றன. அந்த இடத்தில் கழிவுகளையும் இறந்த விலங்குகளின் உடல்களையும் வீசுவதால் எப்போதும் துர்நாற்றம் வீசும் இடமாகக் காணப்படுகிறது. இத்தனைக்கும் அந்த மயானத்துக்கென அமைக்கப்பட்டுள்ள அபிவிருத்திச் சபை உடல்களை எரிப்பதற்கு அனுமதிக் கட்டணமாக 500 ரூபாவை அறவிட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். குறித்த மயானத்தின் இந்த நிலைக்குக் காரணம் அந்த மயானம் எந்தப் பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் உள்ளது என எவருக்கும் தெரியாதுள்ளது தான். ஆனால் இந்த மயானமானது இடப்பெயர்வு காலத்துக்கு முன்னர் வலி.தென் மேற்கு பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு வலி.மேற்கிலுள்ள பொது அமைப்புக்களும் எமது சபையும் தமது எதிர்ப்பை வெளியிட்டதுடன் மீண்டும் இந்த மயானத்தை வலி.மேற்கு பிரதேச சபையின் கீழ் கொண்டுவருவதற்கு எடுத்த நடவடிக்கைகள் அனைத்தும் பயனற்றுப் போய் விட்டது. எனவே சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் மேற்படி மயானத்தை புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கு.குணஸ்ரீ– சங்கானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.சாந்தன்
சத்தியகீர்த்தி (எம்.ஏ)

# மகாத்மா காந்தியடிகளின் 68 ஆவது சிரார்த்த தினம் இன்றாகும்

ஜனவரி 30,1948அமெரிக்க விமானப்படையில் பணியாற்றி ஓய்வுபெற்றவரான வின்ஸென்ட் ஷீன், காந்தியைச் சந்திக்க வந்திருந்தார். அன்றைய மாலை நிகழ்ச் சியை அவர் இவ்வாறு விவரிக் கிறார்.

எப்பொழுதுமே எதற்கும் காந்திஜி கால தாமதமாக வரமாட்டார். நேரத்துக்கு வந்து விடுவார்.(ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர்கள் வண்டியனுப்பத் தாமதமாகி விட்டால் சைக்கிளில் விரைந்து வந்தவர்அவர்) அன்று சில நிமிடங்கள் தாமதமாகவே வந்தார். தன் இரு கரங்களையும் உயிருள்ள கைத்தடிகளாக இரு பெண்களின் தோள்களின் மீதும் போட்டுக் கொண்டு மெதுவாகப் பிரார்த்தனை மேடையை நோக்கிப் போய் கொண்டிருந்தார். திடீரென்று துப்பாக்கி வெடிக்கும் சப்தம் மூன்று, நான்கு முறை கேட்டன.(சுட்டவன் கோட்ஸே என்ற இந்து) 'ஐயோ மகாத்மா' என்று மக்கள் அலறினர்.

எனது மண்டையிலே அலை மோதுவது போலிருந்தது. கடலில் புயல் வீசினால் கொந்தளிப்பு ஏற்படுவதுபோல என் தலைக்குள்ளேயும் அலைகள் கொந்தளித்து எழுவது போலிருந்தன. காந்திஜியின் உயிர் என்னிடமிருந்தும் பிரிவது போலிருந்தது. மகாத்மாவுக்காகக் குறுக்கிட்டு நான் மரணமடையத் தவறி விட்டேனே.. இது அவர் இதய ஒலி மட்டுமல்ல. இந்தியாவின் இதயஒலி. உலகில் உள்ள நல்லவர்களது ஆத்மாவின் குரல்!

எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்துவிடும் அரசியல் களத்திலே உண்மைக்காக எதையும் தியாகம் செய்யும் இதயதீபம் அணைந்து விட்டது.

நாட்டு விடுதலைக்காகப் பதினேழு முறை சிறை சென்றவரின் இதயக் கூட்டிலிருந்து இனிய உயிர்ப்பறவை பறந்து போய்விட்டது. வேதமும் கீதையும் ஒலித்த குரல், குர்ஆனும் பைபிளும் பேசிய குரல், மௌனத்தில் நிரந்தரமாக ஆழ்ந்துவிட்டது.

விடுதலைக்குத் துப்பாக்கி தூக்கிப் போராட விரும்பிய வ.வே.சு.ஐயர் போன்றவர்கள் கையிலும் தக்ளியை ஏந்த வைத்த காந்தி துப்பாக்கிக்கே இரையாகி விட்டார்.

இந்திய தேசத்தின் தந்தை அகிம்சாமூர்த்தி என்று போற்றப்பட்ட மோகனதாஸ் கரம்சந்த்காந்தி, காபா காந்தி–புத்லிபாய் தம்பதியருக்கு 1869 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இரண்டாம் திகதி மகனாகப் பிறந்தார். சிறுவயதில் அவர் பார்த்த அரிச்சந்திரன் நாடகம் அவர் மனதில் உண்மையின் உயர்வை ஆழமாகப் பதித்தது. இளமைக் காலத்தில் மிகவும் நல்லவராகவும் நேர்மையானவராகவும் காந்தி விளங்கி வந்தார்.

காந்திக்கு பதின்நான்கு வயதாக இருக்கும்போது திருமணம் நடந்தது. 1883 ஆம் ஆண்டு கஸ்தூரி பாய் காந்தியின் மனைவியானார். அவருக்கும் ஏறக்குறைய காந்தியின் வயதுதான். கஸ்தூரி பாயின் சிறப்பு என்ன வென்றால் கணவனின் போக் குக்கு தன்னையும் மாற்றிக் கொண்டமைதான்.

பாடசாலைப் படிப்பு முடிந்ததும் லண்டன் சென்று சட்டம் படித்து வருவதுதான் பிழைப்புக்கு நல்லவழி என்று பெரியவர்கள் தீர்மானித்துள்ளார்கள். இங்கிலாந்தில் கடுங் குளிர், மேலை நாட்டு நாகரிகம், நீதி நெறிக் கோட்பாடு களிலும் அங்கு வேறுபாடு உண்டு. அம்மா புத்லிபாய்க்கு அன்பு மகனை ஆறாயிரம் மைலுக்கு அப்பால் கண்காணாத தேசத்துக்கு அனுப்ப முழுவிருப்பம் இல்லை. தாயின் பயம் காந்திக்குத் தெரியும். மது அருந்த மாட்டேன், மாமிசம் சாப்பிட மாட்டேன், பிற மங்கையரை நாட மாட்டேன் என்ற மூன்று சத்தியங்கள் செய்து கொடுத்தார் காந்தி. லண்டனில் பாரிஸ்டர் பட்டம் பெற்றுத் திரும்பிய காந்தி, தாதா அப்துல்லா என்ற வணிகரின் வக்கீலாக தென்னாபிரிக்காவுக்குப் புறப்பட்டார். அங்கு நிறவெறி, இனவெறி, ஆதிக்க வெறி என்பன மிக மோசமாக இருந்தன. அங்கு அவர் டர் பன் நகரிலிருந்து பிரிட்டோரியா நகரம் செல்லும்போதுதான் ரயிலில் முதல் வகுப்பு டிக்கட் வாங்கி யிருந்தும் வெள்ளையருக்கு கறுப்பு மனிதர் காந்தி மீது இருந்த வெறுப்புக் காரணமாக முதல் வகுப்பிலிருந்து பெட்டி படுக்கை யோடு வெளியேற்றப்பட்டார்.



தென்னாபிரிக்கா விலிருந்து இந்தியா திரும்பிய காந்தி நாட்டின் சுதந்திரத்துக்காகவும் சமூக விடுதலைக்காகவும் போராடினார். காந்தியின் விரதம் பல ஆலயங்களில் ஹரிஜன ஆலயப் பிரவேசத்துக்கு வழி செய்தது. 1933 இல் ஹரிஜன என்ற பத்திரிகை ஒன்றையும் காந்தி தொடங்கினார். சபர்மதி ஆச்சிரமம் ஹரிஜனத் தொண்டர்களின் நிர்வாகத்தில் விடப்பட்டது. அதே ஆண்டு தம் ஆத்ம பரிசோதனைக்காக 21 நாள் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் இருந்தார். தனக்காக உணவு தவிர்ப்பு, அரசியல் ஆயுதமாக உணவு தவிர்ப்பு, இந்து–முஸ்லிம் ஒற்றுமைக்காக உணவு தவிர்ப்பு, ஒற்றுமைக்காக உணவு தவிர்ப்பு என விரதங்களை மேற் கொண்டார்.

காந்தியின் வாழ்வு புரட்சிகரமானது; உயர் இலட்சியங்களோடு கூடியது. அவர் வாழ்வுதான் அவர் சொல்லும் செய்தி.




## விருச்சிகம்

பார்ப்பதற்கு வெகுளிபோல் இருந்தாலும் எடுக்கும் காரியங்களை சிறப்புடன் செய்துமுடிக்கும் ஆற்றல் கொண்ட விருச்சிக ராசி நேயர்களே! இந்த 2016–ஆம் ஆண்டு முழுவதும் ஏழரைச் சனியில் ஜென்மச் சனி தொடருவதால் உங்களுக்கு ஆரோக்கியரீதியாக பிரச்சினைகள், எடுக்கும் முயற்சிகளில் தடை தாமதங்கள் உண்டாகக் கூடும் என்பதால் எதிலும் சற்று கவனமுடன் செயல்படுவது நல்லது. 08–1–2016 முதல் ஜென்ம ராசிக்கு 4–ல் கேது 10–ல் ராகு சஞ்சாரம் செய்ய விருப்பதால் குடும்பத்திலுள்ளவர்களையும் உற்றார்– உறவினர்களையும் அனுசரித்து நடப்பது நல்லது. தேவையற்ற அலைச்சல், பதற்றங்கள் அதிகரிக்கும். அசையும்– அசையா சொத்துக்களால் வீண் செலவுகள் ஏற்படும். தொழில், வியாபாரம் செய்பவர்கள் எதிர்நீச்சல் போட்டால்தான் ஏற்றம் பெறமுடியும். உத்தியோகஸ்தர்களும் படிப்படியான முன்னேற்றத்தை அடைவார்கள். ஆண்டின் முற்பாதியில் 10–ஆம் வீட்டில் சஞ்சரித்து பொருளாதாரரீதியாக நெருக்கடிகளை ஏற்படுத்தும் குரு பகவான் 02–08–2016 முதல் லாப ஸ்தானமான 11–ஆம் வீட்டுக்கு மாறுதலாகவிருப்பது அனுகூலமான அமைப்பாகும். இதனால் ஓகஸ்ட் மாதத்திற்கு பண வரவுகள் சிறப்பாக அமையும். திருமண சுபகாரியங்கள் கைகூடி மகிழ்ச்சியளிக்கும்.

சிலருக்கு புத்திர பாக்கியமும் உண் டாகும். கொடுக்கல்– வாங்கலில் சரளமான நிலை யிருக்கும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு இருந்து வந்த நெருக்கடிகள் குறையும். புதிய வாய்ப்புகள் கிடைக்கப்பெறும்.

### உடல் ஆரோக்கியம்

இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஆரோக்கியரீதியாக பாதிப்புகள், மருத்துவச் செலவுகள் அதிகரிக்கக்கூடிய சூழ்நிலைகள் உண்டாகும். தேவையற்ற பயணங்களால் அலைச்சல், பதற்றம் அதிகரிக்கும் என்றாலும் ஓகஸ்ட் மாதம் ஏற்படவிருக்கும் குருப்பெயர்ச்சியால் ஓரளவுக்கு சாதகமான பலன்களை அடையமுடியும். குடும்பத்தில் இருக்கக்கூடிய மருத்துவச் செலவுகள் படிப்படியாகக் குறையும்.

### குடும்பம், பொருளாதார நிலை

குடும்பத்தில் சிறுசிறு வாக்குவாதங்கள், பிரச்சினைகள் தோன்றி னாலும் ஒற்றுமை குறையாது. பணவரவுகள் ஆண்டின் தொடக்கத்தில் சுமாராக இருந்தாலும் ஓகஸ்ட் மாதம்முதல் சிறப்பாக இருக்கும். தடைப்பட்ட சுபகாரியங்கள் கைகூடி மகிழ்ச்சியளிக்கும். நினைத்த காரியங்கள் நிறைவேறும். நெருங்கியவர்களை அனுசரித்து நடப்பது, தேவையற்ற செலவுகளைக் குறைப்பது நல்லது.

### உத்தியோகம்

பணியில் சுமாரான நிலை இருக்கும். சிறுசிறு தேவையற்ற பிரச்சினைகளைச் சந்திக்க நேர்ந்தாலும் எதையும் சமாளித்து ஏற்றம் பெற முடியும். இந்த ஆண்டின் தொடக்கத்தில் எதிர்பாராத இடமாற்றங்களால் அலைச்சல்கள் அதிகரித்தாலும் பிற்பாதியில் அனுகூலப் பலனை பெறமுடியும். உடன் பணிபுரிபவர்களை அனுசரித்து நடந்துகொண்டால் வேலைப் பளு குறையும்.

### தொழில், வியாபாரம்

தொழில், வியாபாரம் செய்பவர்கள் எதிலும் சற்று சிந்தித்துச் செயல்படுவது நல்லது. வரவுக்குமீறிய செலவுகளும் வேலையாள்களால் பிரச்சினைகளும் ஏற்படும். போட்டிகளைச் சமாளிக்கவேண்டியிருக்கும். ஓகஸ்ட் மாதம்முதல் எதிலும் ஓரளவுக்கு மேன்மைகள் உண்டாகும். நிறையப் போட்டிகளை எதிர்கொள்ள நேரிட்டாலும் எதிர்பார்த்த லாபங்களைப் பெறமுடியும்.

### கொடுக்கல்- வாங்கல்

தரகு முகவர் நிறுவனங்கள், ஒப்பந்தங்கள் போன்றவற்றில் ஆண்டின் தொடக்கத்தில் வீண் விரயங்களை எதிர்கொண்டாலும் ஓகஸ்ட் மாதம் முதல் நெருக்கடிகள் படிப்படியாகக் குறையும். கொடுக்கல்– வாங்கலில் சரளமான நிலை இருக்கும். கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்ற முடியும் என்றாலும் உங்களுக்குள்ள வம்பு வழக்குகளில் இழுபறி நிலையே நீடிக்கும்.

### அரசியல்

உங்களுக்கு ஆண்டின் தொடக்கத்தில் சோதனைகளும் வேதனைகளும் ஏற்படும். எடுக்கும் எந்தவொரு காரியத்திலும் அதன் முழுப்பயனை அடைய முடியாதென்றாலும் ஓகஸ்ட் மாதம் முதல் ஓரளவுக்கு சாதகப்பலனை பெறமுடியும். சிறுசிறு ஆரோக்கிய பாதிப்புகளும் ஏற்படும். உடனிருப்பவர்களை அனுசரித்து நடப்பது, பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பதும் மிகவும் நற்பயனை உண்டாக்கும்.

### கலைஞர்கள்

தேவையற்ற அலைச்சல்கள், பிரச்சினைகள், பெயர், புகழ் மங்கக்கூடிய சூழ்நிலைகள் யாவும் ஆண்டின் தொடக்கத்தில் இருந்தாலும் பிற்பாதியில் ஓரளவுக்கு வாய்ப்புகளைப் பெறமுடியும். எதிர்பார்க்கும் உதவிகளும் கிடைக்கும். பெரிய அளவில் முன்னேற் றங்கள் ஏற்படாவிட்டாலும் பெயரைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். பயணங்களால் அலைச்சல்கள், உடல் நலக்குறைவுகள் உண்டாகி மருத்துவச் செலவு ஏற்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் புற்றுநோயால் தினமும் 7,500 பேர் சாவு

## பொது மக்கள் சுகாதார அறிக்கையில் தெரிவிப்பு

பீஜிங், ஜன.30

சீனாவில் புற்றுநோயால் தினமும் 7 ஆயிரத்து 500 பேருக்கு மேல் உயிரிழப்பதாகவும், தினமும் கிட்டத்தட்ட 12 ஆயிரம் புதிய புற்றுநோயாளர்கள் இனம் காணப்படுவதாகவும் பொது மக்கள் சுகாதாரப்பிரச்சனைகள் தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு 4.22 மில்லியன் மக்கள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சீனாவில் ஏற்படும் உயிரிழப்புக் காரணங்களில் புற்றுநோய் முதன்மை வகிப்பதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. கடந்த வருடம் 2.8 மில்லியன் மக்கள் புற்றுநோயால் உயிரிழந்துள்ளனர். சீனாவின் சனத்தொகை 1.4 பில்லியன் என சுகாதார நிபுணர்கள் தெரிவித்தனர். மேலும் நாடு முழுவதும் போதுமான அளவுக்கு மருத்துவ வசதிகள் கிடைப்பதில்லை எனவும் தெரிவித்தனர். உலக சனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினை சீனா வகிக்கிறது. உலக புற்று நோயாளர்களில் 27 சதவீத இறப்புகள் சீனாவில் ஏற்படுகின்றது. புற்றுநோய் பாதிப்புள்ள மூன்றில் இரண்டு ஆண்களில் நுரையீரல், வயிறு, களம், ஈரல் மற்றும் பெருங்குடல் போன்ற உறுப்புகள் அதிகமான புற்றுநோய்த் தாக்கத்துக்கு ஆளாகின்றன. பெண்களில் மார்பகம், நுரையீரல், மூச்சுக் குழாய், வயிறு, பெருங்குடல் மற்றும் உணவுக்குழாய் போன்ற உறுப்பு களில் புற்றுநோய்த் தாக்கம் அதிகம். சீனாவில் 15 சதவீத பெண்களுக்கு மார்பக புற்றுநோயுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புற்று நோயாளர்களைப் பராமரிப்பதும், அவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதும் சீனா எதிர் நோக்கும் சவாலாகும். புகையிலை பாவிப்பதும், சூழல் மாசடைவும் புற்றுநோய்க்கான பிரதான காரணம் என மருத்துவர்கள் தெரிவித்தனர். மேலும் உலக அளவில் புகைப்பிடிப்பவர்களின் எண்ணிக்கை சீனாவில் அதிகமாகும். அதாவது, 300 மில்லியன் மக்கள் புகைப் பிடிப்பவர்களாக உள்ளனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ரி4)



# சுவீடனில் 80 ஆயிரம் அகதிகள் வெளியேற்றம்

ஸ்ரொக்கோம், ஜன.30

சுவீடனில் 80 ஆயிரம் அகதிகள் வெளியேற்றப்பட்டனர். ஒரு லட்சத்து 60 ஆயிரம் பேருக்கு மேல் கடந்த ஆண்டு புகலிடம் கோரி அகதிகள் தஞ்சமடைந்தனர். இவர்களில் 55 சதவீதத்தினரின் புகலிடக்கோரிக்கை அனுமதிக்கப்பட்டது. முதலில் 80 ஆயிரம் அகதிகளை அனுமதிக்க முடிவு செய்யப்பட்டது. பின்னர் இதன் எண்ணிக்கை 80 ஆயிரமாக உயர்ந்துள்ளது என உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் 2014 ஆம் ஆண்டு 35 ஆயிரம் போர் சுவிடனுக்குள் அனுமதிக்கப்பட்டனர். 9.8 மில்லியன் சனத்தொகையைக் கொண்ட நாடான சுவீடன், ஐரோப்பிய நாடுகளுள் அதன் சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் அதிக அகதிகளைக் கொண்டுள்ளதாகும். 51 ஆயிரம் சிரியர்களையும், 41 ஆயிரத்து 500 ஆப்கானிஸ்தானியர்களையும், 21 ஆயிரம் ஈராக்கியர்களையும் அகதிகளாகக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (த-ரி4)



கடந்த வருடம் ஜூன் மாதத்தில் இருந்து உலகின் பெரிய உயிரினமான திமிங்கிலங்கள் இந்தியக் கடற்கரையில் கரை ஒதுங்கியபடியுள்ளன. நேற்று முன்தினம் இரவு கிட்டத்தட்ட 30 அடி நீளமான திமிங்கிலம் ஜாகு கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது. இதனை அவதானித்த மக்கள் பொலிஸாருக்கும், வனவளத் திணைக்கள அதிகாரிகளுக்கும் தகவல் வழங்கினர். இதற்கு முன்னர் தமிழ் நாட்டில் 45 இறந்த திமிங்கிலங்கள் கரை ஒதுங்கியதும், 36 திமிங்கிலங்கள் மீனவர்களால் காப்பாற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

# கங்காருவுக்கு குண்டை பொருத்திச் சதிச் செயல்

## 19வயது இளைஞன் கைது

ஆஸ்திரேலியாவில் கங்காருவுக்கு வெடிகுண்டு பொருத் தப்பட்ட குற்றச்சாட்டில் பதின்ம வயதுள்ள ஒருவரைக் கைது செய்துள்ளனர் பொலிஸார்.

19 வயதான அந்த இளைஞன் மீது 4 குற்றச்சாட்டுகள் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. போராளிகளை நினைவு கூரும் தின வைபவத்தில் பொலிஸாரைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் திட்டமிடப்பட்டிருக் கலாம் என தெரிவிக்கப்பட்டது. பிரிட்டனைச் சேர்ந்த ஒருவருக் குத் துணையாக இருந்ததுடன், ஐ.எஸ். உடன் தொடர்புடைய தாக்குதலாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேலும் இராணுவத்தினருக்கான நினைவு நாளில் சதிச் செயலில் ஈடுபட்டுள்ளதாகவும் வழக்கு பதியப்பட்டது. (த-ரி4)

# ஈராக் குடியிருப்புப் பகுதியில் ஐ.எஸ். ஊடுருவல் முறியடிப்பு

## பாதுகாப்புப் படை தெரிவிப்பு

பக்தாத், ஜன.30

ஈராக்கில் அன்பர் மாநிலத்தில் குடியிருப்புப் பகுதியில் ஐ.எஸ். அமைப்பினரால் மேற் கொள்ளப்பட்ட ஊடுருவல் தோற்கடிக்கப்பட்டது என ஈராக்கின் பாதுகாப்புப் படையினர் நேற்று முன்தினம் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் அந்த மாநில விமானத் தளத்துக்கு அண்மையில் இடம் பெற்றுள்ளது.

ஈராக்கின் கூட்டுப்படை ஊடகப் பேச்சாளர் முகமத் இப்ராகிம் தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற தாக்குதலில் தற்கொலைப் படையினரும் வெடிப்புகளை நிகழ்த்தினர். அத்துடன் பல போராளிகள் கொல்லப்பட்டனர் எனத் தெரிவித்தார். பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரி, பொலிஸ் உயர் அதிகாரி என்போர் உயிரிழந்ததை இப்பராகிம் உறுதிப்படுத்தினார். ஆனால் ஈராக் பாதுகாப்புப் படைப் போராளிகளில் எத்தனை பேர் இறந்தார்கள் என்பதைக் கூற மறுத்தவிட்டார். ஈராக் படையினரின் கட்டுப்பாட்டில் அப்பிரதேசம் இருப்பதாகத் தெரிவித்தார்.

ஐ.எஸ். அமைப்பினரால் வெளியிடப்பட்ட தகவலில், பாதுகாப்புப் படையினருடன் தாக்குதல் இடம்பெற்றது. அதன் பின்னர் ஒருமணி நேரம் கழித்து இடம்பெற்ற 6 தற்கொலைப் படைத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் பொலிஸ் அதிகாரிகள் உட்பட நம் பிக்கைத்துரோகிகள் கொல்லப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் சிரியாவில் இம்மாதம் மட்டும் 127 சிறுவர்கள், 56 பெண்கள் உட்பட, 471 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என சிரியாவில் உள்ள பிரிட்டன் மனித உரிமைகள் அவதானிகள் நேற்று முன்தினம் தகவல் தெரிவித்தனர். அத்துடன் சிரிய ஜனாதிபதி பசார் அல்-அசாத்தின் படையினரால் இடம்பெற்ற தாக்குதலில் 30 சிறுவர்கள், 20 பெண்கள் உட்பட 211 பேர் கொல்லப்பட்டதாக எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர். ஜனாதிபதி அசாத்துடன் இணைந்து ரஷ்யா சரமாரியாக தாக்குதல் நடத்தி வருகின்ற நிலையில், பொது மக்கள் மீது நிகழ்த்தப்படும் தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## நீதித்துறைக்கு அச்சுறுத்தல்

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஹோமாகம நீதிமன்றத்துக்கு முன்பாக இடம்பெற்ற சம்பவங்கள், எமது நாட்டின் நீதித்துறை சுதந்திரமாக இயங்குவதற்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் ஆகும். முன்னைய ஆட்சிக்காலத்தில் முடிசூடா மன்னனாக விளங்கியவர் ஞானசார தேரர். அவரைத் தட்டிக்கேட்க எவருக்கும் துணிவு இருக்கவில்லை. பகிரங்கமாகவே அடாவடித்தனங்களில் ஈடுபட்டார். அவரை விசாரணை செய்யவோ அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவோ எவருக்கும் முடியாதிருந்தது.

அப்படியான ஞானசார தேரர் கடந்த புதன்கிழமை ஹோமாகம நீதிமன்ற நீதிவ்ானின் உத்தரவுப்படி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இவரது கைதை ஆட்சேபித்து இவரது ஆதரவாளர்களும், காவி உடை தரித்தோரும், பொதுபல சேனா அமைப்பினரும் நீதிமன்றத்துக்கு வெளியே குழப்பம் விளைவித்தமை நீதிமன்றத்தையும் நீதிவானின் தீர்ப்பையும் அவமதிக்கும் செயலாகும். சிறைச்சாலை பஸ்ஸை செல்லவிடாது தடுத்தனர். அமைதிக்குப் பங்கம் விளைவித்துக் கூச்சலிட்டனர். தேரருக்குப் பிணை வழங்குமாறும் இல்லையேல் தம்மையும் விளக்கமறியலில் வைக்குமாறும் கோசம் எழுப்பினர். நீதிமன்றத்துக்குள் அத்துமீறி நுழைய இவர்கள் முயற்சித்தனர். இதனால் போக்குவரத்து தடைப்பட்டது. ஹோமாகம பகுதியில் பல மணிநேரம் பதற்றம் நீடித்தது.

இப்படியான சம்பவம் இலங்கையின் நீதித்துறையில் புதியது அல்ல. 2011 வெள்ளைக் கொடி வழக்குத் தீர்ப்பின் போது நீதிமன்றத்துக்குள்ளேயே சட்டத்தரணிகள் முறைகேடாக நடந்துகொண்டனர். நீதிவானைப் பாதுகாக்க வேண்டிய நிலைமை பொலிஸாருக்கு ஏற்பட்டது.

ஞானசார தேரர் முன்னைய ஆட்சிக்காலம் போன்று நினைத்திருக்கலாம். சட்டம் தம்மை எதுவும் செய்யாது என்ற இறுமாப்புடன் செயற்பட்டிருக்கலாம். ஆனால், சட்டத்தின் முன் அனைவரும் சமன் என்பது இத்தீர்ப்பு மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆட்சிக்காலத்தில் நீதித்துறையில் அரச தலையீடு இருந்தது. அரசுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கிய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீது நாடாளுமன்றத்தில் குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. அரசின் தீவிர ஆதரவாளர்கள், ஆட்சியாளர்களின் நெருங்கிய உறவினர்கள், செல்வாக்குமிக்க அரசியல்வாதிகள் தண்டனை விலக்குப் பெற்றனர். இதனால் சட்ட ஆட்சி முற்றாகச் சீர்குலைந்திருந்தது.

நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தப்போவதாகக் கூறும் மைத்திரி-ரணில் ஆட்சியாளர்கள் முதலில் சட்ட ஆட்சியை நிலை நிறுத்துவது அவசியம் ஆகும். நீதிவானின் தீர்ப்புக்கு எதிராகக் கோசமிடுவோர் நீதிமன்றத்தை அவமதிப்பவர்களாகக் கருதப்படுவதால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.




நீதிமன்ற விசாரணையைக் குழப்புவதோ, வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களை மிரட்டுவதோ, தூஷிப்பதோ தண்டனைக்குரிய குற்றமாகும். சட்டத்தின் முன் அனை வரும் சமன் என்பது கடந்த ஆட்சிக்காலத்தில் வாய்ப்பேச்சளவில் மட்டுமே இருந்தது. அதனால் அரச ஆதரவாளர்கள், அரசுக்கு நெருக்கமான அரசியல்வாதிகளை நீதிமன்றத்தில் நிறுத்துவது மிகவும் கடினமான ஒரு காரியமாக இருந்தது. அரசமைப்பால் மட்டும் நீதித்துறைச் சுதந்திரத்தைப் பாதுகாக்க முடியாது. நீதித்துறையில் எவரும் தலையிட முடியாது என்பதை உறுதிப்படுத்த நீதித்துறை அதிகாரிகள் பயமின்றி பாகுபாடு இன்றிச் செயற்படவேண்டும்.

# வரதட்சணை கொடுமை



**கலைச்செல்வி**

திருமணம் என்கிற புனித உறவின் மூலம் ஓர் ஆணும் பெண்ணும் இணைகின்றனர். இருவரும் சேர்ந்து ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்குகின்றனர். ஒருவருடைய தேவையை மற்றொருவர் பூர்த்தி செய்கிற அடிப்படை கொண்ட உறவிது. மணமக்கள் பல விருப்பங்களையும் கனவுகளையும் எதிர்பார்ப்புகளையும் கொண்டிருப்பார்கள். அது இயல்புதான், தவறில்லை. ஆனால், வரதட்சணை ஒரு வேண்டாத தீமை.

வரதட்சணை கேட்பதோ, கொடுப்பதோ குற்றம் என்று அரசு சட்டம்செய்தபின்பும், அந்த வழக்கம் தொடர்வது வருந்தத்தக்கது.

ஆணாதிக்க சமுதாயத்தில் ஆண்தான் குடும்பத்தலைவன். அவனே படிக்கவும், வேலை பார்க்கவும் அனுமதிக்கப்பட்டான். அப்போது பெண் நான்கு சுவர்களுக்குள்ஒருசிறைக் கைதி போல் அடைபட்டுக் கிடந்தாள். அவளுக்கு கல்வி பயில்வது போன்ற காரணங்களுக்காக வீட்டில் இருந்து வெளியே செல்ல அனுமதி இல்லை. அப்படியே வீட்டில் கல்வி கற்றிருந்தாலும் அவள் வேலை பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை. அவள் தன்னுடைய கணவனுடைய விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக மட்டுமே இருந்தாள். அவளுக்கென்று சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லை. ஆனால் தற்போதோ பெண்ணினம் விழிப்புணர்ச்சி கண்டுவிட்டது. அவள் படிப்பு, வேலை இவற்றைத் தன் விருப்பம் போல் தேர்வு செய்கிறாள். அவளுக்குப் பொருளாதார சுதந்திரம் கிடைத்திருக்கிறது.

என்னதான் பெண்ணினம் முன்னேற்றம் கண்டிருக்கிறது என்றாலும் வரதட்சணை முறை இன்னும் இருந்து வருகிறது. வரதட்சணை ஆணின் மேலாதிக்கக் குறியீடு. தற்போதும் அது தொடர்கிறது. வரதட்சணை நிலுவைக்காக கணவன் மனைவியை அடித்து உதைத்து இம்சிக்கிறான். சில வீடுகளில் பெண்களுக்கு அக்கினிக் குளியல் நடக்கிறது. ஒரு பெண்ணை உயிரோடு எரிக்கும் குரூரச் செயலில் அவளுடைய மாமியாரும், மைத்துனியும் ஈடுபடுகிறார்கள்.

வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தும் மகனின் தாய் தந்தையர், தங்கள் பெண்ணும் மற்றொரு வீட்டில் வாழச் செல்கிறவள் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க அவளுடைய பெற்றோர் படும் சிரமங்களை அவர்கள் உணரவேண்டும். தங்கள் பெண்ணுக்கு நகை, பாத்திரம், பண்டம் என்று சீர்வரிசை செய்து திருமணத்தையும் விமரிசையாக அவர்கள் நடத்திக் கொடுக்கிறார்கள். அத்துடன் மருமகனுக்கு லட்சக்கணக்கில் வரதட்சணை கொடுக்க வேண்டும் என்றால் தங்கள் பெண்ணின் திருமணத்தால் கடன் சுமைகள் ஏற்பட்டு. தற்கொலை செய்து கொள்கிறவர்களும் உண்டு.

சந்தையில் மாட்டை விற்பது போல், தங்கள் பிள்ளைகளைக் கல்யாணச் சந்தையில் விற்கும் பெற்றோர்கள் வெட்கப்பட வேண்டும். தங்கள் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கவும், படிக்க வைக்கவும் தாங்கள் செய்த செலவுகளை அவர்கள் பட்டியல் போடுவார்கள். அவற்றை வரதட்சணை என்ற பெயரால் பெண் வீட்டாரிடம் கறந்து விடுவதே அவர்கள் திட்டம்.

என் பையன் டாக்டர் என்ஜினியர், உயர் அதிகாரி என்று கூறி பையனுக்கு விலை வைக்கிறார்கள்.

அன்று, ஆணும் பெண்ணும் சமம் என்பதை உலகுக்கு உணர்த்தவே உமாதேவியை தன்னுடைய சரீரத்தில் சரிபாகமாக்கிக் கொண்டார் சிவபெருமான்.

இன்று, ஆணும் பெண்ணும் சமம் என்பதைச் சட்டங்கள் மூலம் அரசு நிறுவியிருக்கிறது. பெண் ஆணைவிட எந்தவிதத்தில் தாழ்ந்தவள்? அந்தத் தாழ்வை நீக்க அவள் பணம் (வரதட்சணை) கொடுத்தாக வேண்டிய கட்டாயம் என்ன?

> “என்னதான் பெண்ணினம் முன்னேற்றம் கண்டிருக்கிறது என்றாலும் வரதட்சணை முறை இன்னும் இருந்து வருகிறது. வரதட் சணை ஆணின் மேலாதிக்கக் குறியீடு. தற்போதும் அது தொடர்கிறது.”

வரதட்சணை கேட்பதன் மூலம் பையனின் பெற்றோர்கள் தங்களுடைய அந்தஸ்தையும், அதிகாரத்தையும் நிலை நாட்ட முயல்கிறார்கள். தனக்கு மனைவியாக வருபவளை விடத் தான் உயர்ந்தவன் என்று மாப்பிள்ளைப் பையன் காட்டிக்கொள்ள முயல்கிறான். இது எம்சமுதாயத்தில் காணப்படுகிற மிகப்பெரிய தீமை. இதற்காகத் தலைகுனிய வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்.

வரதட்சணைக் கொடுமைக்கு எதிராக மேடை போட்டு பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். ஆனால், சொந்த வாழ்க்கையில் அவர்களுக்கு வரதட்சணையை ஊக்குவிக்கவே செய்கிறார்கள்.

சமுதாயம் இது பற்றிய விழிப்புணர்வை இன்னமும் அடைந்தபாடில்லை என்று வரதட்சணைக் கொடுமை ஒழிக்கப்படுகிறதோ அன்று தான் முழுச்சுதந்திரமும் பெண்ணுக்குக் கிடைத்திருக்கிறது என்று நம்பலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்தது நடந்தால்



அவன் ஓர் ஏழை. வறுமையினால் மிகவும் அவதிப்பட்டு வந்தான். ஒருநாள் ஒருநண்பரைப்பார்த்துபண உதவிபெறவெளியூர்சென்றான். நண்பன் ஊரில் இல்லை. எனவே திரும்பி வந்து கொண்டிருந்தான். களைப்புடன்வந்துகொண்டிருந்த அவனுக்குச் சிறிது நேரம் ஓய்வு தேவைப்பட்டது. வழியில் உள்ள மரத்தடி நிழலில் துண்டை விரித்துப் படுத்துவிட்டான். அந்த மரம் கற்பக விருட்சம் என்பது அவனுக்குத் தெரியாது.

படுத்துக்கொண்டிருந்த அவன் "இந்த மரத்தடியில் ஒரு கட்டில் இருந்தால் எவ்வளவு சுகமாக இருக்கும்?" என எண்ணினான். உடனே கட்டிலில் தான் படுத்திருப்பதை உணர்ந்தான்.

"கால்கள் வலிக்கின்றன. எவராவது கால்களைப் பிடித்துவிட்டால் எவ்வளவு சுகமாக இருக்கும்?" என எண்ணினான்.

என்ன வியப்பு! இரு இளம் நங்கையர் அவனது கால்களைப் பிடித்து விட்டனர். அப்போது அவனுக்கு தூக்கம் வரவில்லை. காரணம் பசி! இப்போது அறுசுவை உணவு மட்டும் கிடைத்தால் எம் பசி தீர்ந்துவிடும். பிறகுதான் தூக்கம் வரும்" என்று எண்ணினான். உடனே அவனெதிரில் ஓர் ஆசனத்தில் அறுசுவை உணவுடன் ஒரு தட்டு வந்தது. வயிறார உண்டான்; உண்ட பின் படுத்துக்கொண்டான். சுகமான தூக்கம் வந்தது.

"நாம் மட்டும் அறுசுவை உணவு உண்டு விட்டோம். எமது மனைவியும் மக்களும் ஓட்டைக் குடிசையில் பட்டினி கிடக்கிறார்களே அவர்களுக்கும் இதேபோல் உணவு வசதியும் உடைகளும் ஒரு நல்ல வீடும் கிடைத்தால் போதும் என எண்ணினான். அவன் நினைத்தபடியே அவனது ஓட்டை வீடு நல்ல வீடாயிற்று கிழிந்த ஆடைகள் நல்ல ஆடைகளாயின. உணவு வகைகள் வீட்டில் நிரம்பின.

இதையெல்லாம் பார்த்து வியந்த அவன் மேலும் "பத்தாயிரம் பொற்காசுகள் கிடைத்தால் எமக்குக் கஷ்டமே இல்லை" என எண்ணினான் உடனே பொற்காசுகள் நிரம்பிய மூட்டை ஒன்று அவனெதிரே தோன்றியது. அவனுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. அச்சமயம் அவனுக்கு எல்லா வசதிகளும் கிடைத்து விட்டன.

இப்படி எல்லா வசதிகளும் கிடைத்தவுடன் அவனுக்கு புதிய கவலை ஏற்பட்டது. "இது காட்டுப் பகுதியாயிற்றே! திடீரென்று புலி வந்து எம்மை அடித்துக்கொன்று விட்டால் என்ன செய்வது? என்று நினைத்தான். அவ்வளவு தான் புலி வந்தது. அவனை அடித்துக்கொன்றது.

இதிலிருந்து என்ன புரிகிறது?

நாம் எப்போதும் நல்லதையே நினைக்க வேண்டும். அப்போதுதான் நல்லது நடக்கும்.

# வரலாற்றில் இன்றைய தினம்

1077 - பாப்பரசர் 7ஆம் கிரகோரி ஜேர்மன் பேரரசர் 4ஆம் ஹென்றிக்கு மன்னிப்பு வழங்கினார்.

1800 - அமெரிக்காவின் சனத்தொகை 5,308, 483 அவர்களில் ஆபிரிக்க அமெரிக்கர்கள் 18 வீதம் (1,002, 037 பேர்)

1915 - 10 ஆவது துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய எப்.டபிள்யூ ஹையற் 100 ஓட்டங்கள் எடுத்துச் சாதனை.

1922 - உலக சட்ட தினம் முதன்முறையாகக் கொண்டாடப்பட்டது.

1928 - நெதர்லாந்து -அமெரிக்க இடையே முதலாவது வானலை தொலைபேசி இணைப்பு.

1948 - நாதூரம் கோட்சேயால் மகாத்மா காந்தி கொல்லப்பட்டார்.

1954 - ரஷ்யாவுடனான வர்த்தகத் தொடர்புகளை பெல்ஜியம் முடிவுக்குக் கொண்டு வந்தது.

1956 - மார்ட்டின் லூதர் கிங்கின் வீடு குண்டுத் தாக்குதலுக்கு உள்ளானது.

1972 - பொதுநலவாய நாடுகளிலிருந்து பாகிஸ்தான் விலகிக்கொண்டது.

1989 - ஆப்கானிஸ்தான் நாட்டின் காபூலில் உள்ள அமெரிக்க தூதுவராலயம் மூடப்பட்டது.

1994 - றிச்சார்ட் ஹட்லீயின் டெஸ்ற் போட்டியில் 431 விக்கெட்டுக்கள் வீழ்த்திய சாதனையை கபில்தேவ் சமப்படுத்தினார்.

2003 - ஒருபால் விவாகத்துக்கு பெல்ஜியம் சட்ட பூர்வமாக அங்கீகாரம்.

2004 - கோக் - பெப்சி குளிர் பானங்களில் பூச்சி மருந்து இருப்பது உண்மையே என ஆய்வுக் குழு உறுப்பினர் (இந்தியா) தெரிவிப்பு.

2006 - உலகின் மிகப் பெரிய முருகன் சிலையை மலேசிய இந்துக்கள் பிரதிஷ்டை செய்து கொண்டாட்டம்.

2006 - சூழல் மாசடைவதைத் தடுக்க பனையோலைப் பைகள் அறிமுகம்.

2013 - தென் கொரியா றொக்ட் நாறோ-1 ஊடாக தனது முதலாவது விஞ்ஞான சட்டிலைட்டை (விண்ணோட்டத்தை) வெற்றிகரமாக விண்ணுக்கு ஏவியது.

# சார்க் அமைப்பு பற்றிய சில தகவல்கள்

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் உலகமெங்கும் பல பிராந்திய ஒத்துழைப்பு நிறுவனங்கள் தோன்றின.

அவை பல காரணங்கள் கருதி உருவாக்கப்பட்டன. அந்த வகையில் சார்க் அமைப்பும் உருவானது.

இதன் தமிழ் விரிவு தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நிறுவனம் என்பதாகும்.

இதை உருவாக்குவதில் முன் நின்றவர் பங்களாதேஷ் முன்னாள் ஜனாதிபதி ஷியாஉர் ரஹ்மான். தொடக்கத்தில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பூட்டான், பங்களாதேஷ், மாலைதீவு, நேபாளம் ஆகியன அங்கத்துவ நாடுகளாக இருந்தன.

மிக அண்மையில் ஆப்கானிஸ்தான் இணைந்து கொண்டது.

பல இலட்சியங்களையும் கொள்கைகளும் கொண்டு உருவாக்கப்பட்ட சார்க் அமைப்பு முதலாவதாக டாக்கா நகரில் 1985 இல் கூடியது.



இவ்வமைப்பின் முக்கிய விடயங்களாக கல்வி, கலை, வானிலை, சுகாதாரம், அஞ்சல், விளையாட்டு, போக்குவரத்து, தொலைத் தொடர்பு,போதைத் தடுப்பு எனக் காணப்படுகின்றன.

தனது கொள்கைகளை அடைந்து கொள்ள சார்க் நான்கு பிரிவுகளை உண்டாக்கியது.

1. நிரந்தரக் குழு 2. வெளிநாட்டு அமைச்சர்கள் குழு 3. உச்சிமாநாட்டுக்குழு 4. தொழில்நுட்பக் குழு

சார்க் அமைப்பைக் கவனித்துக் கொள்ளவென சில பார்வையாளர் நாடுகளும் உள்ளன. அவையாவன

1. யப்பான் 2. பர்மா 3. ஈரான் 4. சீனா 5. அமெரிக்கா 6. மொரிசியஸ் 7. தென் கொரியா 8. அவுஸ்திரேலியா 9. ஐரோப்பிய யூனியன்.

சார்க் அமைப்பானது, கடந்த காலங்களில் பல இடங்களில் கூடியுள்ளது. இது வரை 17 தடவை கூடியுள்ளதுடன் நடவடிக்கைகள் சிலவற்றில் வெற்றியும் கண்டுள்ளது.



# வர்ணம் தீட்டுவோம்...



# விடுகதை

1. அழுவேன், சிரிப்பேன். நான் யார் தெரியுமா?
2. இவன் வாளுக்கு இவ்வுலகமே நடுங்கும். இவன் யார் தெரியுமா?
3. பல் துலக்காதவனுக்கு உடம்பெல்லாம் பற்கள். இவன் யார்?
4. வெளிச்சத்தில் வரும் இவன் இருட்டாயிருந்தால் காணாமல் போய்விடுவான். இவன் யார்?
5. கண்ணுக்குத் தெரியாது. ஆனால் உயிருக்கு உடைமை இது. யார் இது?
6. வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல். அது என்ன?
7. அள்ள அள்ளக் குறையாது குடிக்க உதவாது. அது என்ன?
8. நாலு கால் உண்டு. ஆனால் வீசத்தான் வாலில்லை. இவன் யார்?
9. மண்ணுக்குள் இருந்தாலும் மங்களத்துக்கு இது முதலிடம். இது என்ன?
10. முட்டு வீட்டுக்குள்ளே தட்டுப் பலகை. அது என்ன?
11. நிறைவேறாத ஆசைகளை நித்திரையில் தருவது அது என்ன?
12. கையால் இழுத்தால் அசையும் நாக்கு, கணீரென்று அனைவரையும் அழைக்கும் அது என்ன?

விடைகள்: 1. முகம் பார்க்கும் கண்ணாடி 2. தேள் 3. சீப்பு
4. நிழல் 5. காற்று 6. முட்டை
7. கடல்நீர் 8. நாற்காலி 9. மஞ்சள்
10. நாக்கு 11. கனவு 12.மணியோசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# மக்களின் வாழ்வை சொல்லும் சேதுபூமி

தமன், சம்ஸ்கிருதி, சிங்கம்புலி, ராஜலிங்கம், ஜூனியர் பாலையா உட்பட பலர் நடித்துள்ள படம், "சேதுபூமி". ராயல் மூன் என்டர்டெயின்மெண்ட் சார்பில் எம்.ஏ.ஹபீப் இந்தப் படத்தைத் தயாரித்துள்ளார். ஒளிப்பதிவு, எஸ்.முத்துராமலிங்கம். இசை: பாரதி, மோனிஷ். பாடல்கள், நந்தலாலா. படத்தின் கதையை எழுதி இயக்கியுள்ள கேந்திரன் முனியசாமி கூறியதாவது: இராமநாதபுரம், சிவகங்கை பகுதி மக்களிடம் வறுமையும், கோபமும் இருக்கும். அந்த கோபத்துக்கான நியாயம், அவர்கள் வாழ்க்கை முறை ஆகியவற்றை படத்தில் சொல்லியிருக்கிறோம். மனிதன் தனது உறவுகளையும், உணர்வுகளையும் மறந்து வருவது இந்த சமூகத்துக்கே கேடாக மாறிவிடும் என்பதை சொல்லும் படம் இது. தென் மாவட்ட மக்களின் வாழ்க்கையை யதார்த்தமாகச் சொல்லி இருக்கிறோம். படம் விரைவில் வெளிவரும் என்றும் கூறியுள்ளார்.

# அரசனின் நண்பன்

போருக்குப் போகுமுன் அரசன் தனது அழகான மனைவியை ஒரு அறையில் வைத்துப் பூட்டிவிட்டு, தனது நெருங்கிய நண்பனை அழைத்து அவனிடம் அந்தச் சாவியைக் கொடுத்து, "நண்பா ஒருவேளை நான்கு நாள்களுக்குள் நான் வரவில்லையென்றால், அறையைத் திறந்து எனது மனைவியை நீ எடுத்துக்கொள்" என்று. சொல்லி விட்டு தனது குதிரையில் போருக்குச் சென்றான். ஒரு அரை மணி நேரத்தின் பின்னர் பின்னால் வேகமாக குதிரையில் யாரோ வருவது போல் தெரிந்தது. எவரென்று பார்த்தால் அரசனின் நண்பன் தான் அரக்கப்பறக்க வந்தான். என்ன விடயம் என்று கேட்டான், "அரசே இந்தச் சாவி தப்பான சாவி" என்றான். நண்பனுக்கு அப்போது தான் புரிந்தது அரசனின் கில்லாடி மூளை.



படித்ததில் பிடித்தது

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | 7 | | | | 9 | |
| | 9 | | | | 2 | 5 | | |
| | 3 | | 9 | | | | | |
| | 4 | 9 | | | 8 | 2 | | |
| 3 | | | | | | | | 8 |
| | | 2 | 5 | | | 7 | 1 | |
| | | 8 | | | 6 | | 5 | |
| | | 3 | 1 | | | | 7 | |
| | 6 | | | | 3 | 8 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 6 | 1 | 8 | 2 | 4 | 9 | 7 |
| 4 | 2 | 1 | 6 | 9 | 7 | 5 | 8 | 3 |
| 9 | 8 | 7 | 5 | 3 | 4 | 1 | 2 | 6 |
| 5 | 6 | 3 | 4 | 2 | 1 | 8 | 7 | 9 |
| 2 | 1 | 9 | 3 | 7 | 8 | 6 | 5 | 4 |
| 8 | 7 | 4 | 9 | 5 | 6 | 3 | 1 | 2 |
| 1 | 4 | 5 | 7 | 6 | 9 | 2 | 3 | 8 |
| 6 | 9 | 8 | 2 | 1 | 3 | 7 | 4 | 5 |
| 7 | 3 | 2 | 8 | 4 | 5 | 9 | 6 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



அன்பை மட்டுமே
உயிரான நட்புக்களும்
அழகான உறவுகளும்
உண்மையான காதல்களும்
என்றுமே பிரிவதில்லை



பனித்துளி

வெறுப்போ
சலிப்போ... காயப்படுத்தாமல்
விலகுவது தான்... இந்நாள் வரை
இருந்த உறவுக்கோ நட்புக்கோ
கொடுக்கப்படும் மரியாதை.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதிர்மறையாக இருந்த விடயம் கூட நன்மையளிக்கும். தொழில், வியாபார வளர்ச்சிக்காக, கடினமாக உழைப்பீர்கள். வருமானம் அதிகரிக்கும். பிள்ளைகள் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**இடபம்:** எதிர்பார்த்த பணி நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான லாபம் கிடைக்கும். பெண்கள் தாய் வீட்டாரின் ஆதரவு கிடைக்கப் பெறுவர். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** எதிர்காலம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், கூடுதல் உழைப்பு தேவைப்படும். பெண்கள், வீட்டுச் செலவில் சிக்கனத்தை பின்பற்றுவது நல்லது. ஆரோக்கியம் சீராக இருக்கும்.

**கடகம்:** எதிர்பார்ப்பு முழுமையாக வெற்றி பெறும். தொழில், வியாபார வளர்ச்சியால், தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள் விரும்பிய பொருளை வாங்குவர். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**சிங்கம்:** சிலர் உங்களுக்கு எதிராக செயற்படலாம், கவனம். தொழில், வியாபாரத்தில், கூடுதல் பணிச்சுமை ஏற்படும். பெண்கள் வீட்டுச் செலவில் திட்டமிடுவது அவசியம். உடல் நலம் சீராக ஓய்வு உதவும்.

**கன்னி:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி உண்டாகும். லாபம் உயரும். பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

**துலாம்:** நண்பர்களின் பேச்சு சங்கடம் தரலாம். தொழில், வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். லாபம் சீராகும். சேமிப்புப் பணம் முக்கிய செலவுக்கு பயன்படும். மாணவர்கள் பாதுகாப்பு குறைவான இடத்திற்குச் செல்ல வேண்டாம்.

**விருச்சிகம்:** உறவினர்கள் உங்களிடம் உதவி கேட்பர். தொழில், வியாபாரத்தில், லாபம் உயரும். நிலுவைப் பணமும் வசூலாகும். பெற்றோரின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** விலகிச் சென்ற நண்பர், விரும்பி வந்து அன்பு பாராட்டுவார். தொழில், வியாபார வளர்ச்சிக்காக, புதிய உத்தியை பின்பற்றுவீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும். சுபச் செலவு செய்து மகிழ்வீர்கள்.

**மகரம்:** கடந்த கால உழைப்புக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், சீரான வளர்ச்சி ஏற்படும். பெண்கள் வரவுக்கு ஏற்ப செலவைத் திட்டமிடுவது நல்லது. அதிக விலையுள்ள பொருளை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**கும்பம்:** லட்சிய நோக்கில் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், பொறுப்பு அதிகரிக்கும். லாபம் பெருகும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**மீனம்:** பகைவரின் கெடுசெயலை முறியடிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், தேக்க நிலை மன்றயும். பணவரவு அதிகரிக்கும். பெண்களுக்கு சமூக அந்தஸ்து உயரும்.




சவூதி அரேபியாவில்
பெண் உரிமைக்காக நடைபெற்ற மகாநாடு
ஆத்தி எங்க ஒரு பொம்பிளயக்கூடக் காணோம்.
பொணுங்க என்டத
இவங்கள் தப்பா புரிஞ்சிருப்பாங்களோ.



புருசனுக்கு முடி நரைச்சா பொண் டாட்டிக்கு சந்தோஷம் பொண்டாட்டி குண்டானா புருசனுக்கு சந்தோசம் காரணம் இனி இந்த வடையை எந்த காக்காவும் தூக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இது புதுசு**

டிஜிட்டல் ஹெட்செட் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. போனுடனும், கணினியுடன் மாத்திரமல்லாமல், இதனுள் மெமரி காா்ட், பென்ரைவ் என்பவற்றையும் இணைத்து கேட்க முடியும். டிஜிட்டல் திரையையும், இதர செட்டிங்களையும், ஆளிகளையும் கொண்டதாகும்.

# பப்பாசிக்கறி



**தேவையான பொருள்கள்:**

பச்சைப் பப்பாசிக்காய் - 1 கப்
தேங்காய் - அரைக் கப் துருவியது
வெங்காயம் - அளவாக நறுக்கியது
பச்சை மிளகாய் - 3
இஞ்சி கால் கரண்டி
கடுகு - தேவையான அளவு
சீரகம் - அரைக்கரண்டி;
கறிவேப்பிலை - சிறிதளவு
எண்ணெய் - 2 கரண்டி;
உப்பு - தேவையான அளவு
பால் - அரைக்கப்
ப்ரஷ் கிரீம் - 3 கரண்டி

**செய்முறை:**

முதலில் பாதியளவு தேங்காயை பால் எடுத்து கொள்ளவும். மீதியுள்ள தேங்காயை சீரகம் சேர்த்து அரைத்து கொள்ளவும்.

ப்பபாளிக்காயை தோல் நீக்கி நறுக்கி வைத்து கொள்ள வேண்டும்.

தாச்சியில்; எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், கடுகு, வெங்காயம், கறிவேப்பிலை போட்டு தாளித்து பிறகு பச்சை மிளகாய், துருவிய இஞ்சியை சேர்க்கவும். நன்கு வதக்கவும். நன்கு வதங்கிய பிறகு பப்பாளி துண்டுகளை சேர்த்து வதக்கவும். 5 நிமிடம் கழித்து உப்பு மற்றும் மஞ்சள் தூள் சேர்க்கவும். பச்சை வாசனை போனதும். அரைத்து வைத்துள்ள தேங்காய் விழுதைச் சேர்க்கவும். நன்கு வெந்து வந்ததும் அனலைக் குறைத்து தேங்காய்ப் பால் சேர்க்கவும். பிறகு அடுப்பை அணைத்து விட்டு ப்ரஷ் கிரீம் சேர்க்கவும்.

**நாளை**

தை-17
ஞாயிற்றுக்கிழமை
31.01.2016
திதி: சப்தமி மா.06.31
நட்சத்திரம்: சித்திரை
மு.ப.10.01
ராகுகாலம்:
05.06-06.36 வரை
சுபநேரம்: 09.36-11.06 வரை



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 650 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 300 | – |
| கணவாய் | 600 | 500 | 500 | 600 | 600 | 650 | – |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 600 | 600 | 400 |
| சுறா | 300 | 600 | 600 | 700 | 650 | – | 400 |
| சீலா | 250 | 400 | 400 | 500 | 400 | – | 350 |
| விளை | 500 | 500 | 400 | 500 | 500 | – | 400 |
| முரல் | 250 | 400 | 350 | 400 | 350 | – | – |
| கும்பிளா | 300 | 300 | 300 | 400 | 400 | – | – |
| கிழாக்கன் | 400 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 300 | 400 | – | 300 | 400 | – | 350 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 300 | – | – |
| நகரை | 150 | 300 | – | 200 | 300 | – | 300 |
| சூடை | 130 | 150 | 100 | 200 | 200 | – | – |
| ஒட்டி | 200 | 250 | 150 | 300 | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 400 | 200 | 300 | 400 | – | – |
| மதனம் | 250 | 250 | 180 | 300 | 280 | – | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 100 | – | – |
| பாலை | 100 | 250 | 250 | 400 | 400 | – | – |
| வாழை | 150 | 150 | 200 | 300 | 300 | – | 200 |



## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 60 | 40 | 60 | 60 | 40 | 40 | 40 |
| கத்தரி | 150 | 140 | 150 | 160 | 200 | 120 | 110 | 70 |
| கரட் | 200 | 150 | 300 | 180 | 200–300 | 180 | 150 | 300 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 40 | 45 | 30 |
| பயிற்றை | 100 | 120 | 120 | 100 | 160 | 120 | 70 | 120 |
| பாகல் | 100 | 160 | 100 | 100 | 140 | 160 | 90 | 130 |
| கருணைக்கிழங்கு | 70 | 70 | 80 | 60 | 60 | – | 60 | 70 |
| பெ.வெங்காயம் | 80 | 70 | 70 | 70 | 60 | 80 | 50 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 120 | 120 | 110 | 120 | 100 | 100 |
| பூசணி | 60 | 50 | 60 | 60 | 70 | 80 | 45 | 60 |
| தக்காளி | 60 | 70 | 70 | 70 | 80 | 100 | 60 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 60 | 60 | 60 | 50 | 40 |
| கீரை | 30 | 30 | 40 | 10 | 20–30 | 30 | 35 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 40 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 350 | 300 | 250 | 300 | 400 | 250 | 350 |
| புடோல் | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 50 | 60–70 |
| கோவா | 80 | 130 | 100 | 120 | 120 | 140 | 90 | 130 |
| வெண்டி | 100 | 120 | 120 | 100 | 140 | 120 | 100 | 120 |
| போஞ்சி | 80 | 160 | 100 | 140 | 200 | 120 | 100 | 170 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 | 120 | 120 | 160 | 80 | 120 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 50 | 50 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 | 70 | 60 | 90 | 50 | 120 |
| தேசிக்காய் | 120 | 80 | 140 | 100 | 80–100 | 40 | 40 | 35 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 300 | 240 | 250 | 280 | 400 | 200 | 180 | 150–170 |
| இராசவள்ளி | 150 | 120 | 260 | 120 | 180 | 160 | 100 | 80–100 |
| முருங்கைக்காய் | 800 | – | 800 | – | – | – | – | – |

## வீட்டில் இருக்கும் பொருள்களின் பாதுகாப்பு

1. கடையிலிருந்து பிளாஸ்ரிக் கவரில் வெண்ணெய் வாங்கி வந்தால் அப்படியே குளிர்சாதனப் பெட்டியில் இரண்டு மணி நேரம் வைத்திருந்து, பின் எடுத்தால் கையில், கவரில் வெண்ணெய் ஒட்டவே ஒட்டாது.
2. ரவையை வெறும் சட்டியில் போட்டு சிவக்க வறுத்து ஆறவிட்டு கொட்டி வைத்துக் கொண்டால் வண்டு வராமல் இருக்கும். உப்புமா, கேசரி செய்ய வேண்டுமென்றாலும் உடனே எளிதாகச் செய்துவிடலாம்.
3. தக்காளியைச் சிறிது வேகவிட்டுத் தோல் உரித்து மிக்ஸியில் நைஸாக அரைத்து பிரிட்ஜில் வைத்துக் கொண்டால் (உப்பு, மிளகாய்ப்பொடி, மிளகுத்தூள் சேர்த்து கொதிக்கவிட்டு பின் ஆற வைத்து), தக்காளி சோஸாகவும் பயன்படுத்திக் கொள்ளலாம். தக்காளி இல்லாத சமயத்தில் சாம்பார், இரசத்திற்கும், கிரேவிகள் செய்யவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.
4. சுக்கு, ஏலக்காயைப் பொடி செய்து வைத்துக் கொண்டால் தேநீர் போடும்போது அவ்வப்போது சேர்த்துக் கொள்ளலாம்.
5. இடியப்பமா, பூரண கொழுக்கட்டைமா பிசையும் பொழுது அரை ரம்ளர் கொதிக்கும் பாலையும் விட்டு கிளறினால் நல்ல வெள்ளையாக இருக்கும்.
6. மாங்காய் இனிப்பு பச்சடி செய்யும் பொழுது தோலைச் சீவிவிடுவார்கள். ஆனால் தோல் சீவாமல் அப்படியே செய்தால் மிகவும் சுவையாக இருக்கும்
7. தினமும் இரவு பால் அருந்தும்போது சீனிக்குப் பதில் வெல்லம், ஏலக்காய் சேர்த்து கொதிக்கவிட்டு அருந்தினால் இரும்புச்சத்து சேரும். சுவையும் நன்றாக இருக்கும்.
8. கொத்தமல்லி, புதினா, பூண்டு துவையல், சாம்பார் செய்யும் போது புளி நிறைய சேர்க்காமல் தக்காளியைச் சேர்க்கலாம். இரசத்தில் எலுமிச்சைச் சாறு சேர்க்கலாம். உடலுக்கும் நல்லது, புளி அதிகம் சேர்ப்பது ஆரோக்கியத்துக்குத் தீங்கு விளையும்.
9. வாரம் ஒருமுறை இஞ்சியையும், பூண்டையும் தனித்தனியாக அரைத்து விழுதாக குளிர்சாதனப் பெட்டியில் வைத்துக் கொண்டால் சைவ பிரியாணி மற்றும் அசைவ பிரியாணி செய்யும் பொழுது எளிதாக இருக்கும்.
10. நூடில்ஸ் செய்யும்பொழுது வெங்காயம், தக்காளி வதக்கும்போது சிறிது மிளகுத்தூள், உப்பு, மிளகாய்த்தூளையும் அதில் உள்ள மசாலாவோடு சேர்த்துச் செய்தால் சுவை கூடுதலாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்

## அதிகரிக்கின்றது ஸ்கைப் பாதுகாப்பு



இலவச காணொலி மற்றும் குரல் வழி அழைப்புக்களை ஏற்படுத்தக்கூடிய ஸ்கைப் சேவையை வழங்கும் உலகின் முன்னணி இணைய நிறுவனமான மைக்ரோசொப்ட் தனது பயனர்களின் பாதுகாப்பை மேம்படுத்த புதிய முயற்சி ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இதன்படி ஸ்கைப் அழைப்புக்களை ஏற்படுத்தும் போது இணைய எண் (ஐபி அட்ரஸ்) முகவரிகளைக் கண்டுபிடிக்க முடியாதவாறு புதிய சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சேவையானது 2012ஆம் ஆண்டு இடம்பெற்ற சைபர் தாக்குதலை அடுத்து ஹேக்கர்களால் தனது பயனர்களின் தகவல்கள் திருடப்படுவதைத் தடுப்பதற்காக மைக்ரோசொப்ட் நிறுவனம் இவ்வாறு பாதுகாப்பை வழங்க முன்வந்துள்ளது.

எனினும் இந்த வசதி ஊடாக அநாமதேய அழைப்புக்கள் மூலம் தனி நபர்களுக்கான பாதுகாப்புக் குறைபாடு ஏற்படலாம் என்பதும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

## ஐபோன் எஸ்ஈ பதிப்பு அடுத்த மாதம் வருகிறது!



அப்பிள் நிறுவனம் தனது புதிய ஐபோன் 5 எஸ்ஈ பதிப்பை அடுத்த மாதம் விற்பனைக்குக் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. 6எஸ் பதிப்புக்குப் பின்னர் அப்பிள் நிறுவனம் தனது புதிய பதிப்புத் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றது என்று கூறப்பட்டு வந்தது. ஐபோன் மினி, ஐபோன் 6சி என்று பலவிதமான பெயர்களில் அந்த மொபைல் அழைக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் மார்ச் மாதம் நடைபெறவுள்ள நிகழ்வில் அப்பிள் நிறுவனம் தனது புதிய மொபைலை அறிமுகப்படுத்தவுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது

இதற்கு ஐபோன் 5எஸ்ஈ (ஸ்பெஸல் எடிசன்) என்று பெயரிடப்பட்டுள்ளது.

4 அங்குல தொடுதிரை வசதியுடன் தயாரிக்கப்பட்டுள்ள இது ஐபோன் 6 போன்று வட்ட வடிவ முனைகளைக் கொண்டுள்ளது என்று கூறப்படுகிறது. முந்தைய ஐபோன் 5 பதிப்பின் வசதிகளுடன் தயாரிக்கப்பட்டுள்ள இதில் 6 மற்றும் 6எஸ் பதிப்புகளின் சில அம்சங்களும் இணைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது

8 எம்பி முன்புற கமரா 1.2 எம்பி பின்புற கமரா ஆகியவற்றுடன் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. சில்வர், ஸ்பேஸ் கிரே, ரோஸ் கோல்ட் நிறங்களில் இது கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனுடன் அப்பிள் கைகடிகாரம், ஐபேட் எயார் 3 ஆகியவையும் மார்ச் மாதம் அறிமுகப்படுத்தப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

எனினும் இது தொடர்பான அப்பிள் நிறுவனம் அதிகாரப்பூர்வமாக எந்த தகவலையும் வெளியிடவில்லை.

# செலான் வங்கி 2016 இல் புதுமையான சேவைகள்



இலங்கை மத்திய வங்கியால் தெரிவுசெய்யப்பட்ட 6 ஒழுங்கான முக்கியவங்கிகளில் ஒன்றான அன்புடன் அரவணைக்கும் வங்கியான செலான் வங்கி அதன் வாடிக்கையாளர்களை அவர்களின் வியாபாரத் தூதர்களாக கருதுகின்றது. அக்கறையும் நட்பும் பாராட்டும் செலான், 2015இல் மேலும் விருத்தியடைந்துள்ளது.

நாடெங்கிலும் மாணவர் சேமிப்பு நிலையங்களை தவிர்த்து வங்கி வலையமைப்பு 159 கிளைகளையும் 180 இற்கு மேற்பட்ட ஏரிஎம் வலையமைப்பையும் செலான் கொண்டுள்ளது.

வங்கியின் எஸ்.எம்.ஈ, சிறுவர் சேமிப்பு, பிரத்தியேக வங்கியியல், கூட்டுநிறுவன மற்றும் கிரெடிட் கார்ட் பிரிவு கள் கடந்தவருடம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டி யுள்ளது. வங்கி அதன் ஊழியர்களின் ஒட்டுமொத்த உழைப்பின் மூலம் வங்கியின் அனைத்து துறைகளி லும் மேம்பட்ட செயல்திறனை வெளிக்காட்டியுள்ளது.

கடந்த இரு வருடங்களாக கிரெடிட் கார்ட் பிரிவில் எடுக்கப்பட்ட புதிய நடவடிக்கைகள் மற்றும் மீள்படுத்தப்பட்ட கவனம் மூலம் செலான் மற்றைய வங்கிகளுடன் சமநிலையில் உள்ளது.

இலங்கை பயண வங்கியியலில் முன்னணி வழங்குநரான செலான் ரவல் கார்ட், வாடிக்கையாளர்களின் வெளிநாட்டு பணப்பாவனைக்காக ஒரு கார்டில் 5 வேறுபட்ட நாணயப் பெறுமதியைக் கொண்டு செல்லும் வாய்ப்பை வழங்குகிறது. மற்றொரு முன்னோடித் தயாரிப்பான செலான் டிக் கிரி 2013இல் அதன் மீள் வருகை யின் பின் பாரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது. சிலிம்மின் 2014 இற்கான "ரேன் எரவுண்ட் பிராண்ட் ஒவ் த இயர்" பிரிவிலும் அங்கீகரிக் கப்பட்டது. வார இறுதி நாள்களில் அதன் கிளைகளில் இடம்பெறும் டிக்கிரிபொல போன்ற செயற்பாடு கள், வேடிக்கையான முறைகளில் அதன் இளைய வாடிக்கையாளர்களை வங்கியியல் தொடர்பான அடிப்படை அறிவைப் பெறும் தளமாக விளங்குகிறது.

வங்கி டிக்கிரி கணக்கை வாடிக்கையாளர்களின் கருத்துக்கள், சிறுவர்களின் மாறும் வாழ்வியல் முறைகள் என்பவற்றின் அடிப்படியில் மேலும் மெருகேற்றிவருகிறது.

வெளிநாட்டில் வேலை செய்யும் இலங்கைத் தொழிலாளர்களையும் விசேடமாக கவனிக்க வேண்டும் என எண்ணும் செலான் தனது உலகளாவிய வலையமைப்பை கடந்த ஆண்டு விரிவுபடுத்தியது.

செயல்முறைகள் முன்னேற்றபட்டிருப்பதுடன் பரிமாற்ற பங்குதாரருடனான தொடர்ச்சியான பரிமாற்றங்கள் சேவையை வாடிக்கையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் இலகுபடுத்தியுள்ளது.

இலங்கையில் வதியும் மற்றும் வெளிநாட்டில் உள்ள வாடிக்கையாளர்களின் நன்மை கருதி வங்கியானது பிரான்ஸ், ஜெர்மனி, துபாய், மலேசியா மற்றும் சவுதிஅரேபியா ஆகிய நாடுகளில் தனது சேவையை தடம் பதித்துள்ளது.

வணிகம்

வங்கியின் முக்கியசேவைகளில் ஒன்றானசெலான் லீசிங் இலங்கையின் வாகன சந்தையுடன் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது. புதியவரவு-செலவுத் திட்டத்தின் ஊடு லீசிங் துறைக்கு பின்விளைவுகள் ஏற்படவுள்ள போதும் வங்கியின் வாடிக்கையாளர் நலன் கருதி வங்கி அதனை சந்திக்கவும் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தயாராகவுள்ளது. (தி)

# உயர் விருதுகளை வென்றுள்ள யு.எச்.ஈ. குழுமம்

உலகப் புகழ்பெற்ற ஹல்பே தேயிலை, எல்ல பகுதியில் அமைந்துள்ள 98 அக்ரஸ் ரிசோர்ட் அன்ட் ஸ்பா மற்றும் சீக்ரெட் ஹோட்டல் தொடர் (கண்டி, காலி மற்றும் யால ஆகிய பகுதிகளில் அமைந்துள்ளன) ஆகியவற்றின் தாய் நிறுவனமான யு.எச்.ஈ. குழுமம், அண்மையில் நடைபெற்ற தொழில் முயற்சியாளர் விருதுகள் வழங்கும் நிகழ்வில் நான்கு உயர் விருதுகளை தனதாக்கியிருந்தது.



இந்த ஆண்டு நடைபெற்ற விருதுகள் வழங்கும் நிகழ்வில் யு.எச்.ஈ. குழுமத்தின் தலைவர் திரு. ஏ.பி.டி. அபேரட்ன ஊவா மாகாணத்துக்கான தங்க விருதைப் பெற்றுக் கொண்டதுடன், தேசிய மட்டத்தில் ஆண்டின் தொழில் முயற்சியாளர் 2015 தங்க விருதையும் ஊவா ஹல்பேவத்த எஸ்டேட்ஸ் பிரைவட் லிமிட்டெட் சார்பாகப் பெற்றுக் கொண்டார்.

அத்துடன் யு.எச்.ஈ. குழுமத்தின் மேற்பார்வைச் செயற்பாடுகளுக்கான பணிப்பாளர் சாமர அபேரத்ன ஆண்டின் இளம் தொழில் முயற்சியாளர் விருது 2015 விருதை ஊவா மாகாணம் மற்றும் தேசிய மட்ட 99 அக்ரஸ் ரிசோர்ட் அன்ட் ஸ்பா சார்பாக பெற்றுக் கொண்டார். எரந்த அபேரட்ன கருத்துத் தெரிவிக்கையில், யு.எச்.ஈ. குழுமம், குடும்ப வியாபாரமாக தேயிலை உற்பத்திச் செயற்பாடுகளையும், ஏற்றுமதி வியாபாரங்களையும் ஆரம்பித்திருந்ததுடன் இலங்கையின் அதிகளவு கவனத்தை ஈர்த்த வியாபாரமாக வளர்ச்சியடைந்துள்ளது. குறிப்பாக மூன்று தேயிலைத் தோட்டங்களான ஊவாஹல்பேவத்த, ஊவாகிறீன்லான்ட்ஸ் மற்றும் ஊவாஹல்பே பிளான்டேசன்ஸ் ஆகியன இவற்றில் உள்ளடங்கியுள்ளன. எமது செயலணியின் கடுமையான உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு மூலமாகவும், ஒரு குடும்பமாக செயலாற்றுவதன் மூலமாகவும் இந்த நிலைக்கு எமது யு.எச்.ஈ குழுமம் உயர்வடைந்துள்ளது என்றார்.

இலங்கை வர்த்தக மற்றும் தொழிற்துறை சம்மேளனம் கடந்த 20 ஆண்டு காலமாக இலங்கையின் முன்னணி தொழில் முயற்சியாளர்களை தெரிவு செய்து கௌரவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. தேசத்தின் பரந்தளவு, பெருமளவு வியாபாரங்களுக்கு தமது திறமைகளை வெளிப்படுத்திக் கொண்டாடுவதற்கு வாய்ப்பையும் வழங்குகிறது. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடப்பு

லியன் ரூபா மாகாண அபிவிருத்தி நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தது. இந்த நிதியில் ஒவ்வொரு அமைச்சுக்கும் நிதிப் பங்கீடு செய்யப்பட்டு ஒதுக்கப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரையில் நடைபெற்ற வடக்கு மாகாண சபையில் பாதீட்டுக் கூட்டத் தொடரில், நிதிச் செலவினத்துக்கான அனுமதி கிடைக்கப் பெற்றிருந்தது. இதனடிப்படையில், நடப்பு ஆண்டுக்குரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் 5 அமைச்சுக்களினாலும் இனங்காணப்பட்டது. அவ்வாறு இனங்காணப்பட்ட - அடையாளப்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்களுக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதாக, நிதி ஆணைக் குழுவுக்கு அவை அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியை உரிய காலத்துக்கு முன்னர் செலவு செய்து முடிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. நிதி ஆணைக்குழுவின் அனுமதி ஏப்ரல் மாதமளவிலேயே கிடைக்கப் பெற்றதால், இந்தத் திட்டங்களை முடிவுறுத்துவதில் தாமதம் ஏற்படுவதாகச் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மாகாணசபையில் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே, ஜனவரி மாதமே நிதி ஆணைக்குழுவின் அனுமதிக்காக அபிவிருத்தித் திட்டங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (த-5)

## மோதிவிட்டு


(வயது-62) என்பவரே உயிரிழந்தார். படுகாயமடைந்த நிலையிலிருந்த அவர் வீதியால் சென்றவர்கள் மீட்டுச் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். அவர் கை, கால் முறிந்த நிலையில் படுகாயமடைந்திருந்தமையால் ஆரம்ப சிகிச்சையின் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் அவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். வாகனத்தால் மோதிவிட்டுத் தப்பிச் சென்றவர் தொடர்பில் விசாரணை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதவிர, கடையில் உணவருந்துவதற்காக மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞனும் வாகனத்தில் மோதுண்டு படுகாயமடைந்தார். அவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்கா யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த நவநேசம் பானுசாந்த் (வயது - 23) என்பவரே காயமடைந்தார். (த-4-9)

## மரண அறிவித்தல்கள்

### மரியதாசன் பேர்னான்டோ



யாழ்ப்பாணம், ஸ்டேஷன் வீதியைப் பிறப்பிடமாகவும், 517/6 ஸ்ரான்லி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாசன் பேர்னான்டோ 28.01.2016 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இன்னாசிப்பிள்ளை - நேசம்மா தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற நிர்மலாவின் பாசமிகு கணவரும், ரமேஸ் (சுவிஸ்), ரகு (சுவிஸ்), ரஜினி (ஜேர்மனி), வதனி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை), ராகுலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சஜி (சுவிஸ்), ரூபி (சுவிஸ்), சங்கர் (ஜேர்மனி), மனோகரன் (அதிபர் - நல்லூர் ஸ்தான சிசி.தக. பாடசாலை), யூரி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிக்கோல், ப்ரெடி, றொஷான், றொஷேல், நெகேம், எப்சிபா, ஜெஷிரன், ஜெஷிரிகா, கிறிஸ்டினா, கிறிஸ்டினன், ஜெய்டன்யூட் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், காலஞ்சென்றவர்களான திரேசம்மா, தேவதாஸ் மற்றும் ஜோர்ஜ் (கனடா), நோபேட், ராணி, மலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

517/6 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(68409)
(11,15,18)

தகவல்:
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### வீரசிங்கம் பாலசிங்கம்



யாழ்.நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், கொடிகாமம், ஜேர்மனி, ஆஸ்திரேலியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் பாலசிங்கம் 27.01.2016 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற முருகேசு - சிவமணி (ஆஸ்திரேலியா) தம்பதிகளின் அன்பு மருமகனும், சரோஜினியின் (ராசாத்தி - ஆஸ்திரேலியா) அன்புக் கணவரும், நவசக்தி (கொழும்பு), ஜீவானந்தன் (ஆஸ்திரேலியா), பவானந்தன் (நோர்வே), நவநிதி (ஆஸ்திரேலியா), தயானந்தன் (ஆஸ்திரேலியா), ஜெயானந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வரத்தினம் (கொடிகாமம்),கனகரத்தினம் (கொடிகாமம்), சோமேஸ்வரி (முத்தையன்கட்டு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலேந்திரன், அண்ட்ரியா, றஞ்சன், கேமரதி ஆகி யோரின் அன்பு மாமனாரும், பொன்னுத்துரை (கொடிகாமம்), பேரம்பலம் (கொடிகாமம்), ரத்தினம் (முத்தையன் கட்டு), ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்களான சுவாமிநாதன், மோகனதாஸ், யுவராஜா, நரேந்திரன், யோகநாதன், விமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், மனோஜ்கான், நிரோஷா, செந்தூரன், செந்தாழன், ஆருநிகா, சீத்தாலக்சுமி, துர்க்காலக்சுமி, ஒசேன், இமையா ஆகியோரின் அன்புப் பேரனும், அக்சயாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01.2016) ஞாயிற்றுக் கிழமை Stratus chapel, Australia வில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

43, கோயில்வீதி,
யாழ்ப்பாணம்.

(68448)
(11,15,17,18)

தகவல்:
து.அருள்ராசா

மனைவி (சரோஜினி - 0061 397 923 356),
மகள் (நவசக்தி - 075 077 8652)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்வவதி தம்பிராசா



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக்வும் கொண்ட திருமதி செல்வவதி தம்பிராசா 28.01.2016 வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி தம்பிராசாவின் மனைவியும் காலஞ்சென்றவர்களான குகராசசெல்வம், செல்வரூபன் மற்றும் ஸ்ரீஸ்கந்தராசசெல்வம், செல்வறாஜி, ஸ்ரீராஜசெல்வி, விநாயகசெல்வம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01.2016) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மதியம் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிழுவானை ஒழுங்கை,
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சிவமங்களம் கமலேஸ்வரன்



நெல்லண்டை தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவமங்களம் கமலேஸ்வரன் நேற்று (29.01.2016) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய வேலாயுதம் - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களாகிய சின்னத்துரை - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும், கமலேஸ்வரனின் அன்பு மனைவியும், மங்களேஸ்வரன் (Virthusa pvt Ltd), பானுகோபன் (கல்வி அமைச்சு - வடமாகாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறீமதி (கொமர்சியல் வங்கி - வெள்ளவத்தை), நேசராஜினி (வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும்,யதுஷா, லிதுஷா, சர்லிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சண்முகலிங்கம், விஜயலட்சுமி,பரமகுரு, திருஞானசம்பந்தர், கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கமலாம்பிகை, நடராசா, கமலாதேவி, வசுமதி யோகரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை கோயிலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.15,எல்லை ஒழுங்கை,
நெல்லண்டை, தும்பளை,
பருத்தித்துறை.

தகவல்:
கணவர்
சி.கமலேஸ்வரன்

தொடர்பு:- 077 369 0568

(68553)
(11,15,17)

### திருமதி லூர்து பிலோமினா அந்தோனிசாமி



தோற்றம் 04 . 03 . 1933

மறைவு 20 . 01 . 2016

ஊர்காவற்றுறை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு. கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லூர்து பிலோமினா அந்தோனிசாமி 20.01.2016 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை - றோசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அந்தோனிசாமியின் அன்பு மனைவியும் பத்திமா. ஸ்ரனிஸ்லொஸ். வாசிங்டன். யஸ்ரின். அகஸ்ரா. றோசன். இயூஜின். எமன்சியன். டெல்வியன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இருதயதாசன். யோசப்பின்(பபி). பத்திமா. யோகராணி. இம்மனுவல். சியாமலி. எமல்சி. ஆன்சியா. சாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும் மலர். றோஸ்மேரி. காலஞ்சென்ற யோன். சந்தியாம்பிள்ளை. சறோசா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (31.01.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் ($B_3$ $F_{22}$ புளூமெண்டல் தொடர்மாடி கொட்டாஞ்சேனை. கொழும்பு) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 01.02.2016 திங்கட் கிழமை மாலை 4மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக பொரளை கனத்தை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

9, விதானையார் வீதி,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
தம்பி சந்தியாப்பிள்ளை

தொடர்பு: [illegible] 077 821 9362

### திருமதி இலட்சுமி நீலயினார்



மலர்வு
10.10.1921

உதிர்வு
28.01.2016

கரவெட்டி, புதுத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமி நீலயினார் 28.01.2016 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆழ்வார்ப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆழ்வார்ப்பிள்ளை நீலயினார் அவர்களின் அன்பு மனைவியும் சதாசிவம், ஆனந்தசிவம், சிவமலர் ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற சிவசோதிமலர், செல்வராணி, காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் மாமியும், ஷிவானி, நிலான்சிவராம், திருமதி யாழினி உதய ணன், ஸ்ரீராம் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் 31.01.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணிக்கு கல்கிசைமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3-5/3,42 ஆவது ஒழுங்கை,
கொழும்பு - 06.

(சி.28850)
(13.17.18)

தகவல்:
திரு.நி.ஆனந்தசிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் மாணிக்கம் நல்லபிள்ளை

தோற்றம் 09.04.1943 — மறைவு 01.01.2016

கடந்த 01.01.2016 இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் 29.01.2016 வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 31.01.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புது வீதி,
ஆறுகால் மடம்.

(8844)(15.17.18)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 19.05.1924 — இறைவன் அடியில் 09.02.2015



அமரர் திருமதி
**தங்கரத்தினம் கந்தையா**

அம்மா என்ற உறவுக்கு உயிர் கொடுத்த உத்தமியே!
அன்னையே எங்கள் அன்புத் தெய்வமே - நீங்கள்
இவ் அவனியை விட்டுப்பிரிந்து ஆண்டொன்று ஆனபோதும் ஆறவில்லை எம் துயரம்
நீங்காது உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்கின்றன!

அன்பெனும் நீருற்றி அல்லும் பகலும் அரவணைத்து அமுதூட்டி
அன்பும் பண்பும் அறிவும் தந்தெம்மை அகிலம் போற்ற வளர்த்த
எங்கள் அன்புத் தெய்வமே!
துன்பங்கள் தனக்கென்றும், சுகங்கள் தன் குடும்பத்துக்கென்றும்
அன்பைச் சொரிந்து வளர்த்தீர்களே - இவற்றை எல்லாம் எப்படி அம்மா மறப்பது? ஆனாலும்
நீங்கள் விதைத்துப்போன ஞாபக விதைகள் பெருவிருட்சமாகி எங்கள்
நினைவுகளில் நித்தம் கலந்திருக்கும்!

நீங்கள் எம்முடன் இருந்த காலங்கள் நம் குடும்பத்துக்கு என்றும் வசந்தகாலங்களே!
ஆயிரம் உறவுகள் இருந்தபோதும் உங்கள் அன்புக்கு இவை எல்லாம் ஈடாகுமா?
இன்னும் சிலகாலம் எங்களோடு இருப்பீர்கள் என்றிருந்தோம்
எல்லாம் கனவாகி கானல் நீராகிவிட்டதே?

பாசத்தோடு எந்நாளும் பார்த்த உங்கள் அன்பு முகம்
வீசும் காற்றோடு கலந்து என்றும் ஒளிவீசும்!
தெய்வத்துள் நீங்கள் நிறைந்து விட்டாலும் வையத்துள் வாழும் நாங்கள்
நித்தமும் உமை நினைத்தே வாழ்வோம்

ஆருயிர்த் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

சாரதா வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## வடக்கில்

தொடர்பிலான மீளாய்வு தற்போது நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஏற்கனவே சமுர்த்தி நிவாரணம் பெற்றுக் கொள்பவர்களிடமிருந்தும், புதிதாகச் சமுர்த்தி நிவாரணம் பெற்றுக் கொள்ள விரும்புபவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இந்த விண்ணப்பங்கள் சமுர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவையாளர் ஆகியோரினால் உறுதிப்படுத்தப்படும்.

இவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பங்கள், புள்ளி விபரத் திணைக்களத்தினால் கணினி மயப்படுத்தப்படவுள்ளன. அதன் பின்னர், வருமானச் செலவீடு கணிப்பீடு அடிப்படையில் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

தற்போது முன்னெடுக்கப்பட்ட சமுர்த்தி மீளாய்வின்போது, யாழ்.மாவட்டத்தில் 53 ஆயிரத்து 906 குடும்பங்கள் ஏற்கனவே சமுர்த்தி நிவாரணங்களைப் பெற்று வருகின்றன. புதிதாக 35 ஆயிரத்து 220 குடும்பங்கள் சமுர்த்தி நிவாரணம் பெறுவதற்கு விண்ணப் பித்துள்ளன. சமுர்த்தி பெற்று கொள்வதற்காக மொத்தமாக 89 ஆயிரத்து 126 குடும்பங்கள் விண்ண பித்துள்ள நிலையில், இது யாழ்.மாவட்ட சனத் தொகையின் 46.9 சதவீதமாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 11 ஆயிரத்து 734 குடும்பங்கள் ஏற்கனவே சமுர்த்தி நிவார ணங்களைப் பெற்று வருகின்றன. புதிதாக 12 ஆயிரத்து 500 குடும்பங்கள் விண் ணப்பித்துள்ளன. சமுர்த்தி பெற்றுக் கொள்வதற்காக மொத்தமாக 24 ஆயிரத்து 234 குடும்பங்கள் விண்ணப்பித்துள்ள நிலையில் இது மாவட்ட சனத்தொகையின் 40 சதவீதமாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 11 ஆயிரத்து 114 குடும்பங்கள் ஏற்கனவே சமுர்த்தி நிவாரணங்களைப் பெற்று வருகின்றன. புதிதாக 12 ஆயிரத்து 266 குடும்பங்கள் விண்ணப்பித்துள்ளன. சமுர்த்தி பெற்று கொள்வதற்காக மொத்தம் 23 ஆயிரத்து 380 குடும்பங்கள் விண்ணபித்துள்ள நிலையில் இது மாவட்ட சனத் தொகையின் 56 சதவீதமாகும்.

மன்னார் மாவட்டத்தில் 13 ஆயிரத்து 168 குடும்பங்கள் ஏற்கனவே சமுர்த்தி நிவாரணங்களைப் பெற்று வருகின்றன. புதிதாக 13 ஆயிரத்து 988 குடும்பங்கள் விண்ணப்பித்துள்ளன. சமுர்த்தி பெற்றுக் கொள்வதற்காக மொத்தம் 27 ஆயிரத்து 156 குடும்பங்கள் விண்ணப்பித்துள்ள நிலையில் இது மாவட்ட சனத்தொகையின் 61 சதவீதமாகும்.

வவுனியா மாவட்டத்தில் 12 ஆயிரத்து 9 குடும்பங்கள் ஏற்கனவே சமுர்த்தி நிவாரணங்களைப் பெற்று வருகின்றன. புதிதாக 18 ஆயிரத்து 603 குடும்பங்கள் விண்ணப்பித்துள்ளன. சமுர்த்தி பெற்றுக் கொள்வதற்காக மொத்தம் 30 ஆயிரத்து 612 குடும்பங்கள் விண்ணப்பித்துள்ள நிலையில் இது மாவட்ட சனத்தொகையின் 56 சதவீதமாகும்.

(த-5-21-11)

## எரிபொருள்

விலை மாற்றத்துக்கு ஏற்ப எரிபொருளின் விலையை நிர்ணயிர்ப்பதற்கான சூத்திரம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சரவைக் கூட்டம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றபோது, இந்த விடயம் ஆராயப்பட்டுள்ளது. இதன்போதே, இந்தத் திட்டத்தை கைவிடும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசு ஆட்சி அமைத்தபோது, இது போன்ற விலைச்சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அதன் மூலம் எதிர்பார்த்த பலன் கிட்டியிருக்கவில்லை. அத்துடன் எரிபொருளுக்கு விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்படுவதாயின், ஏனைய அத்தியாவசியப் பொருள்களுக்கும் அவ்வாறான ஒரு விலைச் சூத்திரம் அறிமுகப் படுத்தப்படவேண்டும் என்று அமைச்சர்கள் அமைச்சரவைக் கூட்டத்தின்போது வலியுறுத் தியுள்ளனர்.

மேலும் தற்போது சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை குறைந்துள்ள போதிலும் திடீரென்று அதன் விலை உயர்வதற்கான சாத்தியங்கள் உள்ளன. அவ்வாறான நிலையில் எரிபொருளுக்கான விலையைக் குறைப்பது நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி விடும் என்றும் அமைச்சர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனையடுத்து எரிபொருளுக்கான விலைச் சூத்திரம் உருவாக்கும் முயற்சி கைவிடப்பட்டுள்ளது. அத்துடன் எரிபொருளின் விலையையும் தற்போதைக்கு குறைப்பதில்லை என்று அரசு தீர்மானித்துள்ளது. (த-5)

## ஒருங்கிணைப்புக்

மின்சாரம், நீர்வழங்கல், வீதி, மீன்பிடி. போக்குவரத்து, நகர அபிவிருத்தி, பனை அபிவிருத்தி, தெங்கு அபிவிருத்தி, வீடமைப்பு, சுற்றுச்சூழல், இடர் முகாமைத்துவம், வாழ்வின் எழுச்சி, கிராம அபிவிருத்தி, சமூக சேவைகள், கூட்டுறவு, கைத்தொழில் மற்றும் வாழ்வாதாரம், மீள்குடியேற்றம், கண்ணிவெடி அகற்றல், சவால்களும் தேவைகளும் ஆகியன தொடர்பாக ஆராயப்பட இருந்தன.

இருப்பினும் இந்தக் கூட்டத்தில் விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை அபிவிருத்தி, சுகாதாரம் போன்றவை தொடர்பான பிரச்சினைகளும், அவற்றின் அபிவிருத்தி பற்றியும் ஆராயப்பட்டு ஏனையவை ஆராயப்படாமல் அது நிறைவடைந்தது.

நான் முக்கியமான ஒரு கூட்டத்துக்காக யாழ்ப்பாணம் செல்லவேண்டி உள்ளதால் இந்தக் கூட்டத்தை இத்துடன் முடித்துக் கொண்டு இதன் தொடர்ச்சி அடுத்த மாதம் 27 ஆம் திகதி இடம்பெறும் என்று தெரிவித்து முதலமைச்சர் கூட்டத்தை முடித்துக் கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் காணி, மீள்குடியேற்றங்கள் தொடர்பான விடயங்கள் ஆங்காங்கே தொடப்பட்டபோதும் முழுமையாக ஆராயப்படாமல் கூட்டம் முடிந்தது.

(த-21-ரி3)

## குருநாகலில்

700 மீற்றர் தொலைவிலுள்ள மற்றுமொரு வீட்டிலிருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது. சிறுமியின் சடலம் மீட்கப்பட்ட வீட்டின் உரிமையாளர் தலைமறைவாகியுள்ளார்.

சிறுமி நேற்றுமுன்தினம் காலை முதல் காணமற்போயுள்ள நிலையில் நேற்றுமுன்தினம் இரவு கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் கண்டுபிடிக்கப்பட்ட வீட்டின் முன்பகுதியில் இரத்தக்கறைகள் காணப்படுகின்றன, சடலம் நி[illegible] விரிப்பொன்றினால் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது என்றும் மாவத்தகம பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமி கொலைசெய்யப்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்று தெரிவித்த பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடைய 47 வயதுடைய பிரதான சந்தேகநபர் உட்பட மூன்று பேர் நேற்றுமுன்தினம் மாலையே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் கூறினர். (த-சி)

## திருமலை

அந்த வாகனம் கொழும்பு கொட்டாஞ்சேனையை சேர்ந்த ரீட் என்பவருக்குச் சொந்தமானது எனவும், அது களவாடப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

11 பேர் கடத்தப்பட்டு அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்தமையும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளதாகவும், 2015 ஏப்ரல் 22 ஆம் திகதி குறிப்பிட்ட நிலத்தின்கீழான சிறைச்சாலை மூடப்பட்டுவிட்டதாகவும் அவர்கள் மன்றில் கூறியுள்ளனர். (த-வ-5)

## சுதந்திர

மகிந்த அரசின் ஆட்சிக் காலத்தில், தேசிய கீதம் தமிழ் மொழியில் இசைக்கப்படுவதற்குக் கடுமையான எதிர்ப்பு வெளியிடப்பட்டது. இதனால் தேசிய வைபவங்களின் போது தேசிய கீதம் சிங்கள மொழியில் அல்லது இசையில் மாத்திரமே ஒலிக்கவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## பிரிட்டனின்

மேற்கொள்வது இதுவே முதற்தடவையாகும்.

இரு நாடுகளுக்கும் இடையில் நெருக்கமான பாதுகாப்பு உறவுகள் மலர்ந்துவருவதற்கான சிறந்த சமிக்ஞையாகவே இந்தக் கப்பலின் பயணம் அமைந்துள்ளது.

பிரிட்டனிலேயே தயாரிக்கப்பட்ட இந்த நாசகாரி வகை கப்பல் உலகின் மிகவும் அதிநவீன போர்க்கப்பல்களில் ஒன்று. இதில் அதிநவீன விமான எதிர்ப்பு ஏவுகணைகள் காணப்படுகின்றன என்று அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு நிறைவும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், ஜன. 30

கோண்டாவில் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டு நிறைவு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் கோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவீஈண வரதலக்ஷ்மி சோமசூரியசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக யாழ்.மேலதிக அரச அதிபர் பாலசிங்கம் செந்தில் நந்தனனும், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி மீனா செந்தில்நந்தனனும், சிறப்பு விருந்தி னர்களாக நல்லூர் உதவிப் பிரதேச செயலர் திருமதி சுபாசினி மதியழகனும், யாழ். மத்திய வங்கி சிரேஸ்ட முகாமையாளர் திருமதி ரஜனி விஜயலனும், கௌரவ விருந்தினர்களாகக் கோண்டாவில் மேற்கு ஜே-116 கிராம அலுவலர் திருமதி குணரஞ்சிதம் பிரதா பராஜனும், ஜே-116 பொருளாதார அபிவிருத்தி உத்தி யோகத்தர் திருமதி இராஜேஸ்வரி திருச்செல்வமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(கு)

## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்த இந்திய மீனவர் 3 பேருக்கு மறியல் நீடிக்கப் பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி ஒரு விசைப்படகுடன் வந்து காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் குறித்த மூவரையும் கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

அவர்கள் ஏற்கனவே விளக்கமறியலில் இருந்த நிலையில் அவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று முற்படுத் தப்பட்டனர். அதன்போதே அவர்களை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் எம்.றியால் நேற்றுப் பணித்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம், பகுதியினை சேர்ந்தவர்களான ராமையா பாலசுப்பிரமணியம் (வயது33), கலைஞன் சந்தோஸ்குமார் (வயது -28), சந்திரன் பார்த்தீபன் (வயது -19) ஆகியோரே விளக்கமறியலில் உள் ளவர்களாவர்.

(த-107)

# டிபெண்டர் வாகன உற்பத்தி நிறுத்தம்

கொழும்பு, ஜன.30

உலக பிரசித்திபெற்ற வாகன மாக கருதப்படும் டிபெண்டர் ரக வாகன உற்பத்திகள் நேற்று முதல் நிறுத்தப்பட்டுள்ளது என லான்ட் ரோவர் நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த ரக வாகனத்துக்குப் பதி லாக புதிய மாதிரியான வாக னத்தை அறிமுகம் செய்ய அந்த நிறுவனம் தீர்ம ானித்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரி விக்கின்றன.

டிபெண்டர் ரக வாகனம் கடந்த 68 வருடங்களுக்கு முன்னர் சந்தைக்கு வந்தமை குறிப் பிடத்தக்கது.

(த-வ)

## தொடர்ச்சி...

### சங்குப்பிட்டி

டைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மன் னார் நோக்கிச் சென்று கொண் டிருந்த பஸ்சும் உழவு இயந்திர மும் மோதுண்டதில் உழவு இயந்திரத்தில் இருந்து சென்ற வர் சாவடைந்துள்ளார்.

இதில் மட்டுவிலைச் சேர்ந்த எஸ்.கந்தசாமி என்பவரே உயிரி ழந்துள்ளார். அத்துடன் உழவு இயந்திரச் சாரதி காயம் அடைந் துள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோத னைக்காக சாவகச்சேரி வைத்தி யசாலையில் ஒப்படைக்கப்பட் டுள்ளது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(வ-9)

## மரண அறிவித்தல்கள்



### அல்பிறெட் யோசவ் சவரிமுத்து
(சில்லாலை)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும், கனடாவில் வாழ்ந்தவருமாகிய அல் பிறெட் யோசவ் 28.01.2016 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து-அக் னேஸ் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், றோசலின் பிளசத்தின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கண வரும், கனடாவில் வசிக்கும் ஷியாமினி, கிங்ஸ்லி, லான்ஸ்லி, சுபோதினி, வின்ஸ்லி, லெஸ்லி ஆகியோரின் அன்புத் தகப்பனும், காலஞ்சென்ற அலோசியஸ் மற் றும் யோண் ஒவ் ஆர்க் (கனடா) வுளோறிமன்ட் (கனடா) ஜெம்மா யஸ்மின் (ராணி யாழ்ப்பாணம்) அருட்பணி பீற்றர் பொன்கலன் ஜிற்றெந்திரன் **O.M.I** (கனடா) பற்றிமாராசா (சில்லாலை) எமில்போல் ஜெகநாதன் (பிரான்ஸ்) காலஞ்சென்ற அன்ரன் பிரான்சிஸ் மற்றும் இமெல்டா ஜொய்ஸிபோல் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் (01.02.2016) திங்கட் கிழமை கனடாவில் நடைபெறும்.

இவரது ஆன்ம சாந்திக்கான திருப்பலி 01.02.2016 காலை 6.00 மணிக்கு சில்லாலை கதிரைமாதா ஆலயத்தி லும், யாழ். அடைக்கல அன்னை ஆலயத்திலும் ஒப்புக் கொடுக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.**201/1, 3**ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

தகவல்: ராணி யோசவ் (சகோதரி)

## மரண அறிவித்தல்

### திருமதி திருவதனா வசந்தகுமாரன்

பிறப்பு: **7.10.1977**

இறப்பு: **26.01.2016**



சாவகச்சேரி கோவில் குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருவதனா வசந்த குமாரன் 26.01.2016 செவ்வாய்க் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் திருநாவுக்கரசு-சித்திராதேவி தம்பதியரின் அன்பு புதல்வியும், வசந்தகுமா ரனின் அன்பு மனைவியும், சஜீகரன், லக்ஸ்சுயந்தன், கேமலக்ஷன், டனுஸ் காலஞ்சென்ற சங்கீர்த்தன் மற்றும் தனக்சிகா ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற திலீப் குமார் மற்றும் திருக்குமார், திருவஜா(ஜேர்மன்), கஜேந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01. 2016) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியள வில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத் துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 328 7539** தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி இராசாம்பாள் இராமலிங்கம்
(திலகம்)

நல்லூர் சட்டநாதர் கோவிலடியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசாம்பாள் இராமலிங்கம் 29.01.2016 நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

முகவரி
இல.02
இராச வீதி,
நல்லூர்
யாழ்ப்பாணம்.

தகவல்
இ.சந்திரகுமார் (மகன்)
கிராமசேவை அலுவலர்
J/109 சங்கிலியன் தோப்பு.

## மரண அறிவித்தல்

### கந்தையா தனிப்புலிசிங்கமுதலியார்

பிறப்பு 29 . 09 . 1945



இறப்பு 28 . 01 . 2016


காரைநகர் பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தனிப்புலிசிங்கமுதலியார் கடந்த 28.01.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (சுதேச வைத்தியர் - பரியாரி குஞ்சர்) பாறுவதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மதியாபரணத்தின் (மலேசியா) அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இலட்சுமியின் பெறாமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் பாறுவதி தம்பதியினரின் மருமகனும் மகாலட்சுமி, நாகேஸ்வரி (சுவிஸ்), சிவனேஸ்வரி (ஆசிரியை - யாழ் இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை), கலியுகதேவி (லண்டன்), கலைச்செல்வி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகதாசன் (கண்ணன் - சுவிஸ்), கருணாநிதி (சிரேஸ்ட பொறியியலாளர் நீர்ப்பாசனத் திணைக்களம் - கிளிநொச்சி), சர்வானந்த சிவம் (கண்ணன் - லண்டன்), கருணாகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனா ரும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் விமலாதேவி, ஒப்பிலாமணி, காலஞ்சென்ற வர்களான இலங்கேஸ்வரன், கிருஸ்ணதாஸ் மற்றும் சித்திரா, சறோசாதேவி ஆகியோ ரின் அன்பு மைத்துனரும் பைரவி, பாரதி, மயூரன், பிரவீணன், கஜானன், கபிலன், தேனுஜன், கிருத்திஜன், கனிசா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**T.P: 077 437 4244** தகவல்: **குடும்பத்தினர்.**

## சின்னத்தம்பி பாலேந்திரநாதன்
(ஓய்வு பெற்ற கூட்டுறவு முகாமையாளர்)
யாழ்.ப.நோ கூட்டுறவுச் சங்கம் - யாழ்ப்பாணம்



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற கூட்டுறவு முகா மையாளர் சின்னத்தம்பி பாலேந்திரநாதன் நேற்று (29.01.2016) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கனகம்மா தம்பதியினரின் மூத்த தவப்புதல்வனும் காலஞ் சென்ற இராசா - ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் அருமை மருகனும் சர்வநாயகியின் ஆருயிர்க் கணவரும் பாலராணி, செல்வராசா, புவனேஸ்வரி (கனடா), குணபாலசிங்கம் (கனடா), சூரியகுமார் (கனடா), இராசமணி (கனடா) ஆகி யோரின் பாசமிகு சகோதரனும் மகேந்திரன், ரஞ்சி, மகா தேவன், ஜெசிகா, சிலோ, ஜெகதீஸ்வரன், தவமணி, புஸ்ப நாதன், இலங்காதேவி (கனடா), குணசேகரம், சிறீகாந் தன் காலஞ்சென்ற தங்கேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01. 2016) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தி யாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செட்டியாவளவு, சுன்னாகம். **T.P: 075 039 6517**

தகவல்: மனைவி பா.சர்வநாயகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## 19 வயதினருக்கான உலகக்கிண்ணம் இன்றைய ஆட்டங்கள்

19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உலகக்கிண்ணத் தொடர் பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது. இன்று நடைபெறும் ஆட்டங்களில் இலங்கை அணி ஆப்கானிஸ்தானை எதிர்க்கவுள்ளது.

ஏனைய ஆட்டங்களில் பாகிஸ்தானை எதிர்த்து கனடாவும், இந்தியாவை எதிர்த்து நியூசிலாந்தும், அயர்லாந்தை எதிர்த்து நேபாளமும் மோதவுள்ளன. ஆட்டங்கள் அனைத்தும் இலங்கை நேரப்படி காலை 8.30 மணிக்கு நடைபெறும். (ம)

## நியூசி. - பாக். இறுதி ஆட்டம்

நியூசிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான ஒருநாள் ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து வெற்றிபெற்றிருந்தது. இரண்டாவது ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டது. இதனால் நியூசிலாந்து கிண்ணத்தை இழக்கும் நிலையில் இருந்து தப்பியுள்ளது. குறைந்தபட்சம் தொடரை சமன்செய்ய வேண்டுமாயின் நாளைய ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாயம் பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ளது. (ம)



# மீண்டும் வீழ்ந்தது ஆஸி. கிண்ணம் இந்தியாவிடம்

இந்தியா -ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் இந்திய அணி 27 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இந்தியாவின் ஆரம்பம் முதலிரு பந்துப்பரிமாற்றத்தில் சிறப்பாக அமையவில்லை. அதேநேரம் இலக்குச்சரிவும் ஏற்படவில்லை. பந்துகள் பழக்கப்பட, தவான் - ரோகித் மிரட்டல் ஆரம்பமானது. சராசரி பந்துப்பரிமாற்றத்துக்கு 8.5 என்ற கணக்கில் சடுதியாக ஏற்றம் கண்டது, பத்துப்பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் இந்தியா 90-0. ஆனால் அடுத்த பந்துப்பரிமாற்றத்திலேயே இலக்குச்சரிவும் ஏற்பட்டது. 42 ஓட்டங்களுடன் தவான் ஆட்டமிழந்தார். கோலி -ரோகித் இணை நேற்றும் மிரட்டியது. அரைச்சதம் கடந்தார் கோலி. 60 ஓட்டங்களுடன் ரன்அவுட் ஆனார் ரோகித். 3 பந்துப்பரிமாற்றங்கள் எஞ்சியிருக்க களமிறங்கினார் டோனி. இறுதியில் வித்தை காட்டினார் கோலி. டோனியும் அவ்வப்பொழுது பவுண்டரிகளை விளாசினார். 14 ஓட்டங்களுடன் டோனி ஆட்டமிழக்க முடிவில் இந்தியா 184-3. பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக மக்ஸ்வெல், ரை இருவரும் தலா ஓர் இலக்கை கைப்பற்றினர்.

பதிலுக்கு களமிறங்கிய ஆஸ்திரேலியாவின் ஆரம்பம் இந்தியாவை விடச்சிறப்பாக அமைந்தது. அணித்தலைவர் பின்ஞ் அவ்வப்பொழுது சிக்சர்கள், பவுண்டரிகள் என அசத்திக்கொண்டிருந்தார். கிடைத்த ஓரிரு வாய்ப்புக்களையும் இந்தியா தவறவிட்டிருந்தது. இது மேலும் பின்னடைவாக அமைய 10 பந்துப்பரிமாற்றத்தில் இலக்குச் சரிவில்லாமல் 90 ஓட்டங்களை எட்டியது ஆஸ்திரேலியா. எஞ்சிய 10 பந்துப்பரிமாற்றங்களில் 95 ஓட்டங்கள் பெறப்பட வேண்டிய நிலைமை. மார்ஷை வெளியேற்றினார் அஸ்வின். வந்தவேகத்தில் ஆட்டமிழந்தார் லைன். யுவியின் பந்துப்பரிமாற்றத்தில் டோனியின் ஸ்டம்பிங்கில் ஒரே ஓட்டத்துடன் பவிலியனுக்குச் சென்றார் மக்ஸ்வெல். பின்ஞ் ரன்அவுட் ஆக ஆஸிக்கு மேலும் பேரிடி விழுந்தது. பின்வரிசை வீரர்களும் பெரிதாக இல்லை. 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடித்த போதிலும் ஆஸ்திரேலியாவால் 157 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. கோலி ஆட்டநாயகனானார். (ம)

## சானியா- கிங்கிஸ் இணை ஆஸித் தொடரிலும் சம்பியன்

ஆஸ்திரேலிய ரெனிஸ் தொடரின் மகளிர் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் சானியா மிர்சா, சுவிட்சர்லாந்தின் கிங்கிஸ் இணை கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

சர்வதேச அந்தஸ்து பெற்ற ரெனிஸ் தொடர்களில் நடப்பு வருடத்தின் முதலாவது தொடராக ஆஸ்திரேலியத் தொடர் மெல்போர்ண் நகரில் நடைபெற்றுவருகிறது. பெண்கள் இரட்டையர் பிரிவு இறுதியாட்டம் நேற்று நடைபெற்றது. இறுதியில் சானியா - கிங்கிஸ் இணையை எதிர்த்து அன்ட்ரியா - லூஸி இணை பலப்பரீட்சை நடத்தியது. இறுதி ஆட்டத்துக்கு உரிய பாணியில் முதல் செற் இழுபறிப்பட்டது. இருப்பினும், ஆதிக்கத்தை நிலைப்படுத்திய சானியா - கிங்கிஸ் இணை அந்தச் செற்றை 7:6 என்ற கணக்கில் போராடிக் கைப்பற்றியது. முதல் செற்றில் சவாலளித்த அன்ட்ரியா - லூஸி இணையால் இரண்டாம் செற்றில் அவ்வளவாகப் போராட முடியவில்லை. இதனால் 6:3 என்ற கணக்கில் இரண்டாம் செற் சானியா - கிங்கிஸ் வசமாக முடிவில் அந்த இணை ஆஸிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இது இவர்களின் தொடர்ச்சியான 36ஆவது வெற்றியாகும். (ம)



## பெப்ரவரியில் ஆசியாக்கிண்ணம்; அறிவிக்கப்பட்டது அட்டவணை

13ஆவது ஆசியாக்கிண்ணத் தொடர் பெப்ரவரி மாதம் பங்களாதேஷில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில் தொடருக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. பெப்ரவரி 27ஆம் திகதி இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டமும், மார்ச் முதலாம் திகதி இந்தியா-இலங்கை அணிகளுக்கு இடையிலான ஆட்டமும் நடைபெறவுள்ள நிலையில் இவை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

தொடரில் இலங்கை, இந்தியா. பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நான்கும் கட்டாய அணிகளாகவும் ஆப்கானிஸ்தான், ஓமான், கொங்கொங், ஐக்கிய அரபு இராச்சியம் என்பனவற்றில் ஒன்று தெரிவுச்சுற்றில் இருந்து இணையும் அணியாகவும் உள்ளன. இலங்கை நடப்புச் சம்பியன் அந்தஸ்துடன் களமிறங்குகிறது.

தொடரின் முதலாவது ஆட்டம் பெப்ரவரி 24 ஆம் திகதி இந்தியா-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ளது. 25ஆம் திகதி இலங்கை, தகுதிகாண் அணிகளும், 26ஆம் திகதி பங்களாதேஷ், தகுதிகாண் அணிகளும், 27ஆம் திகதி இந்தியா, பாகிஸ்தான் அணிகளும், 28ஆம் திகதி பங்களாதேஷ், இலங்கை அணிகளும், 29ஆம் திகதி பாகிஸ்தான், தகுதிகாண் அணிகளும், மார்ச் மாதம் முதலாம் திகதி இந்தியா, இலங்கை அணிகளும், 2ஆம் திகதி பங்களாதேஷ், பாகிஸ்தான் அணிகளும், 3ஆம் திகதி இந்தியா, தகுதிகாண் அணிகளும், 4ஆம் திகதி பாகிஸ்தான், இலங்கை அணிகளும் மோதவுள்ளன. மார்ச் 6ஆம் திகதி இறுதியாட்டம் நடைபெறவுள்ளது. (ம)



## தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்

*தற்பொழுது இது சிமித்தின் நிலைமை*

ஆஸ்திரேலியா களமிறங்கும் ஆட்டம் என்றாலே வார்த்தை மோதல்கள் தவறாது இடம்பெற்றிருக்கும். எதிரணிகளை வீழ்த்துவதற்கு துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்ற மூன்று துறைகளையும் தவிர வார்த்தை மோதல் என்ற மற்றொரு துறையை பயன் படுத்துவதில் அவர்கள் வல்லவர்கள். ஆனால் ஆஸ்திரேலிய வீரர்களையே வார்த்தை மோதல் வேண்டாம் என்று சொல்லும்படியாக வைத்துவிட்டார் கோலி.

இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான முதலாவது ரி-20 ஆட்டத்தில், சிமித் ஆட்ட மிழந்த பொழுது அவரைச் சீண்டும்படியாக “வாயை மூடிக் கொண்டு செல்” என்றவாறாக சைகை செய்தார் கோலி. கோக்லியின் இந்த செயலால் கிரிக்கெட் பிரபலங்கள் பலரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். சம்பவத்துடன் நேரடித் தொடர்புடைய சிமித், கோக்லியின் செயற்பாட்டுக்கு அதிருப்தி தெரிவித்துள்ளதுடன் ஆட்டமிழந்து செல்லுப்பொழுது வார்த்தை மோதல் வேண்டாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சிமித் மேலும் தெரிவிக்கையில் - கோக்லி நடந்து கொண்ட விதம் மிகவும் தவறானது, தேவையற்றது. களத்தில் ஆடும் போது ஓரிரு வார்த்தைகளை கேலியாக நகைச்சுவையாக பேசலாம் அதில் தவறில்லை, ஆனால் ஆட்டமிழந்து செல்லும் போது இப்படி வசையில் ஈடுபடுதல் கூடாது. என்றார்.

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரின்பொழுது இங்கிலாந்து வீரர் ரூட் ஆட்டமிழந்து செல்ல ஆஸியின் [illegible]" என்று குறிப்பிட்டிருந்தார். அக்காலத்தில் வோர்ணருக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்திருந்தார் சிமித். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணத்தைக் கைப்பற்றியது யங்ஹென்றிஸ் நியூட்டனின் தொடரில் விண்மீனை வீழ்த்தி



கரணவாய், ஜன. 30

நியூட்டன் வி.கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் விண்மீன் விளையாட்டுக்கழகத்தை 2:1 என்ற அடிப்படையில் வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம்.

நியூட்டன் வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதி ஆட்டத்தின் ஆரம்பம் விண்மீனுக்குச் சாதகமாகவே அமைந்திருந்தது. அந்த அணியின் டேமியன் 5ஆவது நிமிடத்திலேயே விண்மீனின் முதல் கோலைப் பதிவுசெய்திருந்தார். பரபரப்புக்கு மத்தியில் பத்தே நிமிடத்தில் பதிலடிகொடுத்தது யங்ஹென்றிஸ். தற்பொழுது வாய்ப்பு இரு அணிகளுக்கும் சீராக இருந்தது. இந்தநிலையில் முடிவடைந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியிலும் இறுதிக்குரிய விறுவிறுப்பு இருக்கத்தவறவில்லை. இரண்டாம் பாதியின் 13ஆவதுநிமிடத்தில்ஞானரூபன் ஒறிதொருகோலைப்பதிவுசெய்ய தற்பொழுது வாய்ப்பு யங்ஹென்றிஸின் பக்கம் பலமாகியது. விண்மீனின் அற்புதமான போராட்டம் மீண்டும் ஒருமுறை அரங்கேறியது. போராட முடிந்ததேதவிர கோல் கணக்கில் எவ்வித மாற்றத்தையம் ஏற்படுத்த இயலவில்லை. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் சம்பியனானது யங்ஹென்றிஸ். ஆட்ட நாயகனாக ஞானரூபனும், தொடராட்ட நாயகனாக விண் மீனின் டேமியனும் தெரிவானார்கள்.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் .கழகம், நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அவ்விடத்தை தனதாக்கியது. பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர்களான வே.சிவயோகன், கே.தர்மலிங்கம், சு.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-108)

## இலங்கை கால்பந்தாட்ட அணியில் சென்.மேரிஸ் வீரன் நிதர்சன் தெரிவு



யாழ்ப்பாணம், ஜன. 30

இந்தியாவில் நடைபெறவிருக்கும் 23வயதுக்கு உட்பட்ட அணியினருக்கான தெற்காசிய கால்பந்தாட்டத் தொடரில் பங்குபற்ற இருக்கும் இலங்கை அணியில் சென்.மேரிஸ் வீரன் நிதர்சன் தெரிவாகியுள்ளார்.

கடந்த மாதம் பதுளையில் இடம்பெற்ற தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் வடமாகாண அணி 3ஆம் இடத்தைப் பெற்றது. அந்த அணியில் அங்கம் வகித்து தனது திறமைகளை வெளிப்படுத்தி 4 கோல்களைப் பதிவு செய்திருந்தார் நிதர்சன். இதனால் இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தெரிவுக் குழுவினர் அவரை பயிற்சிக்கு அழைத்திருந்தனர். பயிற்சியின் போதும் நிதர்சன் தனது வாய்ப்புக்களைசரியாகப்பயன்படுத்தியமையால் தேசிய அணியில்உள்வாங்கப்பட்டுள்ளார். (ம-23)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன. 30

**கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்**

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1மணிக்கு வித்தியாலயத்தின் மைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலயத்தின் அதிபர் தவகீஸ்வரனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினரும் விளையாட்டுத்துறை இணைப்பாளருமான ஆனல்ட் கலந்துகொள்ளவுள்ளார்.

**வரணி மத்திய கல்லூரி**

வரணி மத்திய கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன. பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ரி.கிருபாகரன் கலந்துகொள்ளவுள்ளார்.

**தாமோதர வித்தியாலயம்**

கரணவாய் தாமோதர வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளன. வித்தியாலய அதிபர் ஆ.விமலராசா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (ம-122-108)

## வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான பதிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 30

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட நடுவர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்த யாழ். மாவட்ட நடுவர்கள் தமது பதிவுகளை சங்கத்தில் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நாளை காலை 10 மணிக்கு வருகை தருவதன் மூலம் நடுவர்கள் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும். ஏற்கனவே பதிவுசெய்த நடுவர்கள் தமது பதிவுகளை புதுப்பித்துக் கொள்ளவும் முடியுமென யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ம-23-108)

## மத்தியின் வீதியோட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறப்பு வீதியோட்ட நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் காலை 6.15 மணிக்கு கல்லூரி முன்றிலில் இருந்து ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வில், யாழ். வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண். தயாளன் விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (ம)

## வீரகத்திப்பிள்ளை ம.வியின் மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 30

தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு நடத்தப்படும் இருபாலாருக்குமான மரதனோட்ட நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. கல்லூரி அதிபர் இரா.ஸ்ரீநடராசா தலைமையில் இடம்பெறும் மரதனோட்டம் விநாயகர் ஆலய முன்றிலில் இருந்து ஆரம்பமாகி உடுப்பிட்டி வீதியூடாக வல்வெட்டித்துறைச் சந்தியை அடைந்து கடற்கரை வீதி வழியாக கல்லூரி முன்றிலில் நிறைவடையும். (ம-108)

## இன்றைய மோதல்கள்

**றோயல் வி.கழகத் தொடர்**

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 8 மணிக்கு மின்னொளியில் இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து சென்.அன்ரனிஸ் அணி மோதவுள்ளது.

**குணபாலசிங்கம் ஞாபகார்தத் தொடர்**

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் குணபாலசிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கஜன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்றுவருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சக்தி அணியை எதிர்த்து அம்மன் அணி மோதவுள்ளது.

**ஜொலிஸ்ரார் வி.கழகத் தொடர்**

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 5மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

**மன்னார் லீக்கின் தொடர்**

மன்னார் கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையிலான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தாழ்வுபாடு ஆயர் இராயப்பு ஜோசேப் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து ஜோசவ்வாஸ் நகர் ஐக்கிய அணி மோதவுள்ளது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19வயதினருக்கான உலகக்கிண்ணம் இங்கிலாந்து, சிம்பாப்வே வெற்றி

19வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான உலகக்கிண்ணத் தொடர் பங்களாதேஷில்நடைபெற்றுவருகின்றது. நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் இங்கிலாந்து, சிம்பாப்வே, நமீபியா அணிகள்வெற்றிபெற்றுள்ளன.

இங்கிலாந்துக்கும், மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் 221 ஓட்டங்களில் சகல இல்க்குகளையும் இழந்தது. இதனால் இங்கிலாந்து 61 ஓட்டங்களால் அபாரவெற்றி பெற்றது.

சிம்பாப்வே, பிஜி அணிகள் மோதிய ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பிஜி 81 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பதிலுக்கு களமிறங்கிய சிம்பாப்வே 18.5 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகள் இழந்து இலக்கை அடைந்தது.

ஸ்கொட்லாந்து, நமீபியா அணிகள் மோதிய ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து 159 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பதிலுக்கு களமிறங்கிய நமீபியா 26 பந்துப்பரிமாற்றங்களில் ஓர் இலக்கை இழந்து இலக்கை அடைந்தது. (ம)



ஆஸ்திரேலியத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெடரர் – ஜோகோவிக் இருவருக்கும் இடையிலான அரையிறுதி ஆட்டத்தை பார்க்கச் சென்ற கோக்லி, யுவராஜ். (ம)

# லாராவே சவால் தந்தவர் முரளி பகிரங்கக் கருத்து

தனது கிரிக்கெட் வாழ்க்கையில் சவாலாகத் திகழ்ந்த துடுப்பாட்ட வீரர் என்றால் அது மேற்கிந்தியத் தீவுகளின் லாராவே என்று இலங்கை அணியின் முன்னாள நட்சத்திர பந்துவீச்சாளர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.



ஓய்வுபெற்ற வீரர்கள் பங்குபற்றி விளையாடிவரும் தொடரொன்று ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறுகிறது. இந்தத் தொடருக்கான வீரர்களில் ஒருவராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே முரளி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் – எனது கிரிக்கெட் வாழ்க்கையில் ஏராளமான ஜாம்பவான்களுக்கு பந்து வீசியுள்ளேன். ஆனால், பிரையன் லாராவிற்குத்தான் பந்து வீசுவது மிகவும் கடினமாக இருந்தது. அவருக்கு எதிராக அதிக அளவு டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ளேன். சுழற்பந்தை துவம்சம் செய்வதில் லாரா மிகச்சிறந்தவர். ஆகவே, எனது பந்து வீச்சை அவர் சிறப்பாக எதிர்கொண்டு ஓட்டங்களைக் குவித்தார். எனக்கு மட்டுமல்ல உலக சுழற்பந்து வீச்சாளர்களுக்கெல்லாம் அவர் அச்சுறுத்தலாகத் திகழ்ந்தவர்.' என்றார். (ம)

# தோப்பு வாலிபர், இந்து இளைஞர் இறுதியில் மோதத் தகுதி பெற்றன

யாழ்ப்பாணம், ஜன. 30

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் தோப்பு வாலிபர், இந்து இளைஞர் அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றுள்ளன.

ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் நீர்வேலி ஐக்கிய அணியை எதிர்த்து தோப்பு வாலிபர் அணி மோதிக் கொண்டது. இதில் தோப்பு வாலிபர் அணி 3:0 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இரவு 8 மணிக்கு இடம்பெற்ற பிறிதொரு அரையிறுதியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து புத்தூர் கலைமகள் அணி மோதிக் கொண்டது. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3:1 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# செரீனா - கெர்பர் இறுதியில் இன்று



ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. செரீனாவை எதிர்த்து கெர்பர் பலப்பரீட்சை நடத்தவுள்ளார்.

செரீனாவின் ஆட்டம் அபாரமாக இருக்கிறது. இதனால் அவர் கிண்ணம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதல் முறையாக சர்வதேச அந்தஸ்து பெற்ற தொடரொன்றின் இறுதியாட்டத்தில் நுழைந்துள்ள கெர்பர் முதல் கிண்ணத்தை வெல்லும் ஆர்வத்தில் உள்ளார்.

34 வயதான செரீனா வில்லியம்ஸ் 21 சர்வதேச அந்தஸ்து பெற்ற கிண்ணங்களை வென்றுள்ளார். ஆஸ்திரேலியக் கிண்ணத்தை 6 தடவைகள் வென்றுள்ளார். இதன்படி அதிக சர்வதேச அந்தஸ்து பெற்ற கிண்ணங்களை வென்றவர்களின் பட்டியலில் அவர் மூன்றாவது இடத்திலுள்ளார். நாளைய ஆட்டத்திலும் அவர் வென்றால் 22 கிண்ணங்கள் வென்றுள்ள முன்னாள் வீராங்கனை ஸ்டெபி கிராப்பை சமன்செய்து இரண்டாவது இடத்துக்கு முன்னேறுவார். முதல் இடத்தில் மார்கரெட் கோர்ட் உள்ளார். இவர் 24 கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.